# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU

March '99



அரும்பின் ஆவல்



மஞ்சள் நீர்



மூளைக்கு தீ



பாதாள உலகு



கொலையில் கலை


ஊற்று 1

துளி 6

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - மார்ச் '99 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.

குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும்



பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.

*ஷீலா செனவிரத்ன*
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்*

**Shell GAS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...


கெஞ்சும் கொரில்லாக்கள் . . . . . .5
**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . .6
**அரசியல் அரங்கம்:**
தமிழனின் மூளைக்கு வைத்த தீ . .8
**தலைக்கு மவுசிருக்கும்**
**யாழ்ப்பாணம்** . . . . . . . . . . . . . . .12
**கவிதை:** இருண்மை . . . . . . . . . . .13
**பேட்டி: சித்தார்தன்**
புளொட்டின் கொலைகளுக்கு
நான் பொறுப்பல்ல . . . . . . . . . . . .14
**நிழல் உலகம** . . . . . . . . . . . . . . .18
**மணிக்கதை:** ஓயாத ஓசைகள் . . . . .21
**மினி பஸ்:**
சாண்ட்விச் பயணம் . . . . . . . . . . . . .22
**புரட்சி:**
ஆசியாவில் வெடித்த
செஞ்சீன புரட்சி . . . . . . . . . . . . . .26
மஞ்சள் நீர் . . . . . . . . . . . . . . . . .28
**ஸ்ரோபறி:**
ஆபிஸில் பணியாற்றும் போது . . . . .30
**குங்ஃபூ:**
ஜக்கிசான் . . . . . . . . . . . . . . . . . .31
உள்ளுறைந்த திறமையை
உணர்த்துகின்ற குரு . . . . . . . . . .32
**கவிதை:**
நீங்கள் தூவிய மலர்கள் . . . . . . . .35
கவனிப்புக்காக கையேந்துகிறோம் . .36
**சிறுகதை:**
கத்தியின்றி ரத்தமின்றி . . . . . . . . .40
**நோயற்ற:** குழந்தையின் காய்ச்சல். . 43
**சினிமா:**
காதலர் தினம். . . . . . . . . . . . . . .44
**கிரக சஞ்சாரம்** . . . . . . . . . . . . . .47
**நூல் அறிமுகம்** . . . . . . . . . . . . . .48



**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283**
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முட்களின் நடுவே ரோஜா போல் இன்னல்களின் நடுவே அமுது

'மலையக மகாத்மா' சில மறைந்து போன உண்மைகளை நிஜமாகவே வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. மலையகத் தமிழ்மக்களின் விமோசனத்துக்காகப் பாடுபட்ட உண்மையான தலைவர்களின் பங்களிப்பு புதிய பகட்டுக்காரர்களால் மறைத்து ஒழிக்கப் பட்டுவிட்டது. அத் தலைவர்களின் இதய சுத்தி அவர்கள் தமக்கென்று எதையும் சேர்த்து வைக்காது இம் மண்ணோடு மண்ணாகக் கலந்து போனதிலிருந்தே புலப்படுகிறது. ஆனால் தமது சொத்தை வைத்தே கட்சியை அடமானம் செய்து பதவிகளைப் பிடித்துக்கொண்டவர்களும் இன்று தலைவர்களாக உலவுகிறார்கள். பந்தத்துக்குப்பத்திரிகைநடத்தாதுசொந்தக்கருத்தில்மிளிரும்அமுதுதொடர்ந்து சுடரட்டும். **க. ராஜேந்திரன்** **மாத்தளை**

ஈழத்துச் சஞ்சிகை வரிசையில் "அமுது" தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையில், தமது ஆக்கங்களைத் தயார்படுத்துவதில் முனைப்புடன் முன்நிற்கின்றது. பக்கச் சார்பின்மையும், துணிச்சலும், வித்தியாசமான போக்கும் கட்டுரைகளில் கசிந்து நிற்கின்றன. நல்லதொருஎதிர்காலத்தைநோக்கித்தன்இலக்கைஅடைந்துகொள்ளும்என்பது திண்ணம் **.எம். கலைதாசன், கிண்ணியா.**

மாயமாய்மறைந்துதிரியும்வரதராஜப் பெருமாளைப் பூதக் கண்ணாடிக்குள் பிடித்து விட்டீர்கள் என்று ஆவலுடன் பேட்டியைப் படித்தேன். இறுதியில் 'யாவும் கற்பனை' என்று வாரப் பத்திரிகைச்சிறுகதைபாணியில்முடித்து எம்மை முட்டாளாக்கிப் போட்டீர்கள். இனிமேல்உங்கள்பேட்டிகளைப்படிப்பதானால் கடைசியைப் படித்து விட்டுத்தான் முதலிலிருந்துபடிப்பதெனத் தீர்மானித்துக் கொண்டேன். எனினும் பேட்டி கற்பனையானாலும் சுவாரசியம்.

**என். விந்தன் மட்டக்குளி**

அமுது 4ல் கிளின்டன் நரிப்பார்வை செய்தி என்னை மிகவும் கவர்ந்தது. கட்சிபேதம், மதபேதம், எதுவும் இலலாமல் வெளிவரும் அமுது மேலும் நல்ல ஆக்கங்களுடன் வெளிவருவதற்கு என் வாழ்த்துக்கள்.

**ஏ. எச். எம். ஜாபீழ் நொச்சியாகம.**

அமுது இதழ் 5ல் பிரசுரமாகியிருந்த "ஐயோ வேண்டாம்" என்ற கட்டுரை இன்றைய சிறுவர்களின்துர்ப்பாக்கியநிலையினைஎடுத்துக் காட்டியிருந்தது. தளிர்க்கும் கொழுந்துகள் முலையிலேயே கசக்கப்படுவது வேதனைக்குரியதே. போராலும்கெட்டபேராலும்சீரழியும் நாளைய தலைவர்கள் காப்பது யார்?

**கலைஞர் கே. நாகேந்திரன் புத்தளம்**

துளி 4 நன்று. உலகம் தொட்டு ஊர் அறிந்தோம். முன் அட்டையில் கவர்ச்சித் துளி. நீக்கவும், ஒற்றுமைசொல்லும் அமுது, பக்கச் சார்பு இல்லாமல் ஒற்றுமை பாலமாக விளங்கலாமே? தாய் வீடு இடம் தருமோ? தொண்டாவின் பேட்டி சுடா நாட்டு மக்களுக்கு சுய உணர்வு மருந்து. வளர்க பணி.

**ந. பிரணவன் யாழ்ப்பாணம்**

அமுதுதுளி-5படிப்பதற்கு, அறிவூட்டுவதற்கு, உலகை அறிவதற்கு எனப் பற்பல விஷயங்களுடன் சிறப்பாக அமைந்துள்ளது. "வரதரின் சூடான பேட்டி" பிரமாதம். மற்றும் "ஐயோ வேண்டாம்" பூத்துக் குலுங்கவேண்டிய மலர்கள் நசுக்கப்படுவதை நன்றாகச் சுட்டிக்காட்டியுள்ளது. முட்களின் நடுவே மலரும் அழகிய ரோஜா போன்று அமுதே நீ அனைத்து இன்னல்களின் மத்தியிலும் சிறப்பாக பிரகாசிக்கின்றாய்.

**டி.பி. தெரேஸா றத்தோட்ட**

பெப்ரவரி மாதம் மறைந்த மலையக காந்தி கே. ராஜலிங்கம் அவர்களை தேசியப் பத்திரிகைகளே நினைவுகூரத் தவறியிருக்க அமுது படங்களுடன் கட்டுரை வெளியிட்டுச் சிறப்பித்தது பாராட்டுக்குரியது. இக் கட்டுரையும் படங்களும் சரித்திர ஆவணமாகப் பாதுகாக்கப் பட வேண்டியவை. கட்டுரையின் சில தரவுகள் தவறு. 1) 1947ன் முதலாவது தேர்தலில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்றம் சென்றவர்கள் 9 அல்ல 7பேர். 2) நேருவின் இலங்கைவிஜயம் 12934ல் அல்ல1939ல். 1939ல்காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட போது திரு. தொண்டமான் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இருக்கவில்லை. 1940ல் தான் திரு. இராஜலிங்கத்தின் தூண்டுதலின் பேரில் இணைந்தார்.

**சேதுபதி முன்னாள் நாவலபிட்டிய நகரசபை உறுப்பினர்**

நான் ஒரு அமுதுப்பிரியன். நான் அனுப்பும் ஆக்கங்கள் கடிதங்கள் எதுவுமே பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாகவந்துசேர்வதில்லை போலும். எமது பகுதியில் அமுது கிடைப்பது அரிதாகவே உள்ளது.

**பரமேஸ்வரன்**
**மின்னேரியா.**

உங்கள் சஞ்சிகையின் அனைத்து ஆக்கங்களும் பிரமாதம் என்றே கூற வேண்டும். மேலும் தற்கால நிகழ்வுகள் தொடர்பான ஆக்கங்கள் சேர்த்துக்கொண்டால் அமுதின் அமுதம் இனிமை பயக்கும்.

**எஸ். கே. யேஷியமாலா**
**வத்தளை.**

மிகத் துணிச்சலாகவும் நேர்மையாகவும் தேர்தல் வன்செயல்களை அரசியல் அரங்கத்தில் மட்டுமின்றி நெற்றிக் கண்ணிலும் விமர்சித்திருந்த அமுது பாராட்டத்தக்கது. லேக்ஹவுஸ் வெளியீடொன்றில் இத்தகையமுளளந்தண்டு உடைய எழுத்தைக் காண்பதில் அதிசயமும் ஆனந்தமும் அடைகிறேன். நிட்சயம் இப் பணிக்கு இடர்கள் வரும் என எதிர்பார்க்கிறேன். இடர்கண்டு தளர்ந்து விடாது தொடர்க உனது நேர்(மை) கொண்ட நடை.

**சத்திய மூர்த்தி**
**புத்தளம்**

பளபளவர்ணத்தில்பாஷன்பாத்துப்பூரித்தேன். எனினும் அம்மங்கையர்படும் கஷ்ட்டம் அறிந்து வேதனையுறுகிறேன். எனினும் ஒரு கேள்வி, அப்படியான கஷ்ட்டத்துடன்தான் பாஷன் அழகிகளாக மிளிர வேண்டுமென்றால், ஏன் இதற்கு அவர்கள் முன்வருகிறார்கள்? சும்மா இருக்கலாமே. என்னவோ எம்மை மகிழ்விக்கிறார்களே. அதற்கு நன்றி. சாதாரணமாக எமக்கு எட்டாத இத்தகையவர்ணப்படங்களைஒவ்வொருமுறையும் தரலாமே?

**ஷர்மிலா மட்டக்களப்பு**

சினிமாப் பக்கம் கதகதப்பாக இருந்தாலும் அதற்குள் நிகழும் சொதசொதப்புகளையும் சுட்டிக் காட்டுகிறது. படங்களில் கவர்ச்சியைக் காட்டிவிட்டு எழுத்தில் அக்கறைக்குரிய விடயங்களைநைசாகப்புகுத்துகின்றநயம்சில்மிஸம் தேடும் எம்மவரை எளிதில் ஏமாற்றி விடுகிறது.

**ஜமீலா நர்ஸின் கிறான்பாஸ்**

உங்கள் ஆக்கங்கள்,
அபிப்பிராயங்களை
ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன
மாவத்தை, கொழும்பு 10.
க்கு அனுப்பிவையுங்கள்

அமுது அமிர்தமாக உள்ளது. என்றாலும் இன்னும் தித்திக்க வேண்டும். திசையெலாமது தித்திக்கும். வாழ்த்துக்கள். முக்காடிட்ட பெண்(மை) அமுதிடம் வருகிறாள். அரவணைத்துக் கொள்ளுங்கள்.

**திருமதி யூ. ஆர். புஹார் ஓனுகல.**

அமுது வாசித்துத்தான் மலையகத் தமிழ்மக்களுக்காக உழைத்த ஓர் உன்னதத் தலைவர் ராஜலிங்கம் பற்றிஅறிந்துகொண்டேன். எமதுவரலாற்றிலும் இலட்சியவாதிகள் இருந்துள்ளமை மகிழ்ச்சி தருகிறது. ஆனால் இத்தகைய தலைவர்கள் பற்றிய விடயங்கள் காலத்தால் மறக்கப்பட்டுப்போவதுதான் மனவருத்தம். தேடித் தெரிந்தெடுத்துத் தகவல் வழங்கும் அமுதுக்கு நன்றி. சினிமாக் காரர்களைப் போட்டு நிரப்பாமல் எமது மறைந்த பெருந்தலைவர் ஒருவரின் உருவப் படத்தை நடுப்பக்கத்தில் தந்து மலையகத் தமிழ் மக்களை அமுது கௌரவித்துள்ளது!

**எஸ். மலர்விழி ஹட்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

பிரதமஆசிரியர்:
எஸ். மனோரஞ்சன்
இணையாசிரியர்:
து. பாஸ்கரன்
கட்டுரையாசிரியர்:
சி. சிவகுமார்
ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
டி. பீ. எஸ். ஜெயராஜ்
எம். எச். எம். ஷம்ஸ்
எம். எஸ். எம். ஹிஷாம்
பிரதம வடிவமைப்பாளர்:
சி. முரளிதரன்
ஓவியர், கார்டூனிஸ்ட்:
இ. ப்ரகீத்
பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பீரேம்குமார்
விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அபய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
நவரட்ணம் சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன
அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒ.்ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

**Chief Editor:**
*S. Manoranjan*
**Associate Editor:**
*T. Baskaran*
**Features Editor:**
*S. Sivakumar*
**Other Editorial Staff:**
*D. B. S. Jeyaraj*
*M.H.M. Shums*
*M.S.M. Hisam*
**Chief Designer:**
*C. Muralitharan*
**Computer Graphic Artist/Cartoonist:**
*P.R.B.Ekkneligoda*
**Computer Page make-up:**
*Gerald S. Nadesan*
**Computer Typeset:**
*S.M. Premkumar*

# நல்லதோர் வீணை செய்தே....

உண்மை!
மனித குலத்தின் இன்றியமையாத ஒரு வார்த்தை. எம் எல்லோரது தேடலும் அதுதான். எல்லா முடிவுகளதும் அடிப்படையாக நம்பப்படுவதும் அதுதான். எல்லா நம்பிக்கைகளுக்கும் ஆதாரமாகக் கருதுவதும் அதைத்தான். எல்லா நடத்தைகளுக்கும் வியாக்கியானமாக அமைவதும் அதுதான். எம் எல்லா நியாயங்களுக்கும் மூலமெனக் கொள்வதும் அதையேதான்!

ஆனால், பல்வேறு வழிகளில் ஈட்டப்படும் எல்லாப் பூஜ்ஜியங்களும் கணிதத்தில் சமனல்லாதிருப்பதைப் போலவே, எல்லா உண்மைகளும் ஒன்றல்ல. சமமானவையும் அல்ல.

உண்மைகள் நிரந்தரமானவையுமல்ல. அவை மாறலாம். அவற்றின் பரிமாணங்களும் தார்ப்பரியங்களும் கூட மாறலாம். நேற்றைய உண்மை இன்று பொய்யாகலாம். இன்றையது நாளை....!

அதனால் உண்மைகள் பரிசுத்தமானவையுமல்ல. அவை சார்பு நிலை கொண்டவை. ஒரே உண்மை அகநிலையாகவும் புற நிலையாகவும் அவரவர் சார்பு நிலைக்கேற்ப வேறாகலாம். ஒருவிதத்தில் உண்மையாக அமைவது இன்னொரு விதத்தில் பொய்யாகவும் அமையலாம். ஒரு உண்மைக்கு மாற்றாக பொய்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இன்னோர் உண்மையும் இருக்கலாம்.

அதனால் எம் எல்லாக் கருத்துக்களும், எல்லா முடிவுகளும், எல்லா நடத்தைகளும், எல்லா நியாயங்களும் தீர்க்கமானவை என நாம் சாதிப்பது மடமையாகிறது. இன்னோர் உண்மைக்கு இடமில்லை என்ற வாதம் வறட்டுச் சித்தாந்தமாகிறது. எமது கோணத்தில் அமைந்த நியாயங்களையும் தீர்ப்புக்களையும் மட்டுமே சரியென வலியுறுத்துவது சர்வாதிகாரமாகிறது.



என்றும் மாறிச் செல்லும் இந்த நியதிகளின் மத்தியில் சர்வப் பொது விதி ஒன்று இல்லை. 'இனியொரு விதி செய்திடினும்' 'அதை எந்த நாளும் காத்திடல்' சாத்தியமில்லை. அதைச் சரியெனத் தீர்ப்பிட எம்மிடம் நியாயமில்லை. நாம் உண்மைக்கு விசுவாசமாக இருப்பதில் தப்பில்லை. அவை உண்மையாக இருக்கும் மட்டும்.

உண்மைகள் மாறும்போது நம்மையும் மாற்றிக்கொள்ளும் மனப்பக்குவம்தான் நமக்கு வேண்டும்.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான**

**"சென்றல்"**

**இடம்**

**வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்**

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

**வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்**

தலைமை அலுவலகம்

84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்

270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை

254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்

அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**

10814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஞ்சும் கொரில்லாக்கள்

எச்.எஸ். டின்



குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்.... என்று தொடரும் பாடல்வரியைக் கேட்கிறபோதாவது நமது மூதாதையர் பற்றிய நினைவு நமக்கு வரவேண்டும்தானே?

ஆம், சுமார் 250 இலட்சம் வருடங்களுக்கு முன் இவற்றிடமிருந்துதான் மனிதன் வேறுபட்டான் என்று சொல்லப்படும் ஒரு குரங்கினம் தான் கொரில்லாக்கள். குரங்கிலிருந்துதான் மனிதன் உருவானானென்றுடார்வினின் கூர்ப்புக் கொள்கை கூற, மனிதன் தனியானதொரு படைப்பு என்று பல்வேறு மதங்களும் எடுத்துரைக்க, எது எவ்வாறாயினும் மனிதனையொத்த மற்றொரு முலையூட்டிதான் கொரில்லாக்கள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

ஒரு கொரில்லாவைப் பார்த்ததுமே நமது நினைவலைகள் நம் மூதாதையர் பக்கம் தான் திரும்பும். அச்சொட்டாக மனிதரைப் போலவே காணப்படும் கொரில்லாக்கள் மனிதர்களைப் போன்று பாசமெனும் வேடம் பூணுபவையல்ல. அன்புத் தாயின் அரவணைப்புக்குள் சுமார் 4 வருடங்கள் பாசமும் நேசமும் ஊட்டப்பட்டு வளர்க்கப்படுபவை கொரில்லாக் குட்டிகள்.... பிறந்து 6 மாதங்களில் புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்துவிடும் நம் தாய்மார்களைப் போல் இல்லை அவை.

ஆம், 4 வருடங்களுக்கொரு முறைதான் கொரில்லாக்கள் குட்டி போடுகின்றன. அது வரைக்கும் பெற்ற குட்டியைப் பாதுகாப்பதுதான் தாயின் வேலை.

கம்பீரமான தோற்றத்துடன் எழுந்து நின்றுவிட்டதென்றால் ஆறடி ஆஜானுபாகுவாகத் தோன்றும் இவற்றின் நிறைசுமார் 500இறாத்தல். முழு அவயவங்களுமே மனிதனை ஒத்தவையாகக் காணப்படுகின்ற அதேநேரம் மனிதனைப் போல் மூன்று மடங்கு பாரத்தை தன் பலத்தால் தூக்கிவிடுகிறது.

போட்டி, பொறாமை, மற்றவனை அழிக்கத் தீட்டும் சதிகளெல்லாம் உருவத்தில் மனிதனை ஒத்த கொரில்லாக்களுக்கு கொஞ்சமேனும் தெரியாது. தனக்கு ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமே தன் சக்தியைப் பாவிக்கிறது. கொரில்லாவொன்று மனிதனைக் கொன்ற சம்பவம் 1910 இல் ஆபிரிக்காவில் மட்டுமே நிகழ்ந்துள்ளது.

ஆனால் தன் இனத்தையே தான் அழிக்கும் மனிதனோ கொரில்லாக்களையும் விட்டுவைப்பவனாக இல்லை. வதியும் இடம் தேடி அழியும் காடுகளுக்குள் தஞ்சம் புகுந்தும் என்ன பயன்.... மனிதன் இவற்றை விடுவதாக இல்லை. இவற்றுக்குக் கருணை காட்டும் மனித மனங்களும் அழிந்துகொண்டே செல்கிறது போலும்....

கொஞ்சம் கொஞ்சமாய் இப்பூவுலகை விட்டுப் பிரிந்துசெல்லும் கொரில்லாக்களில் சுமார் 4000 வரைதான் இப்போது எஞ்சியுள்ளதாம். இவற்றையாவது பாதுகாத்துக் கொள்ள காத்திரமான நடவடிக்கைகள் ஏதும் உலகளாவிய மட்டத்தில் எடுக்கப்படவில்லையானால், நம் மூதாதையர் என்று சொல்வதற்கும், நம்மைப் போன்றே செயல்பாடுகளையுடைய மற்றுமொரு பிராணியை நமது பிள்ளைகளுக்குக் கூட காட்டவும் முடியாது போய்விடும் ஆபத்து எதிர்நோக்கியுள்ளது. எதையும் அழிப்பதற்கு மட்டும் தெரிந்திருக்கும் மனிதன் சிந்திக்க வேண்டும். ●

## கொரில்லா பற்றிய ஒரு குட்டிக்கதை!

கொரில்லா குரங்குளை சேகரிக்கும் ஒருவர் ஆபிரிக்காவுக்குச் சென்றார். அங்கே ஒரு குடிசையில் உள்ள பெரிய வேட்டைக்காரனிடம் "ஒரு கொரில்லாவைப் பிடித்துக் கொடுக்க எவ்வளவு கேட்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் "எனக்கு ஐநூறு டொலர், என்னுடன் துப்பாக்கியுடன் வரும் அந்தக் குள்ளப் பையனுக்கு ஐநூறு டொலர், அடுத்து வேட்டைக்கு வரும் என் நாய்க்கு ஐநூறு டொலர் - ஆக ஆயிரத்து ஐநூறு டொலர் வேண்டும்" என்றான்.

எதற்கு நாய்க்கு ஐநூறு டொலர் தரவேண்டும் என்று அந்த கொரில்லா சேகரிப்பவர் குழம்பினார். சரி எப்படிப் பிரித்துக்கொண்டால் நமக்கென்ன என்று அவன் கேட்ட தொகைக்கு சம்மதித்தார்.

வேட்டைக்குச் சென்றார்கள்.

ஒரு மரத்தில் கொரில்லா உட்கார்ந்திருப்பதை உணர்ந்த வேட்டைக்காரன் மெதுவாக மரத்தின் மேலேறி கொரில்லாவின் பின் பக்கமாகச் சென்று அதன் தலையில் ஓங்கி அடித்தான். அது மயக்கமுற்றுக் கீழே விழுந்தது. அப்பொழுது அவனுடைய நாய் ஓடிவந்து அந்தக் கொரில்லாவின் கழுத்தை வாயால் இறுக்கிக் கௌவிப் பிடித்து, அதை நகரவிடாமல் செய்துவிட்டது. பிறகு மரத்திலிருந்து இறங்கி வந்த வேட்டைக்காரன் ஒரு கூண்டுக்குள் அந்த கொரில்லாவை அடைத்தான்.

இதைக் கண்டு அசந்து போனார் கொரில்லா சேகரிப்பவர். "ரொம்ப பிரமாதம். இதைப் போன்ற ஒரு டெக்னிக்கை நான் பார்த்ததே இல்லை. உனக்கும் அந்த நாய்க்கும் தலா ஐநூறு டொலர் தகும்" என்று சொல்லிவிட்டு, "அந்த துப்பாக்கி ஏந்திய குள்ளனுக்கு வேலையே இல்லையே" என்று கேட்டார்.

"அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். பிறகு உங்களுக்குப் புரியும்" என்றான் வேட்டைக்காரன்.

கொரில்லாவேட்டை தொடர்ந்துகாட்டில்நடந்து வந்தது. இவர்கள் எப்படிப் பிடிக்கிறார்கள் என்பதை ஒரு புத்திசாலி கொரில்லா பார்த்துக்கொண்டிருந்தது.

வேட்டைக்காரன் அந்த கொரில்லா இருந்த மரத்தில் ஏறி பின்னால் வந்து வழக்கம் போல கொரில்லாவின் தலையில் அடிக்கப் போகும்போது கொரில்லா முந்திக் கொண்டது. அவனைத் தலையில் அடித்துக் கீழே தள்ளியது.

கீழே விழும்போது வேட்டைக்காரன் துப்பாக்கி ஏந்திய குள்ளனைப் பார்த்துக் கத்தினான்: "அந்த நாயை உடனே சுடு"

- ஓஷோவின் குட்டிக் கதைகள் நூலிலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைய நிகழ்வுகளில் கவனத்தை ஈர்த்த ஒன்று மதகுருமாரின் புலிகளுடனான சந்திப்பு!

சந்திப்புகள் வரவேற்கப்படவேண்டியவை. ஏனெனில் அவை கருத்துப் பரிமாற்றத்துக்கும் புரிந்துணர்வுக்கும் விட்டுக் கொடுப்புக்கும் வழிகோலி, உடன்பாடுகளை ஈட்ட உதவும் பாலங்கள். அதனால் இந்த ரீதியான எந்தச் சிறு முயற்சியும் - அவற்றின் பலாபலன்களுக்கு அப்பால், முயற்சி என்ற அடிப்படையிலாவது - அக்கறைக்குரியவைதான்.

இராமபிரான் இலங்கைக்கு அமைத்த பாலத்துக்கு சிறு அணில் கூடத் தன் வாயால் குறுணிக்கல் கொடுத்து உதவியதாமெனக் காப்பியக் கதைகள் சொல்லும். எனவே சமாதான முயற்சியில் எந்த ஒரு சிறு விடயமும் போற்றப்பட வேண்டியதே.

வன்னி மக்களின் அவல வாழ்வைக் கண்டறியச் சென்ற மத குருமார்னளின் தூதுக்குழு, அவலத்தின் பின்னணியான யுத்தத்தை நிறுத்த வேண்டுமென உணர்ந்து யுத்தத்தின் ஒரு பக்கமான புலிகளைச் சந்தித்தனர். அதன் மறு பக்கம் அரசாங்கமே. மோதிக்கொண்டிருக்கும், புலிகள் - அரசாங்கம் என்ற இரு வலிய எதிரெதிர் சக்திகளை சமாதானத்தின் பக்கம் உந்தித் தள்ளுவதன் மூலம் மக்களின் அவல வாழ்வுக்கு விமோசனம் கிடைக்க வழி செய்யலாம் என்ற காருண்ய சிந்தையுடன் அவர்கள் முயற்சியில் இறங்கியது தவறல்ல.

ஆனால் யுத்தம் புரியும் இந்த இரு சக்திகளும் **"சமாதானத்தை விரும்புவன"** எனப் பறைசாற்றுவதன் மூலம் உண்மைச் சமாதானத்தைத் தோற்றுவிக்கலாம் என எண்ணுவதுதான் மாயை. இருவருமே சமாதானத்தைதான் விரும்புகிறார்களென்றால், இந்த யுத்தத்தை விரும்புவது யார்? சாதாரண மக்களா யுத்தத்தை விரும்புகிறார்கள்? யுத்தத்தைத் தொடர்ந்து செய்யும்படி இவ் இரு சாராரையும் தூண்டுவது இந்த நாட்டின் மக்களா என்ற கேள்விக்கு இல்லையென்ற பதிலைத்தான் எவருமே கூறுவர் என்பது தெளிவு. அப்படியாயின் யாருக்காக இந்த யுத்தம் நடக்கிறது? யுத்தம் புரியும் இரு சாராருக்கும் மக்களின் கண்களுக்குப் புலப்படாதவகையில் எத்தனையோ லாபங்கள் இருக்கின்றன என்பது தெளிவு.

இன்று யுத்தம் ஒரு வியாபாரம். இந்த யுத்தம் இருக்கும் வரை மக்களின் மீது எந்தச் சுமையையும் இவ் இரு சாராலும் தயக்கமின்றிச் சுமத்த முடியும். அவர்களின் அதிகாரம் மேலும் மேலும் பலம் பெறும். எனவே யுத்தம் முடிவுறுவதை அவர்கள் விரும்புவார்களா? யுத்தத்தின் மரணம் அவர்களின் இருப்பின் மரணம். எனவே மக்களின் நலனிலிருந்து இவர்கள் யுத்தத்தை நிறுத்த மாட்டார்கள் என்பதை சமாதானத் தூதுசெல்பவர்கள் புரிந்து கொள்வதுதான் மிக மிக அடிப்படையானது.

சமாதானத் தூதுசெல்பவர்கள் எப்போதும் சமாதானத்தை விரும்பும் மக்கள் என்னும் அத்திவாரத்தின் மேல் உறுதியாகக் காலூன்றி நிற்பவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் இவர்களின் பேச்சை யுத்தம் புரிந்துகொண்டிருப்பவர்கள் ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள். "மக்கள் சமாதானத்தை விரும்புவதால், மக்கள் யுத்தத்தை எதிர்ப்பதால் நீங்கள் இருசாராரும் யுத்தத்தை நிறுத்துங்கள்" என்பது தான் சமாதானத் தூதுவர்களின் கோஷமாக இருக்க

# சமாதான தூதுகளுக்கு அத்திவாரம் வேண்டும்




**நக்கீரன்**

வேண்டும். மாறாக யுத்தம் புரியும் இரு சாராரையும் சமாதானத்தை நேசிக்கின்ற நல்ல பிள்ளைகளாகக் காட்ட முனைவதால் சமாதானத் தூதுவர்கள் மக்களின் கேலிக்குரியவர்களாக ஆகிவிடுவார்கள். அதே வேளை இச் சமாதானத் தூதுவர்கள் மூலம் யுத்தம் புரியும் இரு சாராரும் தாங்கள் சமாதான விரும்பிகள் என்று உலகுக்குப் பறை சாற்றிவிட்டு, சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தம்மைத் தயார் படுத்திக் கொண்ட பின்பு மீண்டும் எவரிடமும் சொல்லாமலே முன்னரை விடக் கடுமையான யுத்தத்தை ஆரம்பிப்பார்கள். அப்பொழுது சமாதானத் தூதுவர்கள் தலையில் துண்டைப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

உண்மையில் யுத்த நிறுத்தத்திற்கும் சமாதானத்துக்கும் வழி பிறக்க வேண்டுமானால், "உளி மலையைச் செதுக்க வேண்டுமேயன்றி, மலை உளியைச் செதுக்கலாகாது". உளியாகப் புறப்பட்ட இம் மதகுருமார் தமது நற்பெயர்களையும் தூய எண்ணங்களையும் மட்டுமே ஆதாரமாகக் கொண்டவர்களாக இருந்ததார்களேயன்றி இந்த யுத்த மலையைச் செதுக்கும் நிபுணத்துவ வல்லமையை போதிய அளவு கொண்டிருக்கவில்லை. அதற்கு முக்கியமாகத் தேவைப்படும் ஆதார சக்தியான மக்கள் என்ற பெரும் தளம் இவர்களின் அடித்தளமாக உருவாக்கப்பட வேண்டும்.

ஆனாலும் சிங்கள சமூகத்தவரிடையே இன்று அதற்காக பல்வேறுபட்ட முயற்சிகளும் முன்னெடுப்புகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் வெளிப்பாடாகத்தான் குறிப்பாக 95ம் ஆண்டிற்கு பிறகு பல்வேறு சந்தர்ப்பங்களில் தென்னிலங்கையில் பல்வேறு தரப்பினர்களால் சமாதான ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் மிகப் பெருந்தொகையில் இல்லாவிட்டாலும் கூட கணிசமான அளவு சிங்கள மக்களும், சிங்கள சமூகத்தின் சிவில் தலைவர்களும் (Opinion Makers) கூட இனவாத, யுத்தவாத அரசியலுக்கு எதிராக துணிந்து வீதியில் இறங்குகிறார்கள்.

ஆனால் இவ் யுத்தத்தில் நீண்டகாலமாக நசிந்து அதன் பாதிப்பைப் பெருமளவு அனுபவித்துவரும் தமிழ் சமூகத்திலிருந்து இந்த யுத்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்னும் கோஷத்தை முன்னெடுக்கும் மக்கள் தலைவர்களும் (Opinion Makers) அமைப்புகளும் இல்லையென்று சொல்லுமளவு அருகிக் காணப்படுகின்றன. ஆனால் சமாதானம் அதிக அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுவது தமிழ் மக்களுக்கே.

துப்பாக்கிகள் தமிழ் மக்களை மௌனிகள் ஆக்கியிருப்பதை நாம் புரிந்து கொண்டாலும் தமிழ் சமூகத்திலுள்ள சமூகத் தலைவர்கள் மக்களை இந் நிலையிலிருந்து மீட்டெடுக்க முன்வர வேண்டும். அவ்வாறு இம் மௌனித்த நிலையிலிருந்து வெளிவந்து மக்கள் தங்கள் உண்மையான ஆதங்கத்தை வெளிப்படுத்தும் போதுதான் அவர்களைப் பலியாடாகக் கொண்டு நடாத்தப்படும் இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கான நிர்ப்பந்தம் உருவாகும். இவ்வாறு வெளிப்படுத்தப்படும் தமிழ், சிங்கள மக்களின் சமாதான எழுச்சிகள் ஒன்று கலந்து ஒரு பேரெழுச்சியாகவேண்டும். அவ்வெழுச்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சமாதான தூதுக் குழுக்களுக்குத்தான் இவ்விரு சாராருக்கும் அழுத்தம் கொடுக்கக் கூடிய பலமும் பக்குவமும் ஏற்படும். எனவே சமாதான தூதுக் குழுக்கள் தம்மைதார்மிகரீதியாக பலப்படுத்திக்கொள்வது எப்படி என்பது பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டும். அதே வேளை இச்சமாதான குழுக்களை எப்படி பலப்படுத்துவதென மக்களும் சிந்திக்க வேண்டும். •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழுத்தைப் பிடிப்பதற்கு அளவு ஒரு பொருட்டல்ல

**வாசலைத் தாண்டிய ஒரு கடிதம்**

ஆசிரியருக்கு,

அமுதே! உங்கள் துணிவை முதலில் மெச்சுகிறேன். இங்கு கிடைக்கும் பத்திரிகைகளெல்லாம் ஒருதலைப்பட்சமாக நடுநிலை என்று கூறிக்கொண்டு கொலைவெறிக்குத் தூபமிடுவதையே பார்த்து வருகிறோம். அமுதில் உண்மைகளை உள்ளபடி சொல்ல முடியும் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன்.....

எனக்கு இப்போது 32 வயது. செந்தமிழ் வாணன் என்னும் இந்தப் பெயரை எனது அப்பா எத்தகையதொரு தமிழ்ப் பற்றின் காரணமாக வைத்தாரோ தெரியவில்லை. இன்று எங்களுக்காகப் போராடுவதாகச் சொல்பவர்கள் ஒருநாள் வந்து கேட்டார்கள், 'உந்தப் பெயரை வைத்திருக்கும் நீர் எங்களிடமல்லவா வந்து சேர வேண்டும்... உந்தப் பேருக்கு உரித்தானவர்கள் நாங்கள் தானே..' என்று. எங்களுக்கு வாய்த்திருக்கும் புதிய ஆண்டைகளிடம் எங்கள் பேர், சிந்தனை உட்பட எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து விட்டு இருந்தால்தான் பிழைத்திருக்கலாம் என்பது நிலைமை......!

மாற்றுக் கருத்துகளை வைக்கும் அரசியலாளர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என்று நமது மக்களை நம்மவர்களே கொன்றழித்துக் கொண்டிருக்கும் சீரழிவு எதனால் ஏற்பட்டது. நான் பிறந்த இடமான இந்த கடைசித் தமிழ் அரசனின் இராசதானி நுழைவாயிலிலேயே எம்மவர் துவக்குகளால் எவ்வளவு இரத்தச் சிதறல்...! முடிவற்று நீளும் இவர்களது துரோகிகள் பட்டியலைப் பார்க்கும் பொழுது, இரண்டு லட்சம் உயிர் குடித்த கெமருச் தலைவரின் சாதனையை நம் 'தேசியத் தலைவர்' முறியடித்து விடுவாரோ என்று தோன்றுகிறது. 'விடுதலை தாகத்திற்காக' மட்டுமே அத்தனை உயிர்கள் முடிக்கப்படுவதை நாமும் அனுபவித்து முடித்த பிறகுதான் கவலைப்படவே ஆரம்பிப்போமா.....?

போராட்டம் தொடங்கியதிலிருந்து இன்று வரை தினசரி பத்திரிகைகளில் வந்த படுகொலைப் பட்டியல்களைப் பார்க்கும்பொழுது நம் 'மாவீரர்கள்' செய்ததே பெரும்பான்மையாய் இருப்பதை யாரிடம் சொல்லி அழ? தன்னைத் தவிர, மற்றவர்கள் யாரையும் துரோகிகளாய்ச் சொல்லிக் கொன்றழித்து விடுவதை தலையாட்டியபடியே ஏற்றுக் கொண்டிருக்கும் நம் சமூகத்தின் பெருமையை எப்படி அளவிடுவது...?

மண்மீட்பு நிதி என்ற பேரில் கட்டாய வசூலிப்புச் செய்த கோடிக்கணக்கான ரூபாய்களோடும், கடைசி நேரம் மக்களிடம் இருந்ததைப் பறித்துக் கொண்டும், அரசிடம் இருந்து மக்களுக்கு வந்த உலர் உணவுப் பொருட்களையும் மூட்டை முடிச்சாகக் கட்டிக்கொண்டு மக்களை அம்பேல் என்று நிர்க்கதியாக விட்டு விட்டு மாவீரர் குடும்பங்களுடன் ஓடிச் சென்றவர்கள்தான் பிறகும் மக்களைக் காக்கப் போராடுகிறார்களாம்! இப்படிப்பட்ட வரலாற்று நாயகர்கள் செய்வது சரி, மற்றவர்கள் செய்வது பிழை என்று வாதிடும் வெட்கங்...... தமிழர்களும் இருக்கிறார்களே...!

இந்தியப்படை வந்தபோது வாழை நட்டு தோரணங் கட்டி வாத்திய இசையுடன் அழைத்து வந்தவர்கள். மேடைகளில் வாழ்த்துப் பாடியவர்கள் இவர்கள். அப்போது அது சரி..... பிறகு இந்தியப் படையுடன் சண்டை பிடித்தார்கள். அப்போது அதுவும் சரி..... இலங்கை ராணுவ முகாம்களில் மீசை தாடிகளை வழித்துவிட்டு அவர்களது சீருடைகளையும் தரித்துக் கொண்டு ஏனைய தமிழ்க் கட்சிகளை வேட்டையாடினார்கள். அவர்கள் செய்தபோது அது சரி... பின்பு பெரும்பான்மை மக்கள் அகதிகளாகி.... வன்னி நிலைமையை சோமாலியா எதியோப்பியாவாக்கி இன்றைய சண்டையைத் தொடர்கின்ற போது இதுவும் சரி..... ஆனால், இவர்கள் வழிகாட்டியபடி மற்றவர்களும் செய்தபோது அவர்கள் துரோகிகளாய் கொல்லப்பட வேண்டியவர்களானார்கள்......

அரசு பொதுமக்களுக்கென வழங்கிய உதவிகளையெல்லாம் மாவீரர் குடும்பத்திற்கென மாற்றிக் கொண்டவர்களை யாரால் தட்டிக் கேட்க முடிந்தது? தட்டிக் கேட்டால் தட்டப்படுவார்கள்....! தமது அனுமதியின்றி கட்டுப்பாடான தமது இயக்கத்தினுள் அணுவும் அசையாது என்று கூறும் அண்ணல் தேசியத் தலைவர்தான் நடந்து முடிந்த நடந்துகொண்டிருக்கும் கொலைகளுக்கும் பொறுப்பு. இந்தியாவில் சோனியா காந்தி முதல் நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கானோருக்கு விதவைப் பட்டம் வழங்கிக் கௌரவித்த அண்ணலால் காட்டை விட்டு வெளியே வரமுடியவில்லை. மக்களிடம் வந்து ஒரு தேர்தலில் முகம் கொடுப்பதை நினைத்தும் பார்க்க முடியவில்லை......!

நான் எந்த அரசியல் கட்சியையும் சாராதவன். தனிநபர். வன்னிவரை சென்று வந்தவன். பார்வையாளன். எனது கருத்துக்களை உங்கள் சஞ்சிகை மூலம் மற்றவர்களும் பார்க்க வாய்ப்பு அமையுமா? நம்பிக்கையுடன் உள்ளேன்.

**பி. செந்தமிழ்வாணன்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அரங்கம்

1981

# யாழ்ப்பாண தேர்தல்....

தவறுகள், அவை சிறியதோ பெரியதோஉடனடியாகத்திருத்தப்பட வேண்டும். இல்லையேல் அவை மேலும் பல தவறுகளுக்கு வழிவகுத்துவிடும்.

அரசியல் வாதிகள் தம் அரசியல் தவறுகளை மூடி மறைக்க முனைவது ஏன்? தவிர்க்க இயலாதவாறு அவை வெளித் தெரிகின்றபோது தமது சாயம் வெளுத்து விடும் என்பதனாலேயே. அத்துடன் தமது எதிர்க்கட்சிக்காரர் அதனைத் தமக்கு எதிராகப் பிரசாரப்படுத்திவிடுவார் என்பதாலும். ஆனால் அவர்கள் அத்தவறுகளின் தார்ப்பரியத்தைப் பற்றியோ, அது சமூகத்தை எவ்வாறு பாழ்படுத்தப் போகிறது என்பதுபற்றியோ எண்ணுவதில்லை. தமது தவறை எதிர்க்கட்சியினர் விடும் இன்னொரு தவறு மூலம் சமப்படுத்தி விடலாம்என்றுகாத்திருக்கின்றனர். எதிராளிகளின் தவறுகளை தமது அரசியலின் மூலதனங்களாக்கவே சகல அரசியல் வாதிகளும் முயல்கிறார்களேயன்றி அவற்றை ஒழிக்கவல்ல.

அண்மையில் ரணில் தமது கட்சியினர் இழைத்த முக்கியமான ஒரு தவறை ஒத்துக்கொண்டார். 1981 யாழ். மாவட்ட சபைத் தேர்தலில் தாங்களும் தவறுகளைத் இழைத்திருந்தாக இப்போது அவர் ஒப்புக்கொள்கிறார். அதுவும் அது நடந்து 18 வருடங்களின் பின்பு.. ஆனால் அந்தச் சம்பவங்கள் தமிழ் மக்களுக்குத்தாம் இந்நாட்டில் உரிமைமறுக்கப்பட்ட அற்பர்களாகவேநடத்தப்படுகிறோம் என்றஎண்ணத்தை மிகக் குரூரமான முறையில் உணர்த்திய சம்பவங்களாகும்.

அதன் விளைவுகள் எத்தனையோ படிகள் கடந்து சென்று இன்று இந்நாட்டின் மொத்தச் சாபக்கேடான சிவில் யுத்தமாக உக்கிரமடைந்திருக்கின்ற நிலையில், ரணில் அச்சம்பவங்களின் வலியை தமிழ் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தில் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறார்.

18 ஆண்டுகளுக்குப் பிறகு, அன்று பிறக்காத குழந்தை கூட இன்று வாக்களிக்கும் வேட்பாளர்களாகவோ, அல்லது சர்வதேச சிறுவர் வயதெல்லையைத் தாண்டிய ஆயுதப் போராளியாகவோ மாறிவிடுகின்ற ஒரு நெடுங்காலங் கடந்து, இன்றுதான் ரணில் ஒத்துக்கொள்கிறார். அதுவும் பொதுமக்கள் முன்னிலையில் அல்லது முக்கியமாக தமிழ் மக்கள் முன்னிலையில் மன்னிப்பு கோருவதாக அன்றி, தமது சொந்த உட்கட்சிக் கூட்டமொன்றில்தான் இந்த ஒத்துக்கொள்ளலை செய்துள்ளார். இவ்வாறு உட்கட்சிக் கூட்டத்தில் ரணில் தெரிவித்த விடயத்தைத் தானே செய்திப் பத்திரிகைகளுக்கு எட்டவும் செய்துள்ளமை மூலம் தான் பொது மக்கள் முன்னிலையிலோ தமிழ் மக்கள் முன்னிலையிலோ பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலைமையைத் தவிர்க்கவே முனைகிறார்.


அவர் இதை உண்மையாக மக்கள் முன் ஒப்புக்கொள்ளும்பட்சத்தில் 1981யாழ்தேர்தல் மோசடியிலும் வன்செயல்களிலும் நேரடியாக ஈடுபட்ட **காமினி ஜயவிக்கிரம பெரேரா** (கடந்த வயம்ப தேர்தலிலும் முதலமைச்சர் வேட்பாளர்) போன்றவர்களைக் கட்சியிலிருந்து நீக்க முன்வரவேண்டிய நிர்ப்பந்தம் எழும். ஆனால் அவர் கூறும் இச் 'சுய விமர்சனம்' உண்மையானால் இவ்வாறு தேர்தல் மோசடிகளிலும் அரச பயங்கர வாதம் என்று வர்ணிக்கப்பட்ட அதிகார வன்முறைகளிலும் முன்னின்று ஈடுபட்ட **உடுகம பொல, முனி கோமஸ்** போன்ற பொலிஸ் அதிகாரிகளை அரவணைத்து அருகிலிருத்தியபடி மீண்டும் தம் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டதுஏன் என்றகேள்வி எழுகிறது. ஒருவர் சொல்வதல்ல செய்வது என்ன என்பதே அரசியலில் கவனிக்கப்பட வேண்டியது.

ஆனால் இங்கே வயம்ப தேர்தல் வன்முறைகள் பற்றிப் பெரிதாக பிரஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில்; அதோடு யு. என். பி.செய்த81யாழ்.தேர்தல்அனர்த்தங்களையும் போடி போக்காக கலந்துவிட்டால் ஒரே சாக்கடையில் கைகளைக் கழுவிக்கொண்டு தமது கைகளைச் சுத்தமானதாகக் காண்பிக்கலாம் என்பதே ரணிலின் கணிப்பாகப் புலப்படுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காமினி ஜயவிக்கிரம பெரேரா

அதனால் இதைக் 'காலம்கடந்த ஒப்புதல்' என்று சொல்வதை விட 'காலம் அறிந்து ஒப்புதல்' வழங்கும் ரணிலின் கபடத்தனமாகக் கொள்வது பொருந்தும்.

ஆனால் அன்று எரிந்து சாம்பராகிய யாழ் நூலகம் - ஆசியாவின் மிகப் பெரிய அறிவுக் களஞ்சியம் - இன்றுவரை அப்படியே, எந்தவொரு புனர் நடவடிக்கையுமின்றி அவல சாட்சியமாகி துயர் முகம் காட்டி நிற்கிறது. அன்று யு. என். பி. மூட்டிய தீ இன்றும் எம் ஒவ்வொருவரது உள்ளத்திலும் எரிந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தத் தீயின் வேகாரம் அவ்வளவு இலகுவில் அணைக்கப்பட முடியாதது. ஏனெனில் அது தமிழ் மக்களின் மூளைக்கு மூட்டப்பட்ட தீ.

ஆம், 1981 மே 31ம் திகதி, யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு தென்னிலங்கையிலிருந்து கொண்டு செல்லப் பட்ட அப்போதைய யு.என்.பி. அரசின் தொண்டர்கள் தூண்டிவிட்ட கலவரத்தின் பின்னணி.... முழு யாழ். நகருமே எரிந்தது என்றே சொல்லிவிடலாம். தேர்தல் கடமைகளில் ஈடுபடவென தேர்தல் அதிகாரியினால் நியமிக்கப்படவிருந்த சுமார் 250 பேருக்குப் பதிலாக அரசின் அடிவருடிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

தேர்தல் தினத்துக்கு சில தினங்களுக்கு முன்னரேயே குவிக்கப்பட்ட குண்டர்களின் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றவர்கள் யார்? வேறுயாருமில்லை. அப்போதையமகாவலி அபிவிருத்தி அமைச்சர் **காமினி திஸாநாயக்கா,** தொழில் விஞ்ஞான அமைச்சர் **சிரில் மெத்தியூ,** குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான **காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஜீ.எம். பிரேமச்சந்திர** ஆகியோர்தான்.


இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே முதன் முறையாக மிகக் கீழ்த்தரமான, காடைத்தனமான, கறைபடிந்த தேர்தலொன்றை நடாத்திக் காட்டிய சண்டியர்களும் அவர்களே - அதுவும் யாழ்ப்பாணத்தில். அன்றைய யூ.என்.பி. அரசாங்கத்தின் மிகப் பொறுப்பான பதவிகளிலிருந்த இந்த அமைச்சர்களும், எம்.பி.களும் ஒரு பெரும் செயற்திட்டத்தை நிறைவேற்றும் முனைப்புடன் நேரில் நின்று நடத்திய இத்தேர்தல் கொள்ளையாருக்கும் சிறியதவறாகப்புலப் படுமேயானால், இதையே சிறிதாக்கக் கூடிய மிகப்பெரும்சம்பவங்களையெல்லாம்யு.என்.பி. யினர் நடத்தியிருக்கிறார்கள் என்று மட்டுமே அதை நாம் அர்த்தப்படுத்த முடியும்.

அன்றுயு.என்.பி.க்குப்பெரும்சவாலாக அமைந்ததுதமிழர் விடுதலைக் கூட்டணி. எனவே, கலவரததுக்குத் தூபமிட்டு தமிழ் வாக்காளர்களின் தலையில்சேற்றைவீசஎத்தணித்ததுஅன்றைய ஐ.தே.கட்சி அரசாங்கம். சீருடை அணிந்த அரச காடையர்களும் பாதுகாப்புப் படையினருமே கலவரத்தின் கதாநாயகர்களாகத் திகழ்ந்ததனர். அவர்களுக்கு அதிகாரத்தில் இருந்த அரசியல் வாதிகளின் உற்சாகந்தான் அன்று கொடுக்கப்பட்டதேயொழிய தண்டனை கொடுக்கப்படவில்லை....

ஆம், அன்று நடந்தது என்ன ....?.

1981 மே 31ந் திகதி யாழ் நாச்சிமார் கோவிலடியில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் காவலில் இருந்த நான்கு பொலீசாருக்கு சூடு விழுந்ததைக் காரணமாக்கி அவ் இந்துக் கோவில் தீ வைத்துக் கொளுத்தப்பட, அருகிலிருந்த எத்தனையோ வீடுகளும் எரிந்து சாம்பராகின. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயமும் சுக்குநூறாக்கப்பட்டது.

அங்கிருந்த இரு இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடைகள், வீதிகள் எரிக்கப்பட்டு, அதனைப்பார்க்கவந்தஉரிமையாளர்கள் துரத்தப்பட்டனர்... அடிக்கப்பட்டனர்... துன்புறுத் தப்பட்டனர். அன்றைய இரவு முழு யாழ்ப்பாணமுமே கதறியது.... அதிர்ந்தது. யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய புத்தகசாலைகளான பூபாலசிங்கம், மக்மிலன் போன்றவையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை.



## தேர்தல் கொள்ளை நேரடி சாட்சியம்

### - ஒரு சிங்கள தேர்தல் அதிகாரி -

அப்பொழுது நான் குருநாகல் மாவட்டக் கச்சேரியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கு இரண்டு தினங்களுக்கு முன் மாலை 7.00 மணிக்கு எனது வீட்டிற்கு வாகனத்தில் வந்த சில அதிகாரிகள் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் கடமைக்காக நானும் யாழ்ப்பாணம் செல்ல வேண்டும் எனக் கூறினார்கள். அதையிட்டுநான் ஆச்சரியப்பட்டேன். இது ஜனாதிபதியவர்களின் உத்தரவு எனக் கூறிவிட்டு அவர்கள் சென்றனர்.

மறுநாள் காலை இரயில் மூலம் எமது பயணம் ஆரம்பமாகவிருந்தது. அதற்கு முன் காமினி ஜயவிக்கிரம பெரேராவினதும் ஜீ. எம். பிரேமச்சந்திரவினதும் தேர்தல் நடவடிக்கைகள் ஆலோசனைகள் எமக்கு வழங்கப்பட்டன.

இரயில் புறப்பட்டதும் அதில் இருந்தவர்களின் பெயர்களையும் வகிக்கும் பதவிகளையும் குறித்துக் கொண்டதோடு ஒருவருக்கு 50/- வீதம் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. இரயிலில் இருந்த ஒரு சிலருக்குத் தலைமை தாங்கியவர் குருநாகல் கச்சேரியில் மேலதிக உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றியதிஸாநாயக்கஎன்பவர். அவருக்குத் துணையாக குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 15 அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இரயிலில் அழைக்கப்பட்டுச் சென்றவர்களில் அரச அதிகாரிகல் அல்லாதவர்களும் இருந்தனர் என்பதை அவர்களது பேச்சுக்களிலிருந்தும், நடவடிக்கைகளிலிருந்தும், அணிந்திருந்தஉடைகளிலிருந்தும் விளங்கிக் கொள்ள முடிந்தது. இரவு ஏழு மணிக்கு யாழ்ப்பாணம் கொண்டு சென்ற எம்மை நேராக யாழ்ப்பாண இந்து மகா வித்தியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர்.

நாம் உட்சென்றதும் பாடசாலையின் முன் வாயில் மூடப்பட்டது. 1000 பேர் வரையில் இருந்த எமக்கு எதுவுமே புரியவில்லை. அத்தோடு விளங்கிக்கொள்ளவும் முடியவில்லை. எங்களையாழ்ப்பாணம் கொண்டுவர ஏற்பாடு செய்த அமைச்சர்களைக் கூட அங்கு காணமுடியவில்லை.

இரவு 9.00 மணியளவில் காமினி திஸாநாயக்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, எம். ஜீ. பிரேமச்சந்திர போன்றோர் வந்து சேர்ந்தனர். எங்கள் எல்லோரையும்பாடசாலையின் முற்றத்துக்குவரவழைத்துகாமினிதிசாநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லோல கல்லோலப்பட்டு ஓடிய யாழ். மக்கள் வீதி ஓரங்களிலேயே நிறுத்தி வைக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணமே இராணுவத்தினரின் கையில் கொடுக்கப்பட்டது.

அடுத்த நாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனாவின் பிரதிநிதிகளாக சிலர் வந்தனர். ஜனாதிபதியின் விஷேட வேண்டுகோளுக்கிணங்க காமினிதிஸாநாயக்க, பெஸ்டஸ் பெரேரா போன்றோரும் வந்தனர். நாசகாரச் செயல்களைக் கட்டுப்படுத்தவே இவர்கள் வந்ததாக எண்ணிய யாழ் மக்கள் ஏமாற்ற மடைந்தனர். முன்னையதிலும் மூர்க்கமான செயல்கள் இவர்களின் முன்னிலையில்தான் நிகழ்ந்தேறின.

இந்த நாட்டின் பொறுப்புள்ள தலைவர்கள் என்ற முறையில் அவர்கள் செய்தது என்ன.... இன்னும்.... இன்னும் கலவரத்தைத்


காமினி திசாநாயக்க

தூண்டிவிட்டார்கள். யாருக்கு எதிராக?. இந்த நாட்டின் நிரந்தரப் பிரஜைகள்... இரண்டாவது பெரும்பான்மைச் சமூகம்.. கல்வியில் தலை நிமிர்ந்து நிற்கும் சமூகம்.... இந்த நாடு உங்களுக்கு உரித்தில்லை என்றும், எம்முன்னே அடிபணிந்திருக்க வேண்டியவர்களே நீங்கள் எனவும் உணர்த்துவதுதான் இவ்வரசியல்வாதிகளின் மனக்கிடக்கையாக இருந்தது.

இந்த எண்ணத்தின் விஸ்வரூபம்... அன்று இரவே வியாபித்தது... ஆம், ஒவ்வொரு தமிழ் மகனதும் இதயம், யாழ். சமூகத்தின் அடையாளச் சின்னம் - யாழ். நூல் நிலையம் - இரண்டே மணித்தியாலத்தில் தீ மூட்டி எரிக்கப்பட்டுச் சுமார் 97,000அரியநூல்கள் சாம்பராயின. இத்தீ வெறும் நூல் நிலையம் ஒன்றுக்கு வைக்கப்பட்ட தீயல்ல. யு.என்.பி.யின் மூளைசாலிகளால் தமிழனின் மூளைக்குவைக்கப்பட்ட தீஎனக் கூறுவதே மிகப் பொருந்தும்.

இந்த மிலேச்சத்தனமான செயலைச் செய்த 'மக்கள் தலைவர்களின்' அடுத்த இலக்காக இருந்தது.... 23 வருடங்களாக அங்குலம் அங்குலமாக வளர்ந்து உருப்பெற்றிருந்த ஈழநாடு பத்திரிகைக் காரியாலம், அங்கிருந்த முக்கியதாஸ்தாவேஜ"கள், இயந்திரங்கள் அனைத்தும் இவர்களின் தீச்சுவாலைக்கு இரையாகின. இவர்கள் அத்தோடு நிற்கவில்லை. பொதுச் சந்தை, கடை வீதிகள், ஏன் பெட்டிக்கடைகள் கூட இவர்களால் விட்டு வைக்கப்படவில்லை.

இனப்பிரச்சினையை இந்த அளவுக்கு கூர்மையடைச் செய்யவும் தமிழ் மக்களுக்கு எக்காலத்திலும் சிங்கள அரசியல் தலைவர்கள் மீதுநம்பிக்கையீனங்களைத் தோற்றுவிக்கவும், ஐக்கியம் பற்றிய பேச்சுக்களில் ஐயப்பாடுகளைப் புரையோடச் செய்யவும் அடித்தளமிட்ட வரலாற்றுச் சம்பவங்களில் இந்நிகழ்வுகள் மறைக்கவோ மறுக்கவோ முடியாதவை யல்லவா.


பெஸ்டஸ் பெரேரா

மூன்றாவது நாள் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. கலவரங்களுக்குத் தென்பகுதி பொலிசாரே காரணம் எனக் கூறி அவர்களை உள்ளேயே இருக்கச் சொல்லிவிட்டு இராணுவத்திடம் யாழ் நகரத்தை ஒப்படைத்தார்கள். அதுகூடப் பெரிதாகப் பயன் தரவில்லை. மீண்டும் பொலிசார் சிவில் உடையில் மறைந்திருந்து தாக்கினர்.

நான்காவது நாளாகவும் தீ வைப்புக்கள் தொடர்ந்தன. பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கியிலிருந்து பாய்ந்த தோட்டாக்கள் எத்தனையோ அப்பாவி உயிர்களைப் பலியெடுத்தன. காங்கேசன்துறைப் பொலிசாரே காங்கேசன் துறைக் கடைகளுக்குத் தீ வைத்தனர்.

மேலே சொன்ன எல்லாச் சம்பவங்களுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போல் ஒரு பெரும் காரியத்தையும் அன்று இத்தலைவர்கள் செய்தார்கள். அதுதான் அன்றைய ஆட்சியாளர்களின் ஜனநாயகச் செயற்பாட்டின் உச்சகட்டம் என்று வர்ணித்தால்கூட மிகப்பொருத்தமாகஇருக்கும்.

இன்று 1981ம் ஆண்டு தேர்தலில் ஏதோ சிறு தவறுகள் நடந்தது போல, விரல் சூப்புகின்ற குழந்தைகூறுவதுபோல் கூறும்ரணிலுக்குஇந்த விடயங்கள் மறந்திருக்கநியாயமில்லை. அக்கைங்கரியம் யாதெனில் தேர்தல் அன்றுகாலை **"பயங்கரவாதிகளிடம் இருந்து காப்பாற்றுவதற்கு"** எனக் கூறி தமிழ் மக்களின் பாராளுமன்ற

இப்படிக் கூறினார். **"என்ன இடர் வந்தாலும் நாளை நாம் அபிவிருத்திச் சபைத் தேர்தலை வைத்தே தீருவோம். அதே போல் அத்தேர்தலில் ஐ. தே. க.வே வெல்லவும் வேண்டும். அது நிச்சயிக்கப்பட்டுவிட்டது. நாளை காலை வடக்கு கிழக்கில் சூரிய உதயம் பச்சை நிறமாகவே உதிக்கும். காலை 7.00 மணிக்கு வாக்களிக்கத் தொடங்குங்கள். 10.00 மணியளவில் வாக்குச் சீட்டு கொடுப்பதை நிறுத்திவிட்டு கியூவில் நிற்பவர்களை பாதுகாப்புப் படையினரைக் கொண்டு விரட்டிவிடுங்கள். மிகுதியாயிருக்கும் வாக்குச் சீட்டுக்களை புள்ளடியிட்டு பெட்டியில் போடுங்கள்"** என்றார்.

இதனைக் கேட்ட பலரும் ஒருவரது முகத்தைப் பார்த்துக் கொண்டனரே தவிர எதுவுமே எதிர்த்துப் பேச முடியவில்லை. ஒருவருக்கும் தைரியம் பிறக்கவுமில்லை. அதிலிருந்த ஒருவர் யாருக்குப் புள்ளடியிட வேண்டுமென்ற கேள்வியை எழுப்பினார். **"மிருகத்துக்கு அடியுங்கள்"** என காமினி திஸாநாயக்காவிடமிருந்து பதில் வந்தது. **"யாரும் இதைப்பற்றி பயப்படத் தேவையில்லை. தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன"** என்றும் கூறினார்.

அன்று இரவு யாழ்ப்பாணமெங்கும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இராணுவத்தினரைத் தவிர யாருமே அங்கு நடமாடவில்லை.

மறுநாள் காலை தேர்தல் அதிகாரிகளின் நியமனக் கடிதங்கள்என்ற பெயரில் ஒருகாகிதம் எங்கள் எல்லோர் கையில் கொடுக்கப்பட்டன. அதிலும் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. இருந்தும் எல்லாம் வெற்றியாகிவிட்டது என்ற நினைப்பில் காமினி திஸாநாயக்காவோடு ஏனையோரும் புறப்பட்டுச் சென்றனர்.

எது எப்படியிருப்பினும் நாம் இந்து வித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள கத்தோலிக்க வித்தியாலய வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும்போதுமாலை3.00மணியளவில் இருக்கும். அந்நேரத்திலும் பலர் வாக்களிப்பதற்காக கியூவில் நின்றனர்.

10.00 மணிக்கு வாக்களிப்பை முடித்துவிட வேண்டும் என்று காமினி திஸாநாயக்காவினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் சில இடங்களில் மட்டும் வாக்களிப்பு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. 4.00 மணிக்கு வாக்களிப்பு நிறுத்தப்பட்டது. அத்தேர்தலில் வாக்குகள் எண்ணும் வேலை அந்தந்த வாக்களிப்பு நிலையங்களிலேயே நடைபெறவிருந்ததால் வாக்குகள் எண்ணும் வேலைகள் ஆரம்பமாகின.

கத்தோலிக்க பாதிரியார் ஒருவரும் வாக்குகள் எண்ணப்படுவதை உன்னிப்பாக பின்னாலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தார். முடிவுகள் தெரிவிக்கும் வரையில் அவரும் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்.

இதற்கிடையில் மாலை6.00மணியளவில் ஏனையபல இடங்களில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குக் கடமைகளுக்காகச் சென்றவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். இரவு 8.00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. யாழ் இந்துப் பாடசாலையின் மேல் மாடியில் இருந்து பார்த்தால் எல்லாமே தெளிவாகத் தெரியும்.

யாழ் நகருக்கு வெளிப்பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களின் வாக்குப் பெட்டிகள் நேராக கச்சேரிக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்றாலும் பல வாகனங்கள் வாக்குப் பெட்டிகளை எடுத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நவரத்தினம், தர்மலிங்கம் ஆகியகூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களைத்தான் கைது செய்தார்கள்.

கைது செய்தது எந்தச் சட்டத்தின் மூலம்? எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தைக் கைது செய்ய முன் சபாநாயகரிடம் உத்தரவு கேட்கப்பட்டதா? இல்லை..."சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக அவர்களைக் கைது செய்தோம் என்று கூறினார்கள். யார் அவற்றைக் குலைத்தது? குலைத்தவர்கள் அரசாங்கத்தின் அதிகாரத்தில் பாதுகாப்பாக இருந்து கொண்டு பழியைத் தமிழ்த் தலைவர்கள் மீது சுமத்தி தண்டனையையும் வழங்குவதுதான் அவர்களின் ஜனநாயகம்.... யாழ்ப்பாணத்திலிருந்துஎந்தப்பத்திரிகைச்செய்தியும் வெளிவராதபடி செய்து பத்திரிகா தர்மத்தைக் கிழித்தவர்கள்தான்... இந்த முகமூடியணிந்த முகவர்கள்.


ஜீ. எம். பிரேமச்சந்திர

ஜூன் 4ந் திகதி நடந்தேறிய தேர்தலில் எல்லாவற்றுக்குமான தீர்ப்பை யாழ் மக்கள் அளித்திருந்தார்கள். கள்ள வாக்கை அள்ளிக் கொட்டச் சென்றவர்களாலும் தடுக்க முடியாதளவுக்கு மக்கள் கூட்டணிக்கு வாக்களித்தனர். இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் ஐ.தே.க. படுதோல்வியடைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி வென்றது.

**அன்றைய எதிர்க்கட்சிகள் நடந்த தவறுகளுக்கெதிராக ஒருமித்துகுரல் எழுப்பியும் எந்தப் பலனும் அளிக்கவில்லை. அதிகாரத்தால் ஒரு சமூகத்தை அடக்கி ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்ள அரசாங்கம் முனைந்ததற்கு ஆதாரமான சம்பவம் இது. அதே வேளை அது ஆட்சியாளரின் இனவாதக் காழ்ப்புணர்வையும் பறைசாற்றி முத்திரை பதித்த சம்பவமாகவும் அமைந்துவிட்டது.** இவ்வக்கிர இனவாத உணர்வின் உச்சகட்டமாக கட்டறுத்து விடப்பட்ட பேரினவாதப் பேரலைதான் 83 ஜூலைக் கலவரமாகும்.

தமக்குள் பல தசாப்தங்களாக கருக்கொண்டிருந்த இனவாதக் காழ்ப்புணர்வின் வெளிப்பாடான இந்த அருவருப்பான, 81ம் ஆண்டுத் தேர்தலின் கொள்ளைச் சம்பவத்தைத்தான், இன்று யாவும் தணிந்துவிட்டது என்ற எதிர்பார்ப்பில் ரணில் சர்வசாதாரணமான ஒன்று போல ஒப்புக் கொண்டிருக்கிறார். இச்சம்பவம் சாதாரணமானதுதானாஎன்பதுபொதுஅறிவுடன் சிந்திக்கத்தெரிந்த சகல தமிழ், சிங்கள மக்களுக்கும் புரியும்.

உண்மையில் ரணில் இச்சம்வத்திற்கு மன்னிபுக் கேட்பதானால் இதன் முழுத் தார்ப்பரியத்தையும் உணர்ந்தவராக, அதைச் சிறியதொரு தவறாகச் சிறுமைப்படுத்தாது, பரந்துபட்ட தமிழ்ச் சமூகத்துக்கே இழைத்த ஒரு வரலாற்று அநீதியென்பதை அங்கீகரித்து, அதற்காக இந்நாட்டின் முழுத் தமிழ்ச் சமுதாயத்திடமுமே அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்.


சிறில் மத்தியூ

அதுமட்டுமன்றி அவ்வாறு தவறிழைத்துவிட்டு **இன்னும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருப்பவர்களை ரணில் உடனடியாக நீக்க வேண்டும்.**

ஒரு தவறைச் செய்தவர்களைவிட அத்தவறை அற்பமாகக் காட்டிக் குற்றவாளிகளைக் காப்பாற்றுபவர்கள்தான் பாரிய குற்றவாளிகளாகிறார்கள். ஏனெனில் தவறு செய்தவன் அந்தத் தவறுக்கு மட்டுமே சொந்தக்காரன். ஆனால் தவறு செய்பவர்களைக் காப்பாற்றுபவன் இனிவரும் தவறுகளுக்கும் சொந்தக்காரனாகிறான். இதை ரணில் புரிந்துகொள்வது கடினமல்ல. இலங்கை இனவாத அரசியல் வரலாறு அவருக்கு மிகச் சிறந்த ஒரு பாடப் புத்தகம்.

ஒரு அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பான். ஆனால் ஒரு அரசியல் தலைவன் அடுத்த தலைமுறையைப் பற்றியே சிந்திப்பான். ரணில் அரசியல்வாதியாகவா அல்லது ஒரு அரசியல் தலைவராகவா உருவாக விரும்புகிறார்?

எம் நாட்டுக்கு இன்று அவசியப்படுவது அரசியல் தலைவர்கள் (*Statemen*) தான். அரசியல்வாதிகள் (*Polititions*) அல்ல. •

கொண்டு இந்து வித்தியாலயத்துக்கே வந்தன. வாக்குப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு சிலர் இந்துக் கல்லூரியின் கீழ் மாடிக்குள் சென்றனர். சில நிமிடத்தின் பின் மீண்டும் அப்பெட்டிகள் அதே வாகனங்களில் ஏற்றப்பட்டு யாழ். கச்சேரியை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது தெரிந்தது. இவ்வாக்குப் பெட்டிகள் ஏன் மீண்டும் இந்துக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டது என்பதை ஊகிப்பது அவ்வளவு சிரமமானதாக இருக்கவில்லை.

வாக்களிப்புநிலையங்களுக்குச் சென்றுதிரும்பியவர்கள் ஆங்காங்கே கூடி குழுக்களாகச் சேர்ந்து தத்தமது அபிப்பிராயங்களை பகிர்ந்து கொண்டிருந்தனர். வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்ற குருநாகல் அதிகாரிகள் வாக்குப் பெட்டிகளை கச்சேரிக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே பெட்டியை திறந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினருக்குபுள்ளடிஇடப்பட்ட வாக்குச் சீட்டுகளில் மேலும் புள்ளடிகளை அடித்து அவற்றை செல்லுபடியற்றதாக்கினார்கள் என்பதை அவர்களின் பேச்சிலிருந்தும், அவர்களோடு சென்ற அதிகாரிகள் மூலமும் அறியமுடிந்தது.

யாழ். புகையிரத நிலையத்துக்கு வந்தவர்கள் விசேஷ ரயில் மூலம் பயணமாகினர். திரும்பிவரும்போது எல்லா புகையிரத நிலையங்களிலும் 500இற்கு மேற்பட்டவர்கள் இறங்கி சிறு கடைகளினுள் பிரவேசித்து அங்கிருந்த பல பொருட்களையும் அள்ளிக்கொண்டனர். அவர்கள் திரும்பும் வரையில் இரயிலும் காத்து நிற்க வேண்டியேற்பட்டது.

கொள்ளையடிப்புக்கள் நிகழ்ந்ததனால் சென்றவர்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்தனர். வவுனியாவில் புகையிரத நிலையத்தில் பெட்டிக்கடை வைத்திருந்த ஒருவரினது சாமான்களையும் சூறையாடினர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் சென்ற அதிகாரிகள் தமது செலவுகள் சம்பந்தமான வவுச்சர்களைக் கொடுத்ததும் அது நிராகரிக்கப்பட்டது. தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைப்படி அவ்வாறு எவரும் செல்லவில்லை என்பதே குருநாகல் உதவி தேர்தல் ஆணையாளரின் முடிவாக இருந்தது.

அந்தக் கொடுப்பனவுகள் இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. இதற்கிடையில் சிலர், யாழ்ப்பாணம் செல்லும் வழியில் எமக்கு வழங்கப்பட்ட 50/- வையும் குருநாகல் மேலதிக உதவி அரசாங்க அதிபரிடமிருந்து அறவிட்டதாகவும் கூறப்படுகிறது.

காமினி திஸாநாயக்க, ஜயவிக்கிரம பெரேரா, எம். ஜீ. பிரேமச்சந்திர ஆகியோரின் தலைமையில் நடந்த இந்த வாக்குக் கொள்ளையை அன்று யாழ்ப்பாணம் சென்ற எல்லோரும் அறிவர். இதில் பலர் இன்று சேவையிலிருந்து விலகியிருக்கின்றனர். குருநாகல் மேலதிக உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திஸாநாயக்காவும் அதிலிருந்து விலகினார். இது சம்பந்தமாக விபரம் தெரிந்த இன்னும் உயிரோடிருக்கும் சகல அதிகாரிகளும் இந்தத் தேர்தல் கொள்ளைச் சம்பத்தைப் பற்றி உண்மைகளை வெளிக்கொணருவது பெரும் புண்ணியமாகும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைக்கு மவுசிருக்கும் யாழ்ப்பாணம்

**அண்மையில் இருந்து மீண்டும் யாழ்ப்பாணத்தில் மர்மக் கொலைகள் என்ற பெயரில் சிலரின் உயிர்கள் பறிக்கப்பட்டு வருகின்றன. இறுதியாக வந்த செய்தி நெல்லியடியில் காணாமல் போன ஒருவரின் தலை வெட்டப்பட்டு யாழ் கஸ்தூரியார் வீதியில் ஒரு காணுக்குள் வீசப்பட்டிருந்தது என்பது. இங்கே மர்மக் கொலைகள் என தமிழ் மக்கள் வர்ணிப்பது, அரசாங் கத்தாலும் புலிகளாலும் செய்யப் படாத, மாற்று இயக்கங்கள் செய்யும் கொலைகளையே. ஏனெனில் அரசாங்கம் செய்யும் கொலைகள் இனப் படு கொலை; புலிகள் செய்யும் படு கொலைகள் தமிழரின் விடுதலைக்கான துரோகி ஒழிப்பு நடவடிக்கை.**

இலங்கைத் தமிழர் மத்தியில் தான் தூய தமிழ் இன்னும் இருப்பதாக இந்தியத் தமிழரும் மெச்சுவர். அந்நியர் ஆட் சிக்காலங்களில் கூட அதிகம் பாதிப்புக் குள்ளாகாத இத் தமிழ் தற்போது ஓரிரு தசாப்த கால ஆயுதக் கலாசாரத்துள் வளர்ச்சி பெற்றுள்ளது.

**டம்பிங்!** அல்லது **டம்ப் பண்ணுதல்.** இது இன்று இலங்கை வட கிழக்குத் தமிழ்ச் சமூகத்தில் மிகச் சாதாரணமாகிவிட்ட ஒரு பொதுச் சொல். தமிழ் அகராதியில் இச்சொல் இல்லாவிட்டாலும் குறிப்பாக தமிழை உயிருக்கு மேலாய்ப் போற்றிக் காக்கும் வட. கிழக்கு மக்களுக்கு இதன் அர்த்தம் நன்குபுரியும். அதாவது ஒருவரை இரகசியமாகக் கொன்று புதைத்துவிடல் என்பதுதான் இதன் அர்த்தம். ஒருகாலத்தில் தமிழ் மக்களுக்காகப் போராடிய ஒரு இயக்கத்தில் **'டம்பிங் கந்தசாமி'** என்றும் ஒருவர் இருந்தார்.

அடுத்தது **மண்டையில் போடுதல்!** இது முன்னர் சொன்னதைவிட சற்று பயங்கரமானதும் **'உத்தியோகபூர்வமானதும்'** கூட. அதாவது விடுதலைப் போராட்டச் சட்டப்படி தமிழர்கள் மீது ஒரு குற்றஞ் சாட்டப்படும். அந்தக் குற்றத்தை அவர் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதன்பின் பகிரங்கமாக தெருச்சந்தியில் மக்கள் முன்னால் அவருடைய மண்டையில் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்படும். (அநேகமாக 12 அல்லது 13 வயதுச் சிறுவர்கள்தான் இதை நிறைவேற்றுவார்கள்.) இதைத்தான் மண்டையில் போடுதல் அல்லது மண்டையில் வைத்தல் என வட - கிழக்குத் தமிழர்கள் இன்று அழைக்கிறார்கள். இந்தச் சொல் சாதாரணமாக நாம் பாவிக்கும் மரணம், சாவு, கொலை என்ற அர்த்தங்களை விட அதற்கும் மேலான, எமது என்புமச்சையையும் குளிரவைக்கக் கூடிய ஒரு அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது.

இலங்கை வாழ் தமிழர்களுக்கிடையே சொல் வழி கேளாதவர்கள், அதிகமாகப் பேசுபவர்கள் - அதாவது ஜனநாயகம், மனித உரிமை, மனிதாபிமானம், கருத்துச் சுதந்திரம்.... - எனப் பேசுபவர்களுக்காகப் பிரத்தியேகமாகப் பாவிக்கும் ஒருவகைப் சொற் பதங்கள் இன்று புழக்கத்துக்கு வந்துள்ளன. **காதுக்குள் வைத்தல், வாய்க்குள் வைத்தல், பங்கருக்குள் போடுதல், போஸ்ட்டில் கட்டுதல்...** என்பனதான் அவை.

போராட்டம் என்பது எப்போதும் சமூகத்தை முன்னோக்கித்தான் கொண்டுசெல்லும் எனசில அரசியல் ஞானிகள் கூறியிருக்கிறார்கள். அது இதைப்பற்றித்தானோ என்று இப்போது எண்ணத் தோன்றுகிறது.




ஏனென்றால் போராட்டம் முன்னோக்கிப் போகின்ற போக்கில் மொழி அதை விட வேகமாக முன்னோக்கிப் போகிறது பாருங்களேன்.

பொட்டு வைப்பது தமிழ் மரபு. பொட்டு ஒரு மங்களகரமான அடையாளம். பொட்டு வைக்கும் பெண்களை தமிழ்ச் சமூகத்தில் ஆண்கள் விரும்புவர். ஏனெனில் அது எமது பண்பாடு. ஆனால் பொட்டு வைக்கும் அம்மான்களை (மாமா) தமிழ்ச் சமூகம் நேசிக்கத்தான் செய்கிறது. ஆனால் மாமா வைக்கும் பொட்டு மங்களகரமானதல்ல. அவமங்களகரமானது. ஒருவரின் நெற்றிப் பொட்டில் சரியாக பொட்டுக் குறி வைத்தது போல் தப்பாது சுடும் கலையைநன்றாகக் கற்றவர்தான் **பொட்டு அம்மான்.** அவரது அத்திறமையைப் பாராட்டிதான் அவருக்கு அப்பெயர் சூட்டப்பட்டதாகப் பெருமைப்படுகிறார்கள். ஒரு பிரதேசத்துக்குள் பொட்டன் வந்திருக்கிறான் என்றால் எதிரிகள் மட்டுமல்ல இயக்கத்துக்குள்ளே கூட வாலாட்டுபவர்களுக்கும் முதுகு குளிருமாம்.

குழுக்களிலே பல வகை உண்டு. எமது சமூகம் தனது விடுதலைக்கென்று எத்தனையோ குழுக்களை உருவாக்கியது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகப் பெயர் போன குழுவாக இருந்தது **மண்டையன் குழு**. இதென்ன புதுமையான பெயர்? தமக்கெதிரானவர்களை மண்டையிலே சுட்டு அவர்களை வீதியிலே வீசியெறிவதுதான் இக்குழுவின் பணி. அவ்வாறு சுடப்பட்டவர்களின் சடலத்துக்கருகில் ஒரு துண்டுக் காகிதத்தில் மண்டையோட்டுக் குறியும் மண்டையன் குழு என்ற வசனமும் காணப்படும். இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது இம்மண்டையன் குழுவின் ஆட்சி ஓஹோவென்றிருந்தது.

கடந்த காலத்தில் இவை போன்று பல்வேறு விதமான சங்கேத மொழி சொற் பதங்களும் புழக்கத்திற்கு வந்தன. **பச்சை போட்டில் ஏற்றுதல், B கேம்புக்கு அனுப்புதல், உழன்றியில் ஏற்றுதல்** என இன்னோரன்ன புதுவிதப் பதங்கள் அவை. இவ் எல்லாப் பதங்களுமே சித்தரவதையோடும் கொலைகளோடும் நெருங்கிய தொடர்புடையவை.

இவை எல்லாமே எமது சமூகத்தின் சொந்தக் கண்டுபிடிப்புக்கள்.

இப்பொழுது புதிதாகத் துவங்கியிருக்கும் இக் கழுத்து வெட்டுச் செயற்பாடு இன்னும் சில புதிய சொற் பதங்களை எம் சமூகத்துக்கு அறிமுகம் செய்யும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எம்மோடு முரண்படுபவர்களுக்கு **இருட்டடி** கொடுக்க வேண்டும் என சர்வ சாதாரணமாகச் சொல்லும் பாரம்பரியம் எமக்கு இருந்திருக்கிறது.

இறுதியாக...! மோசமான சிங்களப் பேரினவாத அரசியலுக்கெதிராக விடுதலை வேகத்தோடு புறப்பட்டு பல தடைகளைத் தாண்டி எமது சமூகத்தின் விடுதலைக் கதவுகளைத் திறப்பதற்கு சாவியோடு தயாராக நிற்கும் இத்தருணத்தில் எமது இவ்விடுதலை வரலாற்றை ஒரு முறை பல்கலைக்கழக கல்வியாளர்களினதும் மனோ தத்துவ நிபுணர்களினதும் ஆழமான ஆய்வொன்றுக்கு விடுவது நல்லது. (ஆனால் அது நிச்சயமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக இருக்க வேண்டும்). •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்மை



நீ இமைகளை மூடிக்கொண்டது போல்
இருள்.
முகத்தை மறைத்துக்கொள்ளவில்லை
நிலவின் ஒளியில் நனைந்தபடி
நடக்கிறேன்.

இந்த நதி எப்போதோ
உன்னைப் பார்த்திருக்க வேண்டும்
கொலுசொலி சிணுங்க
இடுப்பை நெளித்து அழகு காட்டி
தானும் நடக்கிறது....
சூழலையே சௌந்தர்யமாக்கிவிடும்
வசியச் சிரிப்போடு
நிலத்தில் கால் தங்காமல்
சுளித்துக் கொண்டோடவும்
தெரிந்திருக்கிறது இதற்கு.
மதர்த்த விழிக் கடலில்
நாணம் தேக்கி என்னைப்
பைத்தியமாக்கும் வித்தையை மட்டும்
அறியவில்லை இது.

காட்டு மலர்களிடமிருந்து
சுகந்தம் வாங்கி உலவும்
தென்றல் உன்னிடம்
கிளர்ச்சியூட்டும் சுவாசத்தைப்
பயில மறந்தது நன்று...

ஒளிரும் வானுக்கு
அவ்வப்போது வழிவிடும்
இந்த மரக்கிளைகளுக்கும்
இறுகிய மனம்,
உன் வீட்டு ஜன்னல் கதவுகளைப் போலவே.

பதில் தராத மௌனம்
அச்சமூட்டும் அமைதி
புதைந்திருக்கும் ரகசியங்கள்...நான்
விரும்பித் தேடும் வதை
வீட்டில் சோகம்!

தேன் சுரந்து ஆவல் தூண்டி
திசை மயக்கி அலையவிட
தலை கவிழ்ந்து காத்திருக்கும்
அழகின் கொடுக்கு!
உள்ளே என்னவென்று புரியாத
காடு.

– இடக்கரடக்கன்

தலை கவிழ்ந்து
விழி மூடிக்கொள்கிறேன்.

ஆனாலும்
என்னுள்ளே
இருள் இல்லை.

எங்கிருந்தோ...
பஞ்சுப் பொதியாய்
மிதந்து வந்து
பன்னீர் தூவும்
மேகக் கூட்டங்களைப்
போல...

கடல் அலைகளோடு
தவழ்ந்து வந்து
கால் தடவும்
மென் நுரைகள் போல...

பூக்களின் வாசத்தோடு
இதயம் தழுவிச் செல்லும்
இதமான ஒரு தென்றல்
காற்றைப்போல...
நின் நினைவுகள் என்னோடு
உறவாடியிருக்கையில்

துயிலும் போதும்
என்னுள்ளே
இருள் சூழ்வதில்லை.

ஆனாலும்,

காலம்
தன் தடங்களை நிஜமென்று
நம்பச் சொல்கிறது

உலர்ந்த சருகுகள்
இளமையைப் பார்த்து
நையாண்டி செய்கின்றன.

உண்மையைச் சொல்!

இறவாமை என்பது
காதலின் ஜீவனாம் எனச்
சொன்னவன் நீ

சொற்களை மட்டுமே
மாங்கல்யமாய்த் தந்துவிட்டு
மறைந்து போன
உன் நிழலைத் தன்னும்
ஏந்திவைக்க மறந்துவிட்டது
என் வீட்டு முற்றம்

என்று வருவாய்?

- பிரியதர்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "புளொட" இன் கொலைகளுக்கு நான் பொறுப்பல்ல

## அமுதுக்கு பிரத்தியேக பேட்டி
## சித்தார்த்தன்

சந்திப்பு: பாஸ்கரன்

**கேள்வி:** வரராஜப்பெருமாளின் வருகை ஏதும் பயனளிக்குமா?

**சித்தார்த்தன்:** பயனளிக்குமானால் நல்லது. தமிழ்மக்களுக்குநல்லதுஎதுவும்நடந்தால்நாம் நிச்சயம் வரவேற்போம். ஆனால் அவரால் புதிதாக என்னத்தைச் செய்ய முடியுமென்று தெரியவில்லை. ஆகக்குறைந்தது வடக்கு கிழக்கு மாகாண சபையையாயினும் இயங்க வைத்தால் நல்லது.

**கேள்வி:** ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வட- கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்த உகந்த சூழ்நிலை இல்லையென்கிறார்களே?

**சித்தார்த்தன்:** டெக்னிக்கலாக அவர்களது வாதம் சரி. ஆனால் பிரக்டிக்கலாக சரிவரக் கூடியதா? இன்றைய நிலைமையில் இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் சரிவருமென்று இன்னும் எவ்வளவுகாலம் காத்திருப்பது? அதைவிட இருப்பதையாவது இப்போதைக்கு அமுலுக்குக் கொண்டுவந்தால் மக்களுக்கு ஓரளவாவது பணியாற்றக் கூடியதாக இருக்குமல்லவா?

**கேள்வி:** ஆனால் உங்களால் வடக்கில் உள்ளூராட்சி சபைகளையே இயக்க முடியாமல் தானே இருக்கிறது?

**சித்தார்த்தன்:** யார் சொன்னது? அங்கு உள்ளூராட்சி வேலைகள் நடந்து கொண்டுதானே இருக்கின்றன. ஈ.பி.டி.பி., நாங்கள் எல்லோரும் அங்கங்கே எங்கள் எங்கள் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறோம். யாழ். மாநகர சபையில்தான் மேயரில்லாத பிரச்சினை. ஆனாலும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுதான் வருகின்றன. அங்கு நாம் எதிர்க் கட்சியாக இருந்தாலும், வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஒன்றுபட்டுத்தான் செயற்படுகிறோம்.

**கேள்வி:** மேயர் ஏன் இல்லை?

**சித்தார்த்தன்:** அது கூட்டணியின் உட்கட்சி விடயம். அச்சம்தான் காரணமென்று சொல்வதற்கில்லை. இந்தத் தேர்தலுக்குப் போட்டியிட முடிவெடுத்தபோதே, எதிர்ப்புச் சவாலை எதிர்பார்த்துத்தான் அவர்கள் போட்டியில் இறங்கியிருக்க வேண்டும். புலிகள் எதிர்ப்பார்களென்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த விடயம். தம்மைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு பிரதிநிதித்துவம் உருவாவதை புலிகள் விரும்ப மாட்டார்கள் என்பது தெரிந்ததே. ஆனால் இதே சவாலை அவர்கள் பாராளுமன்றப் பதவிகளிலும் எதிர்நோக்கத் தானே செய்கிறார்கள். தங்கத்துரை புலிகளால் கொல்லப்பட்டதும் சம்பந்தன் அந்தப் பதவியை எடுக்க எந்தத் தயக்கமும் காட்டவில்லையே. மேயர் பதவியை மட்டும் புலிகளின் அச்சத்தால் நிரப்பாமல் விடுவதாகக் கூறுவது அர்த்தமற்றது.

**கேள்வி:** புலிகள் இவற்றை எதிர்ப்பது ஏன்?

**சித்தார்த்தன்:** தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்கள்தான் என்று உலகத்திற்கு முழுக்க முழுக்க நிரூபிக்க வேண்டுமென்பது தான் அவர்களின் நோக்கம். மற்றபடி அங்கு தாங்கள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று உரிமை கொண்டாட நினைக்கிறார்கள். ஜனநாயக வழிக்கு வந்த கட்சிகளுக்கு இப்படியான பிரதிநிதித்துவங்கள் இல்லாவிட்டால் *They are nowhere, and nobody*-பொருட்டில்லாதவர்கள் ஆக்கப்பட்டுவிடுவார்கள். இதை உருவாக்கத்தான் அவர்கள் இச்சபைகள் இயங்குவதைக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டணி புலிகளது எண்ணம் புரியாததுபோல் காட்டுவது அர்த்தமற்றது. ஏனென்றால் போராட்டம் ஒருபுறமிருக்க நாளாந்த மனிதனின் நடவடிக்கைகள் நடந்து கொண்டு தானே இருக்க வேண்டும். மற்றப்படி மேயரைப் போடுவதும் போடாதிருப்பதும் அவர்களது உட்கட்சி முடிவு. நாம் தலைப்போடுவதற்கில்லை.



**கேள்வி:** புலிகள் தமது நிர்வாகத்தை எதிர்ப்பது, மக்களே எதிர்ப்பதாக ஆகிவிடுமென அஞ்சுகிறார்களா?

**சித்தார்த்தன்:** அப்படி அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது எவ்வளவுக்குச் சரி? இந்த உள்ளூராட்சி சபைகளில் நாங்கள் போட்டியிடும்போது பலர் 'வேண்டாம், மக்கள் எதிர்க்கினம், மக்கள் எதிர்க்கினம்' என்றார்கள். ஆனால் என்ன நடந்தது? மொத்தம் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் வாக்களிச்சிருக்கினம். யாழ்ப்பாணத்தில் அப்போதிருந்த சனத்தொகையே ஐந்து லட்சம் சொச்சம்தான். இது தலைக் கணக்கெடுப்பு. அப்படியானால் வாக்காளர்கள் அதன் அரைவாசியென நியாயபூர்வமாகக் கருதலாம். அது சுமார் இரண்டரை லட்சமாக இருந்திருக்கும். அதில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் வாக்குகள் விழுந்திருக்கிறதென்றால் 40 முதல் 50 வீத வாக்காளர்கள் வாக்களித்திருக்கிறார்கள். எப்படி மக்கள் எதிர்க்கினம் என்று கூறலாம்? உண்மையில் இந்த உள்ளூராட்சி சபைகளில் மக்களைப் பொறுத்தவரையில் புலி ஆள வேண்டும், புளொட் ஆள வேண்டும், கூட்டணி ஆள வேண்டுமென்பதல்ல தேவை. தங்களுக்கு நாளாந்தப் பிரச்சினைகளைப் பார்க்கக்கூடிய நிர்வாகத்தை நடத்துவதற்கு யாராவது வேண்டும். கூட்டணியினர் பிழைவிடுவது என்னவென்றால், மக்கள் புலிகளோடுதான் நிற்கிறார்கள் என்பதல்ல, அவர்கள் தங்களது பிரச்சினைகளை யார் முன்னெடுக்கிறார்களென்பதைத்தான் பார்க்கிறார்கள். புலிகள் செய்யும் இந்தத் தொடர்ந்த கொலைகளால் இன்னும் மக்களை வெளிநாடுகளுக்கு ஓடச்செய்யும் நிலைமையைத்தான் உருவாக்கி வருகிறார்கள். கொழும்பில் வந்து நிற்கும் தமிழர்களைப் பார்த்தாலே தெரியும்.

Photo by: Indrajith Perera

> **அரசாங்கச் சம்பளம் பெற்றுக்கொண்டு வடக்கு கிழக்கில் அரசாங்கத்தின் அலுவல்களைப் பார்க்கலாமென்றால் ஏன் மக்களின் அலுவல்களைக் கவனிக்கும் உள்ளூராட்சி சபைகள் மட்டும் இயங்கக் கூடாது?**

செயற்பாடுகள் நடைபெறுவதில் எந்தப் பாதிப்பும் அவர்களுக்கில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்கச் சம்பளம் பெற்றுக் கொண்டு வடக்கு கிழக்கில் அரசாங்கத்தின் அலுவல்களைப் பார்க்கலாமென்றால் ஏன் மக்களின் அலுவல்களைக் கவனிக்கும் இந்தச் சபைகள் மட்டும் இயங்கக் கூடாது? புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் புளொட் இராணுவத் தலைவர் மாணிக்கதாசன். உமாமகேஸ்வரனின் மறைவுக்குப் பிறகு புளொட்டின் தலைமை எதுவென்ற ஒரு மயக்க நிலை இருந்து வருகிறது. புளொட் இயக்கத்தின் இராணுவப் பிரிவு தனித்துவமாக இயங்குவதாகவும் அது அரசியல் பிரிவின் கட்டுப்பாட்டில் இல்லையெனவும் அரசியல் பிரிவுக்குத் தலைமை தாங்கிவரும் சித்தார்த்தன் பா.உ. தெரிவிக்கிறார். இந் நிலையில் புளொட் இராணுவத் தலைமை முகாம் அமைந்துள்ள வவுனியாவில் பல மர்ம மரணங்களும் பண வசூலிப்புகளும் ஆயுத அச்சுறுத்தல்களும் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. அங்கு மாணிக்கதாசனின் பெயரைக் கேட்டால் பிறந்த குழந்தைக்கும் விக்கல் நிக்கும் என்கிறார்கள்.

**கேள்வி:** உங்களது கட்சியில் அரசியல் பிரிவு இராணுவப் பிரிவைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. உண்மை நிலை என்ன?

**சித்தார்த்தன்:** எங்களது ஸ்தாபனக் கட்டமைப்பில் இரண்டும் வெவ்வேறாக இயங்குவதாகத்தான் அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் கட்சியைப் பதிவு செய்துள்ள தன்மையைப் பார்த்தாலே புரிந்திருப்பீர்கள். நாங்கள் புளொட் என்பதை அரசியல் கட்சியாக பதிவுசெய்யவில்லை. டி.பி.எல்.எ.ஃப். தான் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் டி.பி.எல்.எ.ஃப். ஐத் தான் பிரதிநிதித்துவப்படுத்துபவன். ஆனாலும் எமது இராணுவத்தால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு Morally - தார்மீகரீதியாகநான் தான் பொறுப்பேற்க வேண்டும், தலைவர் என்ற வகையில். இருந்தாலும் இப்போது அண்மைக் காலங்களாக நடக்கும் சில விடயங்களில் எனக்கு நேரடியான சம்பந்தம் கிடையாது. ஏதாவது நடக்கும். நடந்ததன் பிறகு அதுகுறித்து யாரும் என்னைத் தொடர்பு கொள்ளலாம். அப்போது அது காலம் கடந்துபோய் விட்டிருக்கும். அப்படியிருக்கையில் நீங்கள் சொல்வது சரிதான். அரசியல் தலைமை இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைதான் உள்ளது.

**கேள்வி:** அது ஏன்?

**சித்தார்த்தன்:** ஆரம்பந் தொடக்கமே இராணுவத்தை அரசியல் பிரிவு கட்டுப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கவில்லை. இரண்டும் இரண்டாக இயங்குவது நல்லதென்ற அபிப்பிராயம்தான் இருந்தது. அதிகம் பிரச்சினைகள் இருக்கவில்லை. அதனால் வெளியே இப்படி இரண்டாக இயங்குவது தெரியவில்லை. இரண்டுக்கும் தொடர்பு இருந்தாலும் ஒன்றை ஒன்று கட்டுப்படுத்துவதில்லை. இப்போது பல பிரச்சினைகள் வரும்போது... எங்களால் அதைக் கட்டுப்படுத்த முடியாதென்னும்போதுதான்....? அரசியல் பிரிவு தானே எப்போதும் இராணுவத்தை வழிகாட்ட வேண்டும். இராணுவம் எதற்குத் தேவை? ஒரு அரசியல் இலக்கை எய்துவதற்குத்தானே? அது இல்லாதிருக்கும்போதுதான் பிரச்சினை வெளியே தெரிகிறது.

**கேள்வி:** வவுனியாவைப் பொறுத்தவரை மக்களும் வர்த்தகர்களும் உங்கள் இராணுவத்தின் நடவடிக்கைகளால் அச்சமடைந்துள்ளார்கள். அண்மையில் ரெலோவுடனான ஆயுத மோதல் பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களை அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டாமெனப் பொதுமக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதற்கு என்ன கூறுகிறீர்கள்?

**சித்தார்த்தன்:** ஒன்று, மாணவர் அமைப்புகளை முதலில் அங்கு கட்டியவர்கள் நாங்கள்தான். அவர்களை எமது அரசியல் நடவடிக்கைகளில் சம்பந்தப்படுத்தாமல்தான் இருக்க வேண்டுமென்று கருதினோம். பின்னர் மற்றைய இயக்கங்களும் தமக்கென மாணவர் அமைப்புகள் கட்ட வெளிக்கிட்டார்கள். இதன் பின்னர் மாணவர் அமைப்புகளுக்கிடையிலேயே பிரச்சினைகள் ஏற்படத் துவங்கி விட்டது. பள்ளிக்கூட மட்டங்களில் இது பெரிய பிரச்சினையாகி அடிபாடெல்லாம் நடந்தது. தற்போது ரெலோ தம் மாணவர் அமைப்பின் அடையாள அட்டைகளை மீளப் பெறுவதாகத் தெரிவித்துள்ளனர். நாமும் அதை ஒப்புக்கொள்வோம்.



**எமது இராணுவத்தால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு தார்மீகரீதியாக நான்தான் பொறுப்பேற்க வேண்டும், தலைவர் என்ற வகையில். இருந்தாலும் இப்போது அண்மைக் காலங்களாக நடக்கும் சில விடயங்களில் எனக்கு நேரடியான சம்பந்தம் கிடையாது.....அரசியல் தலைமை இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைதான் உள்ளது.**

**கேள்வி:** இதேவேளை சர்வதேச மன்னிப்புச் சபை முதலாக, பல பத்திரிகைகளும் நீங்கள் வவுனியாவில் சித்திரவதை முகாம்கள் வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்கள். இதை நீங்கள் மறுதலிக்கிறீர்களா? அல்லது ஏற்றுக் கொண்டால் அதனை நிறுத்த ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா?

**சித்தார்த்தன்:** என்னைப் பொறுத்தமட்டில் அரசியல் பிரிவால் இதற்குப் பதில் சொல்ல ஏலாது. ஏனென்றால் அரசியல் பிரிவுக்கு அவை தெரியாது. இராணுவப்பிரிவுசெய்வதைநாங்கள் கேட்பதுமில்லை பார்ப்பதுமில்லை. இதை நான் சொல்லும்போது முரண்பாடானதாகத்தான் தெரியும் - இப்படி எப்படி ஒரு இயக்கம் இயங்க முடியுமென்று. ஆனால் இதுதான் உண்மை. இது சம்பந்தமான பதில் வேண்டுமென்றால் இராணுவப் பிரிவிடம் போய்க் கேளுங்கள். இதைத்தான் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் நான் சொல்லியுள்ளேன். அவர்கள் என்னசெய்கிறார்களென்று எனக்குத் தெரியவில்லை.

**கேள்வி:** வவுனியாவில் வரி வசூலிப்பதற்கு என்ன அதிகாரத்தை நீங்கள் கொண்டுள்ளீர்கள்?

**சித்தார்த்தன்:** இதில் இரண்டுநிலைமைகள் உண்டு. முதலில் இதற்கு வரியென்ற பெயரைப் பாவிக்கலாமோ தெரியவில்லை. அது ஒருபுறமிருக்க சில துஷ்பிரயோகங்கள் நடந்திருக்கிறது. தவறான முறையில் தனிப்பட்ட ஆட்கள் வியாபார ரீதியில் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளார்கள். அதே நேரம் இயக்கம் அறவிடும் நன்கொடைகளுமுண்டு. நாம் ஒரு முதலாளியிடம் காசு கேட்டால், ஆம், நீங்கள் சொல்வதுபோல் பயம் இருக்கலாம். ஆனால் அதைவிட அவனுக்கு வேறு தேவை இருக்கிறது. 90களில் புலிகள் வவுனியாவிலிருந்து பின்வாங்கியபின்னர் அங்கே சனமே இல்லாத நேரத்தில் நாங்கள் போய் திரும்ப மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி, வியாபார நடவடிக்கைகளை மீளச் செயற்படுத்தி அவர்களுக்குப் பாதுகாப்பளித்து, அவர்களின் பயங்களைப் போக்கி, எல்லைப் புறங்களிலிருந்து ஏற்பட்ட அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்து அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வந்திருக்கிறோம். அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலே அவர்களுக்கு ஒரு தேவை இருக்கிறது. மற்றது அப்படி எடுக்கப்பட்ட காசுகளில் நாங்களே கல்வீடு கட்டி வீடமைப்புத் திட்டங்களெல்லாம் செய்துகொடுத்திருக்கிறோம். அகதிகளாக வருபவர்களுக்கெல்லாம் உடனடியாக உணவுப்பொருட்கள் வழங்கியிருக்கிறோம். விளையாட்டுப் போட்டிகள் நடத்தினோம். இதுகளெல்லாம் தெரிந்துதான் சனம் எமக்கு காசு தருகிறார்கள். எம்மைப் பொறுத்த வரையில் இவற்றை நன்கொடையென்றே பார்க்கிறோம். ஆனால் சில தனிப்பட்டவர்கள் மேற்கொண்ட பண வசூலிப்புளை நாம் எந்த வகையிலும் பொறுப்பேற்க இயலாது.

**கேள்வி:** வவுனியா மக்களைப் பொறுத்த வரையில் ஐந்து துப்பாக்கி அதிகாரங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்கிறார்கள். ஒன்று இராணுவம், மற்றயது புலிகள், அடுத்து புளொட், மேலும் ரெலோ, இதைவிட ஊர்காவல் படைகள். இந்நிலையில் இங்கு நிகழும் அனாமதேயக் கொலைகளுக்கு என்ன காரணமென்றோ யார் யார் பொறுப்பாளிகளென்றோ தெரிந்துகொள்ளவும் முடியாத நிலை. இது அபாயகரமானதில்லையா?

**சித்தார்த்தன்:** எமது இயக்கத்தில் மட்டும் இந்தப் பழியை முழுதாகப் போட இயலாது. அதற்காக நான் சொல்லவில்லை எங்கள் இயக்கம் நூறு வீதம் தூய்மையானதென்று. சில விஷயங்கள் நடந்துதான் இருக்கிறது. இது நீங்கள் சொன்னமாதிரி அங்கு யார் என்ன செய்கிறார்கள் என்று தெரியாத மாதிரியுள்ளது. இது இந்த யுத்தத்தினுடைய எதிரொலிதான். இன்றைக்கு எமது தோழர் வசந்தனைச் சுட்டார்கள். அதோடு ஆறு பேர் செத்தார்கள். அண்மையில் மேலும் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள். இப்படி எமதுஇயக்கத் தோழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் என்னென்று அவர்களிடம் சொல்லலாம் "நீங்கள் சும்மா இருங்கடா" என்று?

**கேள்வி:** புலிகளுடன் ஏற்படும் மோதலை விடவும் பொதுமக்கள் மத்தியில் நிகழும் கொலைகளையிட்டு என்ன சொல்கிறீர்கள்?

**சித்தார்த்தன்:** பொதுமக்கள் மத்தியில்.... எனக்கு நீங்கள் குறிப்பிட்டு ஒரு கொலையை சொன்னாலொழிய பதிலளிப்பதென்பதுசிரமமானது.தற்போது ரெலோவுடன் மோதியதில் மூன்று அப்பாவிச் சனங்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மற்றபடி ரெலோ பையன்கள் செத்ததோ எங்கள் பையன்கள் செத்ததோ கவலைதான். அது வேறு. நாங்கள் எங்களிடையே எழுந்த தேவையில்லாத பிரச்சினைக்காக சில பொதுமக்களைக் கூடக் கொன்றிருக்கிறோம். அதில் இரு மாணவர்கள் கூடச் செத்திருக்கிறார்கள். அதனால் மாணவர்கள் பயத்தினால் பள்ளிக்கூடங்களுக்குப் போகாமல் இருக்கிற நிலைமையெல்லாம் ஏற்படுகிறது. ஏதோ ஒருமாதிரி இதை இப்போது நிறுத்திவைத்திருக்கிறோம். ஆனால் இந்தயுத்தம் தொடரும் வரையும் இந்தப் பதட்ட நிலை இருந்துகொண்டுதான் இருக்கும். இதை நான் சரியென்று நியாயப்படுத்தவில்லை. ஆனால் இதன் முழு அடிப்படையுமே இந்த யுத்தம்தான்.

**கேள்வி:** உங்கள் அரசியல் கொள்கைகள், அரசியல் செயற்பாடுகள் என்பவற்றை விட உங்கள் அன்றாட செயற்பாடுகளில் இழைக்கும் தவறுகளையும் மக்களுக்கு விளைவிக்கும் இன்னல்களையும்தான் புலிகள் உங்கள் மீதான குற்றச்சாட்டுகளாக பெரும்பாலும் முன்வைக்கின்றனர். இதற்கு நீங்களே வழியேற்படுத்திக் கொடுப்பது போலல்லவா இவை அமைகின்றன?

**சித்தார்த்தன்:** புலிகள் இருக்கும் போதும், அவர்களும் இப்படியான நடவடிக்கைகள் செய்திருக்கிறார்கள். புலிகள் செய்ததால்தான் இன்று இவ்வளவு பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கிறது.



**எமது இயக்கத் தோழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் என்னென்று அவர்களிடம் சொல்லலாம் "நீங்கள் சும்மா இருங்கடா" என்று?**

சனத்திலே இருக்கிற ஒரு பெரிய பலஹீனம் என்னவென்றால் எப்போதும் வெல்லுகின்ற பக்கத்தில் நிற்பது. புலிகள் பலமாக இருப்பதால் புலிகள் சொல்லுவதெல்லாம் சரியென்ற அபிப்பிராயம் இருக்கிறது. வரலாறு மட்டும்தான் சொல்லலாம் இதில் யார் சரியென்று. அரசியல் நிலைப்பாடுதான் வரலாற்றில் ஒரு கட்சி செய்தது சரியோ பிழையோ என்பதைத் தீர்மானிக்கப் போகிறது. இன்றைக்கு எங்களது அரசியல் நிலைப்பாடுகளை விட இப்படியான சில நடவடிக்கைகளால் தான் கட்சியின் பெயர் பாதிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் சொன்னதுபோல் புலி மற்றைய இயக்கங்களுக்கு மாசு கற்பிப்பதற்கு இந்தமாதிரியான சில நடவடிக்கைகளைத்தான் பிரசாரப்படுத்துகிறது. இந்தப் பொறிக்குள் நாங்களும் வீழ்ந்து விடுகிறோம். புலிகளும் பிழை விட்டிருக்கிறார்கள். என்று புலிகள் பலஹீனமாகிறார்களோ அன்றுதான் அவை வெளிப்படையாகப் பேசப்படும.

**கேள்வி:** புலிகள் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிகூட போராடிய இயக்கங்களைஅநாகரிகமானவர்களாகக்காண்பிக்க இத்தகைய நடவடிக்கைகளைச் சுட்டிக் காண்பிக்கிறார்களே? இதனால் உங்கள் ஆயுதப் போராட்டத்திற்கும் அதில் தம்மை அர்ப்பணித்த ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும் களங்கம் விளைகிறதல்லவா?

**சித்தார்த்தன்:** கூட்டணியைப் பொறுத்தவரையில் இன்றைக்குள்ளவர்களுக்கு அன்றைக்குத் தாங்கள் செய்தது தெரியவில்லை. இந்த ஆயுதப் போராட்டத்துக்கு கூட்டணி என்ன என்ன செய்தது என்று மறந்து பேசுகிறார்கள். அன்று ஆரம்ப காலத்தில் புலிகளுக்கு முந்திய T.N.T. - தமிழ் புதிய புலிகள் - நான்கைந்து பேர்களாக பிரபாகரன் உமாமகேஸ்வரன் போன்றோர் இயங்கிய காலத்தில் அமிர்தலிங்கம் எப்படி இவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது இப்போது கதைப்பவர்களுக்குத் தெரியாது. நானே என் கண்களால் பார்த்திருக்கிறேன், அமிர்தலிங்கத்தின் மேடையிலும் சரி, எனது தந்தை தருமலிங்கத்தின் மேடையிலும் சரி காசி ஆனந்தனும் வண்ணை ஆனந்தனும் துரையப்பாவுக்கு இயற்கை மரணம் வரக்கூடாது என்று பேசி, எப்பிடி பிரபாகரனைத் தூண்டி அன்றைக்கு சில நடவடிக்கைகள் எடுக்க வைத்தார்களென்பதெல்லாம் இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் எப்படி இந்த ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தவர்கள் என்பது தெரியாமல்தான் இன்று எமக்கும் ஆயுதப் போராட்டத்துக்கும் சம்பந்தமில்லையென்று சொல்கிறார்கள். அன்றைக்கு மேடையில், நாங்களெல்லாம் சாத்வீகக்காரர் எமக்கேன் இரத்தப் பொட்டென்று சொல்லவில்லையே அவர்கள்.

**கேள்வி:** இன்று இரண்டு போக்குகள் உண்டு. ஒன்று தமிழீழம் மற்றையது ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பது. இதில் உங்கள் நிலைப்பாட்டிற்கும் புலிகள் நிலைப்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவீர்களா?

**சித்தார்த்தன்:** புலிகளின் போராட்டத்தை நாம் ஒருபோதும் எதிர்க்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை இன்றைக்கு முக்கியமாக இந்தியாவினுடைய நிலைப்பாடு ஈழத்திற்கு ஆதரவற்றதாக மாறியதன் பின், அதுவும் முக்கியமாக ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின் ஈழம் இன்றைக்கு சாத்தியமில்லாத விடயம். ஆகவேதான் நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வைக் காண முனைகிறோம். இந் நிலைப்பாட்டிற்கு 87 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்போது எல்லோரும் - புலிகள்கூட - ஒத்துத்தான் வந்தோம். ஆனால் வந்த பின்னர் இன்றுவரை 12 வருடங்களாகியும் இன்னும் சமாதானத்தையோ, ஒரு தீர்வையோ காணவில்லை - மாகாண சபையைத் தவிர. இதனால் ஜனநாயத்திற்கு வந்த கட்சிகளுக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரக்தி காணப்படுவது உண்மை. ஆனால் ஆயுதப் போராட்டத்தாலும் இதற்கு ஒரு முடிவு காணக்கூடிய சாத்தியம் இல்லை. இது ஒரு *No ending situation* - யாருமே வெல்ல முடியாததாக இப்படியே இழுபட்டுக்கெண்டே செல்வதாக உள்ளது. இந்த நிலையில் புலிகள் ஈழத்திற்குப் போராடுவதால் ஈழமும் வராது அழிவும் நிற்காது என்ற சூழ்நிலைதான் ஏற்பட்டுள்ளது. புலிகள் இன்று செய்யக்கூடிய ஒன்று என்னவென்றால் இந்த நாட்டினுள் ஒரு தீர்வுக்குப் போக வேண்டும். போய் இந்த அழிவை நிறுத்த வேண்டும்.

**கேள்வி:** உங்கள் இராணுவத் தலைவர் மாணிக்கதாஸன் அண்மையில் புலிகள் மீதான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுமென அறிவித்துள்ளாரே?

**சித்தார்த்தன்:** அது தற்காப்பு நடவடிக்கைதான். அவர்கள் எங்களைத் தாக்கிக் கொண்டிருக்கும்போது நாம் சும்மா இருந்து ஆட்களைப்பலிகொடுத்துக் கொண்டிருக்கமுடியாதே. *Offencive is a form of diffencive also* அல்லவா. இருப்பைப் பாதுகாப்பதுதானே மனிதனின் அடிப்படையான தேவை.

**கேள்வி:** பாதுகாப்பென்ற உங்கள் செயற்பாட்டில் அரசாங்கத்தின் படைகளுடனான தொடர்பு எத்தகையது?

**சித்தார்த்தன்:** அரசாங்கப் படைகளோடு ஒரு ஒருங்கிணைப்பு இருக்கிறது. அதற்காக நாங்கள் அவர்களோடு ஒன்றாக நின்று மோதலில் ஈடுபடுவதில்லை. எங்களுடைய முகாம்களை எங்களுடைய இடங்களில் அமைத்து எம்மைப் பாதுகாத்துக் கொள்கிறோம். நாங்கள் அவர்களைத் தாக்க மாட்டோமென்றும் அவர்கள் எம்மைத் தாக்க மாட்டார்கள் என்றும்தான் எமக்கும் அவர்களுக்கும் இடையிலான உடன்பாடு.

**கேள்வி:** இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்த அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

**சித்தார்த்தன்:** நான் நினைக்கிறேன், இது *Too late* - காலம் பிந்திவிட்டது! தமிழ்மக்களுடைய நம்பிக்கையை இழந்த நிலையில் இருக்கிறது அரசாங்கம். குறிப்பாக இந்த வயம்ப தேர்தலுக்குப் பிறகு. இந்த இரண்டு கட்சிகளும் அடிபட்டதைப் பார்த்து இவற்றுக்கிடையில் ஒரு ஒற்றுமை இப்போதைக்கு வர இயலாது என்ற ஒரு எண்ணம்தான் தமிழ் மக்களிடம் இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஒரு அரசியல் தீர்வை இப்போதைக்குக் கொண்டு வருமென்று தமிழ் மக்கள் நம்பவில்லை. தீர்வைக் கொண்டுவருவதானால் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை முக்கியம். அதற்கான நடவடிக்கை என்னவென்றால், ஒரு அளவிற்கு யு.என்.பி. உடன் ஒத்துப்போவது அவசியம். அரசாங்கம் நாளாந்தம் யு.என்.பி.யைத் தள்ளிவிலத்துகின்ற நிலைமைதானே இருக்கிறது. அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வை வழங்கவில்லையென்றால் தமிழர் பிரச்சினை புலிகளின் கையில் இருந்துகொண்டுதானிருக்கும். அது இருக்கும்வரையும் புலிகள் பிழைத்திருந்தே தீருவார்கள். மற்றக் கட்சிகளுக்கும் சனத்திடம் சொல்வதற்கு எதுவும் கிடையாது.

**கேள்வி:** இந்த நிலையில் எதை நீங்கள் முன்மொழிகிறீர்கள்.

**சித்தார்த்தன்:** முதலில் இருப்பதையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும். புதிதாக எதுவும் கிடைக்குமென இப்போதைக்குத் தெரியவில்லை. அதனால்தான் மாகாண சபையை செயற்படுத்தும்படி வலியுறுத்துகிறோம். ஆனால் இதில்கூட எம்மிடையே ஒற்றுமையில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கிறது. மாகாண சபைத் தேர்தல் வைத்தால் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைப் பற்றி எல்லோரும் மறந்து விடுவார்கள் என அவர்கள் கூறுகிறார்கள். இதையே சொல்லிச் சொல்லி மாகாண சபையையும் கிடைக்க விடாமல் செய்கிறார்கள்.

**கேள்வி:** அரசாங்கம் எந்தத் தீர்வையும் இப்போதைக்குத் தரப்போவதில்லை என்றால் நீங்கள் ஏன் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றீர்கள்?

**சித்தார்த்தன்:** வயம்ப தேர்தலுக்குப் பிறகுதான் இந்த நிலைமை வந்திருக்கிறது. இல்லையா? அதற்கு முந்தி ஓரளவுக்குச் செய்யலாம் என்றுதான் நம்பினோம். வயம்ப சரியான ஒரு தேர்தலாக நடந்து P.A. வெல்லுகின்ற பட்சத்தில் சிங்களமக்களும் தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதாகக் காட்டலாமென்றும் அத்தோடு யு.என்.பி. யும் ஒத்து வரும் என்றும் எல்லாத் தமிழ்க் கட்சிகளுக்கும் ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் அவை சிதைந்து போய்விட்டன. எனவே இனித்தான் நாம் யோசிக்க வேண்டும் என்ன செய்வதென்று.

அதேவேளை அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பிற்கு இப்போது நாம் ஆதரவு தருவதில்லை.

**கேள்வி:** புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதானால் உங்கள் நிலைப்பாடு என்ன?

**சித்தார்த்தன்:** எங்களைப் பொறுத்தவரையில் புலிகளோடு பேசுவதை நாம் எதிர்க்கப் போவதில்லை. ஏனென்றால் ஒரு விடயம் உண்மைதானே. நாங்கள் கேட்பதைக் காட்டிலும் புலிகள் ஒருபோதும் குறைவாகக் கேட்கப் போவதில்லை. இது என் வீட்டுச் சொத்து அல்லவே. யார் பேசினாலும் மக்களுக்கு ஒரு சரியான தீர்வு கிடைக்குமென்றால் நாம் ஆதரித்தே தீருவோம்.

**கேள்வி:** ஆனால் புலிகள் தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிகள் என்று வலியுறுத்துகிறார்களே... பேச்சுவார்த்தையில் உங்களைநிராகரித்தால் ஏற்றுக் கொள்வீர்களா?

**சித்தார்த்தன்:** இது புலிகளின் பிரச்சினையல்ல. தமிழ் மக்களின் பிரச்சினை. யார் பேசினாலும் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டால் சரி. பின்னர் தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் யார் தங்களுடைய பிரதிநிதியென்று. இதை நாங்களும் தீர்மானிக்க முடியாது புலிகளும் தீர்மானிக்க முடியாது. அடுத்து இங்கு மற்றொரு முக்கியமான விடயம் என்னவென்றால், யாரோடும் பேசவேண்டியதேவையே இல்லை. இது 1948 தொடக்கம் நாங்கள் சொல்லிக்கொண்டு வருகின்ற பிரச்சினை. சிங்களத் தலைமைகளுக்கு நல்ல தெளிவாகத் தெரியும் தமிழ் மக்களுடைய பிரச்சினை என்னவென்று. இதைப் புலியுடனோ, வேறுயாரோடுனோ பேசித்தான் தீர்க்க வேண்டுமென்று இல்லை. அவர்களே சொல்லலாம் இதுதான் இதற்குத் தீர்வென்று. அது தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வென்றால், தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொண்டுதான் போவார்கள். ஆனால் இதுதான் தமிழ் மக்களின் பிரச்சினையென்றுபுலிகள் சொல்லி, அதைக் கேட்டுவிட்டுத்தான் தீர்வு வழங்கப் போகிறார்களென்றால் - புலிகள் சொல்லித்தான் அவர்களுக்கு அது தெரிய வருகிறதாமென்றால் - அதில்கூட எமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. செய்யட்டும். அதேவேளை புலிகளோடு ஒரு உடன்பாடு வரவில்லையென்றால் தீர்வே இல்லையென்று ஆகிவிடக் கூடாது. புலிகள் பேசத் தயாரென்றாலும் நிபந்தனைகள் விதிப்பார்கள். பிரபாகரனின் மாவீரர் உரையில் யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டுமென்று தெரிவித்திருந்தார். ஆனால் எந்த ஒரு சிங்கள அரசும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் வடக்கிலே இருந்து இராணுவத்தை வாபஸ் வாங்கிவிட்டு ஆட்சி நடத்த இயலுமா? இது நடக்கக் கூடியதல்லவே.

**கேள்வி:** நீங்கள் செய்யக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கை என்ன?

**சித்தார்த்தன்:** முதலில், குறைந்தபட்சம் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகளாவது ஒற்றுமைப் படவேண்டும். நாம் தனித்தனியாக நின்றால் எமது கோரிக்கைகளுக்கு வலுவிருக்காது. ஒன்றுபட்ட அமைப்பாக நாம் சிங்களத் தலைமைகளுடன் பேச்சுவார்த்தைநடத்தினால் தமிழ் மக்களின் தரப்பென்ற அங்கீகாரத்துடன் ஏதாவது ஒரு தீர்வை வலியுறுத்தக் கூடியதாக இருக்கும். அத்தோடு ஏனைய நாடுகளும் எமது நியாயத்தை செவிமடுக்கவோ அரசாங்கத்திற்கு அழுத்தம் செலுத்தவோ முன்வரும். இன்று முதலாவதாகத் தேவைப்படுவது தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஐக்கியம்தான். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு சர்வாதிகார ஆட்சியாளர் இருந்தால் படுகொலையின் மூலம் அவரை இலகுவாக அகற்றிவிட முடியும். ஆனால்... அந்த அமைப்பை மாற்றியமைத்துவிட முடியாது"
- பேராசிரியர் வில்கின்ஸன்

# இலங்கை அரசியலில் நிழல் உலகம்

- மாஜிதா மைந்தன் -

"கோட் ஃபாதர்!"

பாதாள உலகச் சக்கரவர்த்திகளுக்கான சர்வதேச ரீதியான முதல்தர உதாரணம்தான் இந்த 'கோட் ஃபாதர்'.

நேற்றும், இன்றும், அநேகமாக நாளையும் என்கிற ரீதியில் 'என்றும்' பாதாள உலக தனி நிலைநாயகனுக்கு உதாரணம் 'கோட் ஃபாதர்'.

ஹொலிவூட் திரையுலகம் தாண்டி உலகையே ஒரு கலக்குக் கலக்கிய மார்லன் பிராண்டோ என்னும் பிரபல நடிகர் நடித்த 'கோட் ஃபாதர்', மேரியோ பூஸோ எழுதிய ஒரு நாவலின் திரைப்பட வடிவம். இதை இயக்குநர் கப்போலா இயக்கியதோடு.... கோட் ஃபாதர் பாத்திரம் ஏற்ற மார்லன் பிராண்டோவுக்கு ஒஸ்கார் விருது கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரதான விடயம் - கதையின் கருவான நிழல் உலகம்.

மிக வசீகரமான தேஜஸ் வடியும் முகம். அழகிய சிரிப்பு. தீட்சண்யம் மிக்க கண்கள். அதில் எப்போதும் அதிகாரமிக்க பார்வை. கம்பீரமான உடலும் சாமர்த்தியமான பேச்சும்... என சாதாரண வெளிப் பார்வைக்கு சமூகத்தின் பெரிய மனிதனாக, மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவனாகத் தென்பட்டாலும்... உள்ளுக்குள் எதற்கும் துணிந்த 'விஷ மனிதன்'தான் இந்த 'கோட் ஃபாதர்'.

கோட் ஃபாதரின் கட்டளைகளில் எப்போதுமே மின்சாரத்தின் உக்கிரம் இருக்கும். இதற்கு 'கோட் ஃபாதர்' திரைப்படக் காட்சியொன்றிலிருந்து ஒரு சின்ன உதாரணம்:

பரபரப்பான அந்த வியாபார நகரத்தில் எதற்கும் அஞ்சாத ரவுடிகள் கூட்டமொன்று, மாலை மங்கிய வேளையில்.... போதையுட்கொண்ட வெறியில்.... ஒரு ஏழ்மையான குடிசைக்குள் புகுந்து அங்கேயிருந்த முதியவரை அடித்துத் துன்புறுத்தி.... அவரது இளமையான - அழகான மகளைப் பாழ்படுத்தி நார் நாராக சிதைத்துப் போட்டுவிட,

பார்த்துக்கொண்டிருந்த முதியவரின் ஆத்மா கரைந்துவிட்ட வேதனை! ஆத்திரம்!.


சிரிசேன குரே

'இதற்கு நீதி வேண்டும்!'

பொலீசாரையோ நீதிமன்றையோ நாடிப் போனால் கூட நிச்சயமாய் அங்கே எதுவும் எடுபடப் போவதில்லை.... குறித்த ரவுடிகள் கூட்டத்தின் பண பலம் மற்றும் செல்வாக்குக்கு முன்னே சட்டங்கள் தகர்ந்து போய் விடும். ஆக - இதற்கு ஒரே வழி.... கோட் ஃபாதர்!

உடலிலும் உள்ளத்திலும் வெகு வாய்க்காயத்துக்குள்ளானமுதியவர், கோட் ஃபாதரிடம் போய் விவரம் சொல்லி முறையிடுகிறார். உடம்பில் வெகுவாய் நடுங்கியபடி....

விளைவு:

மறுநாள் சூரியோதயத்தின் முன்...


எதற்குமே அஞ்சாத அந்த ரவுடிகள் கூட்டம், கோட் ஃபாதரின் ஒரேயொரு உத்தரவில் உயிருக்குப் பயந்து அப்படியே சிதறிப்போய்... பரபரப்பான அந்த நகரத்தைவிட்டே காணாமல் போய்விடுகிறது.

இது கற்பனைத் திரைப்படக் காட்சி என்றாலும், இந்த கோட் ஃபாதரையும் மிஞ்சிய நிலையில் சர்வதேச ரீதியாக இன்று பாதாள உலகச் சக்கரவர்த்திகள் இருக்கிறார்கள் என்பது.... கசப்பானதாயினும் உண்மை.

இலங்கையின் கடந்த ஐ. தே. க. காலத்தில் மனித வெடிகுண்டுக்கு இலக்கான ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ, மற்றும் முன்னாள் ஐ. தே. க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிரிசேன குரே உட்பட சில அரசியல்வாதிகள் கூட, 'கோட் ஃபாதர்'களாக பெரிதும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கற்பனை கோட் ஃபாதர், பாதாள உலகச் சக்கரவர்த்தியாகவும், ஏழை, எளியவர் மீது கருணை மனம் கொண்டவராகவும் இருந்தது போலவே, பிரேமதாஸ-சிறிசேனகுரே இருவரும் கூட இருபக்கச் செயற்பாட்டுத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்களோடு அக்காலம் நேரடித் தொடர்புகள் வைத்திருந்த இன்னொரு பாதாள உலகச் சக்கரவர்த்திதான் **சொத்தி உபாலி** என்று பலரும் அறிந்த 'அரம்பாவெலகே டொன் ரஞ்சித் உபாலி சில்வா'.



இவர்களுக்கு இடையிலான இந்த 'நிழல் உலக' நட்பின் அடிப்படையிலேதான் சொத்தி உபாலிக்கு (ஐ. தே. க. காலத்தில்) தற்காலிக பொலிஸ் சேவைப் பிரிவில் உதவி பொலீஸ் பரீட்சகராகப் பதவி வழங்கப்பட்டிருந்தது.

சர்வதேச 'தாதா'வான தாவூத் இப்றாஹிமின் வைரியும், நிகழ்கால மும்பாயின் நிழல் உலக சக்கரவர்த்தியுமான அருண் காவ்லியின் உயிருக்குப் பாதுகாப்புத் தருவதற்காக, மத்திய மும்பையின் 'டெக்டி சாவ்ல்' அடுக்கு மாடி வீட்டுத் தொடரின் கோட்டை மாதிரியான இவரது பங்களாவுக்கு வெளியே, ஏ.கே.47 துப்பாக்கிகளோடு அரச பொலிசார் காவலுக்கு நிறுத்தப்பட்டிருக்கின்ற நிலையில்....

'ஈஸ்ட் வெஸ்ட் ஏர்லைன்ஸ்' அதிபர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான அருண் காவ்லியை, இன்றைய இந்திய அரசு, ஒரு அமைச்சரின் ஸ்தானத்தில் ஆராதிக்கும் போக்கில்....

உலகளாவிய ரீதியில் சகல ஆட்சியாளர்களுமே நிழல் உலக தாதாக்களின் ஆளுமைக்குள் அடிபட்டுப் போயிருக்கிற இயல்பில்....

சொத்தி உபாலியின் விடயமும் உண்மையாக இருக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 'தாதா'க்கள் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு, சட்டத்தின் கண்களில் இருந்து குறுகிய காலம் ஒளிந்திருக்க இந்தியாவுக்கு விமானமேறுவது போல, இந்திய - பாகிஸ்தான் நிழல் உலக ஆசாமிகள் பல சௌகரியங்களுக்காகவும் இலங்கை - மாலைதீவுக்கு போன்றவற்றிக்குள்தான் ஊடுருவுகிறார்கள்.

"பாம்பின் கால் பாம்பறியும்" என்னும் நிலைப்பாடு மாதிரி, கோட்டா தரான ரணசிங்க பிரேமதாச, பாதாள உலகத்தினர் தனது எதிராளிகளிடம் விலைபோகும் பட்சத்தில், தனது உயிருக்கும், அதிகாரக் கதிரைக்கும் ஆபத்து வரலாம் என்கிற ரீதியில், ஒரு அவதான ஏற்பாடாக சொத்தி உபாலியை தனது கைக்குள் போட்டுக்கொண்டிருக்கலாம் என்று நம்பப்படுவதையும் இங்கு ஏற்காமல் இருக்க முடியாது.

இந்நிலையில்,

ஐ.தே.க. அரசு சொத்தி உபாலிக்கு பொலிஸ் சேவையில் உத்தியோகப்பற்றற்ற வகையில் மறைமுகமாக உயர் பதவி கொடுத்து வைத்திருந்தது என்பது ஒன்றும் புதுமையானதல்ல.

இந்தியாவில் தற்போது ஜெயிலில் இருக்கும் பிரபல 'தாதா' சந்திரசுவாமி மீதான பிரதான குற்றச்சாட்டையும் இவ்விடத்தில் நாம் மீட்டிப் பார்க்க வேண்டும்.

தாதாவான **'கோணாவல சுனில்'** என்பவருக்குப் பிறகு பலமானவராக இனங்காணப்பட்டவர்.

கடந்த டிசம்பர் 18ஆம் திகதி பிலியந்தலை போகுந்தர பிரதேச வேறஹெற சந்தியில் இனந்தெரியாதோரால் சொத்தி உபாலி சுட்டுக்கொல்லப்படும்போது இவருக்கு வயது 46. இவரது மனைவி (வயது 40) முதுஹரலாகே சுனிதா லாலனிக்கும் இவருக்குமாக 19 - 5 வயதுகளுக்கிடையில் 6 குழந்தைகள்.

இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட இவரது மரணத்தின் மர்மம் சரியாகத் துலங்காத நிலையில்...பத்திரிகைகள் சுட்டிக்காட்டும் இந்த இனந்தெரியாதோர் அநேகமாய் இன்னுமொரு பாதாள உலகத்தவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பது ஒரு பிரதான விடயம்.

இதுபற்றிய விரிவான அலசலுக்கு வருமுன்....

கல்கிஸ்ஸ பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மசிறி லியனகேயின் கருத்துப்படி, கொழும்பை அண்டிய பிரதேசங்களில் 19க்கும் மேற்பட்ட பாதாள உலகக் கோஷ்டிகள் இயங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் கோஷ்டிகளினால் அண்மைக் காலங்களில் மட்டும் 28 ரகசிய மரணங்களும், 100க்கும் மேற்பட்ட கொள்ளைகளும் நிகழ்ந்திருக்கின்றன எனவும் பொலிஸ் பதிவுகள் கூறுகின்றன. பொலிஸ் பதிவுக்கு உள்ளாகாத நிலையில் இந்த 28-100ல் பெருத்த மாற்றங்கள் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.



சொத்தி உபாலி - கொல்லப்பட்ட போது....

பிரேமதாஸ ஆட்சிக்கால "டயர்" எரிப்புக்களில் கூட பல நிழலான கொலைகள் நடந்திருக்கிறபட்சத்தில்: அவைகளும் அநேகமாகப் பொலிஸ்பதிவுகளில் இருந்து நழுவிப்போயிருக்கின்றன. தவிர, இந்த டயர் யுகத்தைப் பயன்படுத்தி சில மூன்றாந்தர பாதாள உலக நபர்களும் தமது ரகசிய சித்து விளையாட்டுக்களை நடத்திவிட்டு ஊமையாக இருந்திருக்கிறார்கள் எனும்போது, பொலிஸ்பதிவுகளில் இவற்றுக்கும் முறையானவாய்ப்புஇல்லாமல் போயிருக்கிறது.

குட்டித் தீவான இலங்கையின் வர்த்தக நகரிலேயே பொலிஸ் பதிவுகளின்படி மட்டும் 19க்கும் அதிகமான பாதாளக் கோஷ்டிகள் இயங்குகின்ற நிலையில், அடுத்த - அண்மித்த ஆசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷில் இயங்கும் மேற்படி கோஷ்டிகளின் எண்ணிக்கையைச் சொல்லத் தேவையில்லை.

இந்தியாவின் சென்னையில் மட்டும், மத்திய காவல்துறை இணைக் கமிஷனர் ராதா கிருஷ்ணனின் கூற்றின்படி, வருடத்திற்கு 300 பாதாள உலகக் குண்டர்கள் கைது செய்யப்படுகின்ற நிலையில், மும்பாயில் மட்டும் இந்தத் தொகை 1000ஐயும் தாண்டிவிடுவதாகக் கூறப்படுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் போன்ற பெருத்த நாடுகளை விட்டுப் பார்த்தால்... கடலுக்கு இரையாகும் நிலையில் உள்ள கையளவு மாலைதீவில் கூட அந்நிய நாட்டு பாதாள உலகக் கோஷ்டிகள் தமது கரங்களை விரித்திருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இலங்கை நிழல் உலகுக்கும், இந்திய - பாகிஸ்தான் தேசங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் - சங்கிலி வடிவ உறவுகள் இருப்பது போலவே, மாலைதீவு வாசிகள் சிலரும் (வெளி) நிழல் உலகுக்குள் அடங்கிப் போயிருந்தார்கள் என்பதற்கு இது நல்ல தொரு உதாரணம்.

மாலைதீவு தேசிய பாதுகாப்புச் சேவை உயரதிகாரியொருவரின் ஆசை நாயகியான இவர், இந்திய விண்வெளித் துறையில் நேரடித் தொடர்புகள் வைத்திருந்த சில

**" பிரேமதாஸ மரணத்திற்குப் பின்னால் 'லாட்டரிச் சீட்டு' அதிர்ஷ்டமாக ஜனாதிபதி பதவியை ஏற்ற டீ. பி. விஜேதுங்கவைக் கொலை செய்வதற்கு, சொத்தி உபாலி பணிக்கப்பட்டிருந்ததன் பின்னணியில் சிறிசேன குரே இருந்தார் என்பது உண்மையா? "**



முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலையின் பழி, விடுதலைப் புலிகள் மீது இருந்தாலும் கூட, அதற்கு முன் ராஜிவைக் கொலை செய்வற்கு ஒரு இஸ்ரேலியக் கூலிப்படைக்கு 10 மில்லியன் அமெரிக்க டாலர்களை சந்திரசாமி கொடுத்திருந்தார் எனும்போது:

பிரேமதாசவை

எதிர்நோக்கியும் கூலிப்படைகள் முன்னேறலாம் என்கிற ஐயத்தின் முன்னேற்பாடே சொத்தி உபாலி நியமனம் என்று சொல்லப்படுவதிலும் உண்மையில்லாமலில்லை. இந்த சொத்தி உபாலி இன்னமொரு பிரபல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய அதிகாரிகளோடு செக்ஸ் உறவுகள் வைத்திருந்ததாகவும் கண்டறியப்பட்டிருந்தன. அப்போதைய இந்தியப் பத்திரிகைகள் கூட இவரை "செக்ஸ் பாம்" என்று வர்ணித்துமிருந்தன. அதேபோல -

மலைதீவு கப்பல் அதிபரொருவரின் நெருங்கிய உறவினரான பவுஸியா ஹஸனுக்கும் அவரது மகள் மூலமாக "ஹபீப் வங்கிகள்" ஊடாக பாகிஸ்தானோடு தொடர்புகள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

கொலைகள், கடத்தல் முயற்சிகள், குண்டு வெடிப்புக்கள் போன்ற ஆள்பல அடிப்படைச் செயல்பாடுகளுக்காக ஆசிய நாட்டு நிழல் உலகுக்குள் முரட்டுத்தனமான ஆண்கள் அடியாட்களாகப் பயன்படுத்தப்படுகிற நிலையில், தழதழவென்று அழகாயிருக்கும் பெண்கள் செக்ஸ் ரீதியாகவேபயன்படுத்தப்படுகிறார்கள். இல்லை விநியோகிக்கப்படுகிறார்கள்.

இந்நிலையில் - மாலைதீவின் மரியம் ரஷீதாகூட ஒரு 'அதிரடி செக்ஸ் பாம்' என்று ஊர்ஜிதமாகியிருக்கின்றது.

இந்தக் கணம்: இன்றைய நிழல் உலகோடு விநோதத் தொடர்புடையதொரு கருத்தையும் முன்வைப்பதும் இங்கு சிறப்பாகிறது.

இராஜதந்திரிகள், இராணுவத் தளபதிகள், உயர்மட்ட அரச அதிகாரிகள், நீதிபதிகள், பெரும்வர்த்தகப்புள்ளிகள் ஆகியோரைப் 'படுகொலை' செய்யும் செயலைஅல்லது 'அரசியல் படுகொலை'களை ஆங்கில மொழியில் ASSASSINATION என்று அழைப்பர்.

## பிரேமதாச சிறிசேன குரே உறவு










இந்த ASSASSINATION என்ற சொல்லுக்கு தமிழில் 'அரசியல் படுகொலை' என்பதே சரியானதாக இருந்தாலும், இன்று 'படுகொலைகள்' கூட இந்த சொற்றொடருக்குள்தான் அடங்குகின்றன.

பதினோராம்நூற்றாண்டில்பேர்ஸியாநாட்டில் செயற்பட்டு வந்த 'நிஸாரிஸ் இஸ்மாயில்' என்ற இஸ்லாமிய மதத் தீவிரவாத அமைப்பு, தமது எதிரிகளைக் கொலை செய்வதை ஒரு மதக் கடமை எனக் கருதிய நிலையில் அதற்கான 'ஹஷிஷி' என்கிற அரபுச் சொல்லிலிருந்து மருவியே ASSASSINATION என்று ஆங்கிலத்துக்கு ஆனதாகச் சொல்லப்படுகிறது. தவிர -

இவர்கள் தமது எதிராளிகளைக் கொலை செய்வதற்கு முன்னர் 'ஹஷிஷ்' என்னும் போதைப் பொருளை உட்கொள்வதிலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களாம்.

இன்றைய நிழல் உலக தாதாக்கள் - அவர்களது அடிதடிகள்கூட, 'ஹஷிஷ்' மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருள்களை பாவிப்பதில் அதிகம் ஈடுபாடுடையவர்களாக இருக்கிறார்கள் எனும்போதும்,

இலங்கையிலும் இராணுவத் தளபதிகள், இராஜதந்திரிகள், அரச அதிகாரிகள், பெரும் வர்த்தகர்கள் படுகொலை செய்யப்பட்டிருப் பதில்.... இவற்றில் பல கொலைகள் நிழல் உலகு சார்பாக நடத்தப்பட்டிருக்கின்றன எனும் போதும், இந்த ASSASSINATION அகராதிச் சொல் இலங்கை பாதாள உலகுக்கும் பொருத்தமானதாக இருப்பது என்பதையும் மறுப்பதற்கில்லை.

இலங்கை பாதாள உலகுக்குள்ளும் போதை வியாபாரிகள் இருப்பதும், பாகிஸ்தான் மற்றும் மும்பைக்கு இடையேயான உறவுகள் வலுப்பெறக் காரணமாகியிருக்கிறது. (இவற்றைக் கொஞ்சம் விரிவாகப் பிறகு ஆராய்வோம்)

எப்படியோ நிழல் உலகத்தவர்களிடையேபிரித்துவேறாக்கமுடியாதவாறு போதைப் பொருள் பாவனை மற்றும் வியாபாரம் ஒட்டியிருக்கின்றது என்பது நூற்றுக்கு 90 வீதம் யதார்த்தமானது.

மதுரையில் கைது செய்யப்பட்ட ஒரு இளம் தாதாவிடம் "கொலைகள் மனசை உறுத்தாதா?" என்று கேட்டதற்கு- "காரியம் பண்றத்துக்கு முன்னாடி தண்ணியடிச்சிட்டுப் போறப்போ மனசைஉறுத்தறதாவது" என்றுபதில் வந்திருக்கிறது. இலங்கையிலும் இதுபோன்ற 'உறுத்தாத' கொலைகளைச் செய்து பரபரப்புக்கு உள்ளானவர்தான் சொத்தி உபாலி.

லலித் அதுலத் முதலி கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான இவர், 1993 டிசம்பர் 12ம் திகதி கோட்டே **சுசந்த பெரேரா** மரணம் தொடர்பாக 10 வருட கடுங்காவல் தண்டனை பெற்று பிணையில் விடுதலையாகியிருந்தவர்.

1994 மே மாதம் நீர்கொழும்பு உயர்நீதிமன்ற முன்றலில் சுட்டுக்கொல்லப்பட்ட, பிறிதொரு பாதாள உலக நாயகனான **சிந்தக அமரசிங்க** கொலை தொடர்பாகவும், இன்னும் 07 பேர் அடங்கிய குழுவினரோடு கைதாகி, தலா 25,000 ரூபா பிணையிலும், 5 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் கூட விடுவிக்கப்பட்டவர்.

**பிரேமதாஸ மரணத்துக்குப் பின் "லாட்டரிச் சீட்டு" அதிர்ஷ்டமாகஜனாபதிப்பதவியையேற்ற டீ. பி. விஜேதுங்கவை, பிரேமதாஸவின் சிலை திறப்புவிழாவில்வைத்துக்கொலைசெய்வதற்கு சொத்தி உபாலி, சிறிசேன குரேயினால் பணிக கப்பட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.**


இந்தக் கொலையைச் செயற்படுத்த முடியாத நிலையிலேயே, மாத்தளைநகரசபைஉறுப்பினர் ரஷ்மார் உசைன் கொலை வழக்கில் உபாலி கைதாகியுமிருந்தார். இதுபற்றிய விபரங்களை அடுத்த "அமுதில்" பார்ப்போம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாத ஓசைகள்

ஏநூர் - ஸன்



திடீரெனக் கேட்ட அந்த குண்டு வெடிப்புச் சத்தத்தில் வீடே அதிர்ந்து போயிட்டு. இடி விழுவது போல் பலமான சத்தங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தன.

என் மனதில் ஒருவித பய உணர்வு உண்டானது.

இரவு நேரமானதால எங்கு என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை. தெரிந்துகொள்ளவும் முடியவில்லை.

இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்த துப்பாக்கி வெடிச் சத்தத்தினால் வீட்டில் பயம் கலந்த அமைதி நிலவியது. சிறியவள் நஸ்லியா, உம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, காதுஇரண்டையும் தனது சுட்டு விரல்களால் அடைத்தவாறு படுத்திருந்தாள்.

வெடிச் சத்தங்கள் ஓயவிலலை. ஆங்காங்கே பொதுமக்களின் அழுகுரல்சத்தங்களும்கேட்டுக்கொண்டிருந்தன. உன்னிப்பாக அவதானித்தேன். மக்களின் இரைச்சல்களுடன், வெடிச்சத்தங்களும் அதிகரித்துக் கொண்டே வந்தன.

'உம்மா.....நாஸர் மாமாவின் வீட்டுப்பக்கம்தான் வெடிச் சத்தமெல்லாம் கேட்குது. அவர்களுக்குத்தான் ஏதும் நடந்ததோ தெரியவில்லை" என மெதுவாகக் கூறி முடிக்குமுன்.....

"ஏண்டா.... றினாஸ் அப்படிச் சொல்ற...? அல்லாஹ் பாதுகாக்கணும்" என்று கூறினாள் தாய் பரீதா.

மீண்டும் அமைதி நிலவியது.

ஒவ்வொருவர் எண்ணங்களும் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன. அவரவர் நினைவுகள் அத்தனையும் '90 ஆகஸ்டின் நிகழ்வுக்கு இழுத்துச் சென்று அதையெல்லாம் ஒவ்வொன்றாக அசைபோட வைத்தது.

அன்றைய நிகழ்வுகள் அத்தனையும் ஒவ்வொரு மனித உள்ளத்தையும் காயப்படுத்திச் சென்றதை நினைக்கும்போது உள்ளம் வேதனையால் வெடித்துவிடும் போல் இருந்தது.

நேரத்தை அறிவிப்பதற்கு சுவர் மணிக்கூடு அமைதியைக்கிழித்துக்கொண்டுபன்னிரண்டை அடித்துவிட்டு ஓய்ந்தது.

இதே போன்ற ஒரு இரவு வேளையில்தான் அன்றும், இப்படியான இரைச்சல்களும், மனித சத்தங்களும், அழுகுரல்களும், வெடிச் சத்தங்களும் கேட்டன.

விளைவாக அதே இரவின் விடியலில் பூமித்தாய் பல நூறு உயிர்களை பாரபட்சமின்றி புசித்துக்கொண்ட அந்த நிகழ்வு அத்தனையும் நினைவுகளில் மோதிச் சென்றன.

அக்கொடிய நிகழ்வுக்கு அருமைத் தந்தையினதும், சகோதரனினதும் உயிர்களைப் பறிகொடுக்க நேர்ந்ததால் இன்று தாயுடன், சிறிய தங்கையுடன் தனித்துவிட்டதை உணர்ந்து கவலையடையாமல் இருக்க முடியவில்லை.

என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. எனது ஒன்றுவிட்ட சகோதரியின் கருவில் இருந்த எட்டுமாதக் குழந்தையை இதே போன்ற இரவில்தானே கொலைஞர்களின் வாள் முனை தொப்புள் கொடியறுத்து வேறாக்கி தாயையும், சேயையும் ஒரே இரவில் இவ்வுலகை விட்டுப் பிரிய வைத்தது என்பதை நினைக்கும் போது... தாங்கிக்கொள்ள முடியவில்லை.

சற்று நேரத்தில் அதிகரித்து வந்த வெடி ஓசைகளுடன், அழுகுரல் சத்தமும் வீட்டை அண்மித்து விட்டது என்பதை பக்கத்து வீட்டில் கேட்ட அழுகைக்குரல் உணரவைத்தது.

தாயாரும் சகோதரியும் மிகவும் பயத்துடன் உட்காந்திருப்பதைக் கண்டு நானும் அவர்களுக்கருகில் நெருங்கி அமர்ந்து கொண்டு செய்வதறியாது நம் இறைவனையே வேண்டியவாறு இருந்தேன்.

அதே நேரத்தில் திடீரென முன் ஹோல் கதவு தட்டப்பட்டு. மிரட்டல் சத்தங்களும் கூடவே வந்தன. அன்று தந்தையையும், சகோதரனையும் இழந்த நாம் இன்று அவர்களைப் போலவே உயிர் துறக்கப் போகிறோம் என்பதை நினைக்கும்போது மனம் வேதனையால் துடித்தது.

சில நிமிடங்களில் கதவு தானாகவே திறந்துகொண்டது. உள்ளே வந்தவர்களின் கைகளில் துப்பாக்கிகள், இரத்தம் படிந்த வாள்கள் போன்றவை இருந்தன.

இதனைக் கண்ட சிறியவள் நஸ்லியா சத்தமாக அழுதுகொண்டு வீட்டுக்குள் ஓடினாள். உள்ளே வந்தவர்களில் ஒருவன் கையிலிருந்த வாளை ஓங்கிக் கொண்டு என்னருகில் வர - நானும் பயத்தில் உரத்துக் கத்திக்கொண்டு ஓட முற்பட்டேன்...

அதற்குள்.......!

அதிர்ச்சியால் திடீரெனக் கண் விழித்துக் கொண்ட நான் சிறிது நேரம் யோசித்தேன். என் கண்களில் இருந்து வழிந்தோடிய நீர்த் துளிகள் முகத்தை நனைத்திருந்தது. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு எனது படுக்கையை விட்டு எழுந்து பார்க்கிறேன். தங்கை நஸ்லியும், எனது தாயும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

எவ்வித அசம்பாவிதங்களுக்கான அடையாளங்களும் அங்கிருக்கவில்லை....

அப்போ இதுவரையில் நான் கண்ட காட்சிகள் அத்தனையும்......?

...... ஸ்...ஊஹ்........

வெளியில் ஜன்னலினூடாகப் பார்த்தேன். பொழுது புலர்வதற்கு நேரம் இருப்பது போல் தோன்றியது. ஊரே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு மீண்டும் படுக்கைக்குச் சென்றேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ் ஒரு சாண்ட்விச் பயணம்

பிட்டகொட்டுவ.... பிட்டகொட்டுவ.... தெஹிவள... பம்பலப்பிட்டிய.... கொள்ளுப்பிட்டிய...கொட்டுவ..பிட்டகொட்டுவ...பிட்டகொட்டுவ

பஸ்ஸட்ட யுன்ன... பஸ்ஸட்ட யன்ன....

இஸ்ஸரஹ ஹோல்ட் பஹினவா......

இவை அன்றாடம் எமது காதுகளைக் கிழித்துக் கொண்டு செல்லும் வார்த்தைகள். ஆம்.... பல ஏச்சுப் பேச்சுக்களும் விவாதங்களும் பயணிகளுக்கும் தனியார் பஸ் வண்டிக் கண்டக்டர்களுக்குமிடையில் நடந்தாலும் கண்டக்டர்களின் வாயிலிருந்து வரும் அந்த மூல மந்திரங்கள்தான் நம் காதுகளுக்குள்ளேயே ஒட்டிக்கொண்டுவிட்டது போல் எப்போதும் எங்கும் ஒலித்தபடியிருக்கிறது.



இடித்துத் தள்ளியபடி ஏறி மூச்சுத் திணறிய வாறே இறங்க வேண்டும். அவ்வளவுக்கு நெரிசல். எந்தளவுக்கு சனத்தை ஏற்ற முடியுமோ ஏற்றி நெருக்கி, கூட்டத்துக்குள் முட்டி மோதி கால்கள் மிதிபட்டு, உடை கசங்கி கந்தல் துணியாகாத குறையாகப் பயணிகள் பஸ்ஸிலிருந்து வெளியே துப்பிவிடப்படுகின்றனர்.

தனியார் பஸ் வண்டிகளின் சாரதிகளுக்கும், கண்டக்டர்களுக்கும் பயணிகளின் ஏச்சுப் பேச்சுக்கள் செவிடன் காதில் ஊதிய சங்குகள்தான். வேண்டாத வார்த்தைகளால் திட்டிக் கொட்டுகின்றவர்களும், "இவங்களோட கதைக்கிறதே முட்டாள்தனம்" என்று பஸ்ஸிலிருந்து இறங்கிச்செல்பவர்களும் இருக்கிறார்கள்.

இப்படி தனியார் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்பவர்களுக்கும் கண்டக்டருக்குமிடையில் ஒரு தீராப் பகை இன்று உருவாகி வருகிறது.

"அவர்களுக்கு அறிவே இல்லை, மனிதர்களோடு புழங்கத் தெரியாதவர்கள், சமூகத்துள் வராதவர்கள்.... முன்பெல்லாம் கண்டக்டர்களாகத் தெரிவு செய்தது கல்வியறிவை வைச்சு... ஆனா....இப்பஅது அறவேஇல்ல.மாடு ஏத்துவது மாதிரி ஏத்துவான்கள்... பஸ்ஸிற்குள் ஏறிவிட்டாலோ பின்னர் சண்டித்தனம் காட்டத் தொடங்கிவிடுவார்கள்...."

தனியார் பஸ் வண்டிகளில் பயணஞ் செய்யும் அநேகர் கூறும் வார்த்தைகள்தான் இவை. தத்தம் வேலை நிமித்தம் உற்சாகத்தோடு காலையில் புறப்பட்டுச் செல்வோருக்கு, 'இப்படிப் போகத்தான்வேண்டுமா...'என்றகளைப்பையும், வேலை செய்த களைப்போடு சோர்வடைந்து மாலையில் வீடு திரும்பும் பயணிகளுக்கு, 'இது என்ன வாழ்க்கை...' என்ற வேதாந்த விசனத்தையும் இந்த மினிபஸ்காரர்கள் தருகிறார்கள்.

"என்ன மாதிரி அன்பாக பஸ்ஸினுள் ஏற்றிவிடுகிறார்கள். ஆனால் ஏறியபிறகு நாம் அடிமைகள் போலத்தான் நடத்தப்படுகிறோம்.

## தலையிடிப் பயணம்... பயணிகளின் தலைவிதி!

**மினி பஸ்....**

**இது இன்று இலங்கைப் பொது மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிட்ட வாழ்க்கைப் பங்காளன்!**

**பொதுவாழ்வின் அவலத்தைப் பிரதிபலிக்கும் தெருச்சின்னம்!**

**வாழ்வின் இழிநிலை பற்றிய யதார்த்தத்தைச் சதா உணர்த்தியபடியிருக்கும் கட்டியக்காரன்!**

**விதிக்கப்பட்ட வாழ்க்கைப் பயணத்தில் ஏறுவதும் இறங்குவதும் எம் கையில் இல்லை என்ற ஞானோதயத்தின் நவீன போதி மரம்!**

**எந்தக் கண்ணியமான மனிதருக்குள்ளும் உள்ள கயமைத்தனத்தைக் காட்டித் தரும் சோதனைக் கூடம்!**

**குறைந்த கட்டணத்தில் இயங்கும் மசாஜ் சென்டர்!**

**காசு கொடுத்துத் தண்டனை பெறும் நடமாடும் சிறைக் கூடம்!**

விரும்பியோ விரும்பாமலோ இன்று நம் பொதுமக்கள் தினம் தினம்பயணம்செய்தாக வேண்டிய தவிர்க்க முடியாத போக்குவரத்துச் சாதனம் மினிபஸ்!

ஆனால் இந்தப் பயணங்கள் ஒன்றும் உல்லாசப் பயணங்களாக எமக்கு அமைவதில்லை. தவிர்க்க முடியாது அனுபவித்தே தீர வேண்டிய நித்திய வேதனையாக நமக்கு அமைந்து விட்டது இந்த நாளாந்தம் பஸ் ஏறும் அவலம்!

நெரிசல், வியர்வை, புழுக்கம், காலுளைவு கை உளைவுடன் நம் பொதிகளையும் பொக்கற்றுகளையும் பாதுகாத்துக்கொண்டு பத்திரமாக வீடு வந்து சேரும்வரை ஒவ்வொரு பயணமும் எமக்குப் பெரும் சோதனைதான்.

இந் நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் கண்ணியமாகப் பார்க்கப்பட வேண்டியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நினைத்த இடத்தில் இருந்து கொண்டோ, நின்று கொண்டோ போக முடியாது. தட்டிக் கேட்டால் இறங்கிப் போ என்று கூட சொல்லி விடுவார்கள். என்ன செய்ய.... எமக்கென்றொரு தனியான வாகனம் இல்லாததால் அவர்களின் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு போகத்தான் வேண்டும்...'' என்றார் கொழும்பு பல்கலைக்கழக மாணவன் பாஸில்.

''எங்களைத் தொட்டுத் தடவித்தான் பஸ்ஸிற்குள் ஏற்றுகிறார்கள். சில கண்டக்டர்கள் பாலியல் சேட்டைகளிலும் ஈடுபடப் பார்க்கிறார்கள். உள்ளுக்கு ஏறினால் ஆண்பயணிகளின் இதே தொல்லை.... நாங்கள் கவனிப்பதில்லை என நினைத்து சிலர் எமது இடைக்குள்ளும் கையை விடுகிறார்கள்...'' என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பெண் கூறினார்.

''நாங்கள் இறங்க வேண்டிய ஹோல்ற்றில் இறக்கிவிட மாட்டாங்க... எங்கயோ கொண்டு போய்த்தான் இறக்கி விடுறாங்க.... கேட்டால், காதுக்குக் கேட்கக்கூடியதாய் இறங்க வேண்டுமென்று சொல்ல வேண்டாமா என்று கேட்கிறார்கள்.... மீதிச் சில்லறைக் காசைத் தருவதே இல்ல. அது அவர்களின் பொக்கெற்றுக்கு....'' என்றுகுமுறினார் பெரியவர் ஒருவர்.

இப்படி பயணிகளிடம் நாம் பிரச்சினைகள் பற்றிக் கேட்டுக்கொண்டு, இறங்க வேண்டிய இடத்தில் இறங்க முயற்சித்த பொழுது ஒரு கை நம் முதுகைத் தட்டியது. திரும்பிப் பார்த்தோம். நம்மிடம் பஸ் பயணத்திற்குக் காசு வாங்கிய அந்த கண்டக்டர்.... முகத்தில் ஒரு வித சோகம்.... களைப்பு.... பரிதவிப்பு.... ஆத்திரம். எல்லாவற்றிற்கும் மேலாக எதையோ சொல்ல வேண்டுமென்ற ஆதங்கம்... எல்லாம் சேர்ந்து அவரைப் பேச வைத்தது.

''ஸேர்.., என்ன அவங்ககிட்டே எல்லாம் கேட்டுக்கொண்டு போறீங்க.... எங்களிடம் ஒன்னுமே கேட்க மாட்டீங்களா... நாங்க என்ன மனிதர்களில்லையா.... தொழில் செய்கிறவர்களில்லையா.... என்று கவலை தோய்ந்த முகத்தோடு கேட்டார். எமக்கு நேரம் இடம் கொடுக்கவில்லை. இறங்க வேண்டிய இடம் வந்துவிடவே 'பிறகு வருகிறோம்' என்று இறங்கிவிட்டோம்.

''நாங்கள் யாரோடும் சண்டை பிடிக்க வேண்டும் என ஆசைப்படுகிறவர்களில்லை. ஆனா... எங்கட தொழில் அப்படி சேர்.... நாங்களும் உங்கள மாதிரித்தான் படிச்சிருக்கோம்.... வேற தொழில் கிடைக்காததால் இதுல சேர்ந்தேன்.... குடும்பம், பிள்ளை குட்டின்னு வந்துட்டா வயிற்றுப் பசிக்கு ஏதாவது செய்தாகணுமே....

ஏன் எங்கள மட்டும் ஏசுறீங்க.... ஒங்கட குறையை சொல்ல மாட்டீங்களே சேர்...




Photos by : Indrajith Perera



எங்கட தொழிலுக்கு... நாங்க கொஞ்சம் காரமாத்தான் நடந்துக்கணும். இல்லாட்டி பலர் காசு தராமலேயே போயிடுவாங்க தெரியுமா....''

தங்கள்பிரச்சினைகளைஅடுக்கிக்கொண்டே போனார் அஜித் என்ற கண்டக்டர்.

''இப்பொழுதெல்லாம் பஸ்ஸில் கட்டாயம் டிக்கட் கொடுக்கப்பட வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளதல்லவா... அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்...'' என்று ஒரு கண்டக்டரிடம் கேட்டோம்.

எங்களைப் பொறுத்தவரைக்கும் இது ஒரு பெரிய சுமைதான்.... காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் ஏறுகின்ற சனத்துக்கு டிக்கட் கொடுத்துக் கொண்டெல்லாம் இருக்க முடியாது.... ஆனால் சட்டம் போட்டதினால அதை நாங்க கடைப்பிடிக்கத் தானே வேண்டும்...''

இதே கேள்வியை அதே பஸ்ஸில் பயணஞ் செய்த ஒரு பிரயாணியிடமும்

கள், அவர்கள் குற்றவாளிகளோ, ஆடு மாடுகளோ அல்ல என்ற எண்ணம்,

அவசரகாலச் சட்டத்தை மட்டுமே அறிந்து வைத்திருக்கும் எம் காவல் துறையினருக்கு இல்லாது போனது போலவே.....

போக்குவரத்துச் சேவை என்பதை, ஏதோ கதியற்றவர்களுக்குத் தாம் செய்யும் தர்ம உதவி போல் எண்ணிக்கொள்ளும் மினிபஸ் காரர்கள் பலருக்கும் இல்லை.

''காசு வாங்கியுள்ளோம்'' என்ற சிந்தனையோ, பயணிகள் ஒவ்வொருவரும் 'கௌரவமான வாடிக்கையாளர்கள்' என்ற மதிப்போ இன்றி, அன்னதானத்துக்காகத் திறந்துவிட்ட மடமொன்றுக்குள் புகுவதற்கு முண்டியடிக்கும் பிச்சைக்காரர்கள் போல் பஸ் ஏறும் பயணிகள் பார்க்கப்படுகிறார்கள்.

பஸ்ஸினுள்ளே ஏறிக் காசைக் கொடுத்ததும் பின்னுக்குப் போகும்படி விரட்டப்படும் பயணிகள், தாம் இறங்க வேண்டிய இடத்தில் இறங்க முடியாது ஓரிரு பஸ் தரிப்புகள் தள்ளிப் போய் இறங்கும் அனுபவத்தை அடிக்கடி சந்திக்கிறார்கள்.

அனேகமான மினி பஸ்களுக்கு ஒற்றைக் கதவுதான். ஏறுவோரும் இறங்குவோரும் முட்டி மோதிக்கொள்ள பின்னால் சென்றவர்கள் தத்தளிக்க வேண்டிய நிலை.

கண்டக்டர்களிடம் 50 சதம்மிச்சக்காசுக்கு, ''இல்லை'' என்ற சொல்லைக் கேட்காத பயணிகள் எவருமே இல்லை என்று சொல்லிவிடலாம். மிச்சக் காசைப் பிச்சைக் காசுபோல் கூனிக் குறுகிக் கேட்கக் கூசும் பலருக்கு ஒருபோதும் அது கிடைப்பதேயில்லை.

பலமினிபஸ்களில் ரிக்கெற் வழங்குவதில்லை. வேகத்துடன் வெட்டியோடும் எந்த மினி பஸ்ஸாவது விபத்துக்குள்ளானால் அதில் காயப்பட்டவர்களுக்கோ, இறந்தவர்களுக்கோ நஷ்ட ஈடு கோர, அந்த மினி பஸ்ஸில்தான் அவர்கள் பயணித்தார்களெனக் காட்டும் ஒரேயொரு ஆதாரமான ரிக்கெற் கூட இல்லாத இப் பயணம் ஒவ்வொன்றும் பெரும் வாழ்க்கைச் சவாலைத் தேக்கிய ஒன்றாகவே கடக்கின்றது.

இதற்கு அப்பால் மினிபஸ், தன் பயணிகளுக்கு காப்புறுதி செய்துள்ளதா என்பதுவும் உறுதிப்படுத்தப்படுவதாக இல்லை.

பிஸியான நேரங்களில் ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக ஒரே ரூட்டில் ஓடித்திரியும் மினிபஸ்கள், அவசரமாகத் தேவைப்படும் பின்னிரவு அல்லது அதிகாலை நேரங்களில் சில ரூட்டுகளில் காணாமல் போய்விடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டோம். "நாங்கள் எடுக்காவிட்டால் இவர்கள் எங்களை சும்மா விடப் போறதில்ல. ஏற முதல்ல காசைத்தானே வாங்குறாங்க. பிறகு எதுக்கு டிக்கட் ஒன்று...."

"ஒரு சில மணி நேரம் எங்களது தொழிலைச் செய்து பாருங்கள். நீங்கள் செய்கிற தொழில் எவ்வளவு இலகுவானது என்பது விளங்கும். எங்களை மடையர்கள், நாய்கள், பொறுக்கிகள் என்றெல்லாம் முகத்தைப் பார்த்தே ஏசுகிறார்கள். அப்படி ஏசுகிறவர்கள் இந்த சனத்துக்குள் நெரிபட்டு, ஒரு நாளில் ஓரிரண்டு மணித்தியாலங்கள் பயணம் செய்யலாம். ஆனால் நாங்கள் அப்படியா? முழு நாளுமே நின்று கொண்டு, தொண்டைத் தண்ணீர் வற்றும் வரை கத்திக் கொண்டு, தொங்கிக் கொண்டே பயணம் செய்கிறோமே... இது ஒரு நாளைக்கு மட்டுமா..." என்று மிக வேதனையோடு கேட்டார் புறக்கோட்டை - மொரட்டுவை தனியார் பஸ் வண்டியொன்றில் கண்டக்டரான சோமசிறி.

முழு நாட்டிலும் பரவலாக தனியார் பஸ் வண்டிகளில் சுமாராக 40,000 பேர் வரையில் தொழில் செய்கிறார்கள். நாட் கூலிக்கு வேலை செய்யும் இவர்கள் மழை, குளிர், வெயில், இரவு, பகல் என்று சிந்திப்பதற்கே வாய்ப்பற்றவர்களாக இன்று சமூகத்தில் வாழ்வது வருத்தப்பட வேண்டிய விடயமே.

"பாருங்கள் சேர்... சனமே இல்லாம சும்மா வாசல மறைச்சிக்கிட்டு இருந்தா எங்களுக்கு கோபம் வராமலா இருக்கும். சிலர் வம்புக்கென்றே நின்ற இடத்தில் அப்படியே நின்று கொண்டேயிருப்பார்கள். அவங்கள பின்னுக்குப் போகச் சொன்னா எங்க மீது பாய்கிறாங்க. எங்களுக்கும் சனம் ஏறினாத்தான் லாபம்.... ஃபினான்ஸ், சேர்விஸ், தேய்மானம், வாகன வரி எனச் செலவுகள் கூடிக்கொண்டே போறதால எவ்வளவுதான் தேடிக் கொடுத்தாலும் எங்க முதலாளிமாருக்குப் போதாது.... ஏன் எங்களை மட்டும் குறை கூறுரீங்க" என்றார் சிவம் என்ற கண்டக்டர்.

"காலை மாலை நேரத்தில் நாங்கள் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல ஏறுகிறார்கள். எப்படியோ அவர்களையும் கூட்டிச் செல்ல வேண்டுமே என்பதற்காக நாம் மிதி பலகையில் தொங்கியபடி பயணஞ் செய்கிறோம். சில பெண்கள் எங்களுக்கு ஏசுகிறார்கள். அவங்களோட சேட்டை பண்ணுவதற்கெல்லாம் அந்த நேரத்துல எங்களுக்கு எப்படி மூட் வரும்?" என்று கேட்டார் 138ம் இலக்க பஸ் வண்டியொன்றின் கண்டக்டர்.

வேறு வருமானங்கள் எதுவுமின்றி, அன்று தேடுவதை அன்றே சாப்பிட்டு முடித்துவிடும் இவர்களுக்கு நோய் ஏதும் ஏற்பட்டு விட்டால் வேலை கூட பறிபோகும் நிலைதான்.

அதிகாலையிலேயே எழுந்து சென்று நெரிசலுக்குள் மாடாய் உழைத்து, இரவில் வந்து பஸ்ஸைக் கழுவிவிட்டு மீண்டும் அதிகாலையிலேயே வேலைக்குச் செல்லும் எத்தனையோ கண்டக்டர்களைத்தான் நாம் கண்டு கொண்டிருக்கிறோம். சரியான நித்திரையின்றி, முழு நாளுமே வருத்தப்படுபவர்களின் பட்டியலில்



இவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

8 மணித்தியால வேலை என்றோ, அதற்கு மேல் வேலை செய்தால் மேலதிகப்படியென்றோ எதுவும் இவர்களுக்கு இல்லை.

கண்டக்டர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 200 ரூபா கொடுக்கப்படுகிறது. பெரிய பஸ்களில் 250 வரையில் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக பஸ்ஸிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்து உணவு வசதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஒரு நாளைக்கு அவர்கள் படும் சிரமம், சிந்தும் வியர்வை, அடையும் களைப்பு எல்லாவற்றுக்கும் 200 ரூபா என்பது ஒரு சின்னத் தொகையே....

40,000 குடும்பங்களைப் பாதுகாக்கின்ற இந்த 40,000 தொழிலாளர்களுக்கென்று எந்தவித காப்புறுதிகளும் இல்லாத நிலையில் 20 வருடங்களைக் கடத்திவிட்டார்கள்.

பயணிகளைப் பொறுத்தவரை, கண்டக்டர்களின் தொழிலுக்கும் மதிப்பளிக்க வேண்டும். கொஞ்சம் சிந்தியுங்கள், எமது அலுவலகங்களுக்கு யாராவது வந்து கண்டபடி திட்டினால் நாம் பொறுமையாக இருப்போமா? எமது கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று நாமும் அவர்களைத் திட்டுவோம் தானே... அதேபோலத்தான் கண்டக்டர்களும். யாருமே தத்தம் தொழிலின் கௌரவத்தை இழக்கத் தயாரில்லை.

அதே நேரம் மினிபஸ் நடத்துனர்களும்....
சோர்ந்து களைப்படைந்து, அசதியோடு வீடு திரும்பும் பயணிகளுக்கு கண்டபடி பேசினால் அவர்களும் வாய் பேசா ஜீவன்கள் போல சும்மா இருக்க மாட்டார்கள் என்பதை உணர்வதோடு, அவர்கள் இலவசமாக பிரயாணஞ் செய்வதில்லை. காசு கொடுத்துத்தான் பயணஞ் செய்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. •

**- ஹிஷாம்**

சிலவேளை ஒன்றை ஒன்று முந்தியபடி அதிவேகமாகப் பறக்கும் மினிபஸ்கள் இன்னும் சில வேளைகளில் ஒவ்வொரு தரிப்பிடத்திலும் பத்துப் பதினைந்து நிமிடங்கள் தூங்கி நின்று கத்திக் கத்தி அழைத்தபடி நேரத்தைத் தம் இஷ்டப்படி சாப்பிட்டு எம் பொழுதை அபகரித்து விடுகின்றன.

எம் நகரங்களில் ஓரளவு முகடு உயர்ந்த மினிபஸ்கள் ஓடினாலும் பல கிராமங்களிலும், தூர இடங்களிலும் இன்றும் முகடு முட்டும் "கோழிக்கூட்டு" வேன்களே போக்குவரத்துக்கு விடப்பட்டுள்ளன. இதில் தலை குனிந்து முடங்கிய நிலையில் அரை மடிப்பாகத் திணறியபடி பேழையில் உறங்கும் பாம்பெனச் சுருண்டு தொங்கியபடி பயணிக்கும் பயணிகளின் ஒவ்வொரு மூச்சும் இழைத்துச் சோர்ந்த வாழ்க்கைப் பெருமூச்சாகத்தான் இருக்கும்.

ஏறுபவர், இறங்குபவர், மிதிப்பவர், நசிப்பவர் பற்றிய உணர்வற்ற ஒரு தியான நிலைக்குப் பழக்கப்பட்டுப்போன மக்களுக்கு கண்டக்டர்களின் நச்சரிப்புகளுக்கும் கெடுபிடிகளுக்குமான பதில் மனதுக்குள்ளான முணுமுணுப்புகளாக மட்டும்தான் அமிழ்ந்து கிடக்கிறது.

இந்த நிலைக்காகிவிட்ட எம் அன்றாடப் பயணத்தின் கதிக்கான காரணங்கள் பலவற்றைக் கூறிக்கொள்ளலாம். இங்குள்ள கட்டுரையில் முறைப்பட்டுள்ளது போல மினிபஸ் நடத்துனர்கள், ஊழியர்கள் பக்கத்திலும் பல்வேறு நியாயங்கள் இருக்கலாம்.

ஆனால்.....

அந்த நியாயங்களுக்காக ஒரு நாட்டின் கௌரவமான பிரஜைகள் யாவருக்கும் அத்தியாவசியமான ஒரு சேவை இப்படி இழிநிலை எய்த வேண்டுமா என்பதே பெரியதொரு கேள்விக்குறியாக எம் முன்னாலுள்ளது. •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

மார்ச் '99



அழகு
சற்றே திரும்பி
விழியெறிந்தால்
உலகு............
சொக்கி நின்று விடுமா
அசைவற்று !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

சேமிப்புச் சான்றிதழ்களுக்கு

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

**11%**

செமிப்பு கணக்குகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லி மி ட் ட ட்
PRAMUKA BANK
*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான நகீரக் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நூற்றாண்டுப் புரட்சிகள்
**எழுச்சியும் வீழ்ச்சியும்**



# ஆசியாவில் ... செஞ்சீன எரிமலை!

1911ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு நாள் மாலை சீன தேசத்தின் **ஹுனாங்** பள்ளத்தாக்கில் பாய்ந்து ஓடிய ஒரு ஆற்றில் அந்த அந்தி மங்கிய வேளையில் ஒரு ஓடம் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது. சீன மக்கள் அக்காலத்தில் பயன்படுத்திய அந்த பாரம்பரிய ஓடத்தில் சில இளைஞர்கள் மிக இரகசியமாகக் கூடியிருந்தனர். உலகத்தின் மிகப் பெரிய பொறுப்பொன்றைத் தமது தலையில் சுமப்பதுபற்றியே அவர்கள் அப்போது தமக்குள் பேசிக்கொண்டனர்.

இவ்விளைஞர்களுக்கு வழிகாட்டுபவராக இருந்தவர் பேராசிரியர் **செந்தோசியோ** என்பவரே. பிற்காலத்தில் உலகின் மாபெரும் மனிதர்களில்


கொன்பியூஸியஸ்

ஒருவராகக் கருதப்பட்ட **மாவோ சேதுங்** என்பவரும் அவ்வந்தி மங்கிய வேளையில் அவ்விளைஞர்களிடையே ஓர் இளைஞராக இருந்தார்.

இரு நூற்றாண்டுகளுக்கும் மேலாக கொடிய வறுமையையும், நோய் நொடிகளையும், கல்வியின்மையையும் மட்டுமே தமக்குச் சொந்தமாகக் கொண்டிருந்த சீன சமுதாயம் ஒரு இருண்ட யுகத்துள் அன்று அமிழ்ந்து கிடந்தது. அக்காலகட்டத்தில் அந்நாட்டின் தலை விதியை மாற்றிய மைக்கவென புதிதாக உதித்த இந்த இயக்கத்தை நோக்கி சீனாவின் இளைஞர் சமுதாயம் வெகுவாக ஆகர்சிக்கப்பட்டது.

சுறுசுறுப்பும், வேகமான செயற்றிறனும், ஆக்கத்திறனுடன் கூடிய அர்ப்பணிப்பும், ஒருங்கு சேர இருந்ததன் காரணமாக ஒரு விவசாயியின் மகனாக இருந்தும் கூட **மாவோ சேதுங்** இந்த புரட்சி இயக்கத்தின் தலைவன் என்ற தகைமையை மிக இயல்பாகவே பெற்றுக்கொண்டார். ஆசிரியராகப் பணியாற்றிய மாவோ சேதுங் நில பிரபுத்துவ இருளுள் அமிழ்ந்து கிடந்த அந்த சீனச் சமூகத்தில் வேகமாகப் பரவிய புரட்சி இயக்கத்தை வழிநடத்தும் பணியையும் இயல்பாகவே ஏற்றுக்கொண்டார். அவரைப் போலவே ஏனைய சீனப் புரட்சியாளர்களும் ரஷ்யப் புரட்சியின் அனுபவங்களை அப்படியே சீன சமூகத்தினுள் மீண்டும் செய்து பார்க்கும் முயற்சியில் இறங்கவில்லை. மாறாக தமது நாட்டுக் கேயுரிய தனித்துவத் தன்மைகளை கணக்கில் கொண்டு புதிய வழிமுறைகளின் திசையில் அவர்கள் செயற்பட்டனர்.

**"பூமியின் இதயத் துடிப்பையும், அதன் வாசனையையும் நீ உணர்ந்து கொண்டால் இப்பூமி உனக்கு நிச்சயமாக வழிகாட்டும்"** என மாபெரும் சீன சிந்தனையாளர்களில் ஒருவரான **கொன்பியூஸியஸ்** என்பவர் கூறினார். சீனப் போராளிகளும் தாம் மற்றவர்களுக்கு கற்பித்துதாமும் கற்றுக்கொண்டு, மீண்டும் கற்பித்து முன்னேறுவதும், பின்வாங்குவதும் மீண்டும் முன்னேறுவதுமாக இறுதியில் முன்னோக்கியே தமது பயணத்தை மேற்கொண்டனர். அவர்களின் பயணத்தின் முதல் 5 வருடங்களை கடக்கின்ற பொழுது அன்று சீனாவில் இருந்த மிகவும் ஜனநாயக விரோதமான ஒரு புதுவிதமான இராணுவ மன்னராட்சியாளனின் கண்களை உறுத்தும் நிலைக்கு வளர்ச்சியடைந்திருந்தார்கள். ஆனால் அக்கால கட்டத்தில் சீனாவில் இருந்த நிலப் பிரபுத்துவ, முதலாளித்துவ ஆட்சி முறைக்குள் ஜனநாயகமென்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்களும் இப்புரட்சியாளர்களே.

இதேவேளை சமகால சீன வரலாற்றில் மிக முக்கிய பங்களிப்பைச் செய்த ஒரு மனிதனைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். அவர் தான் **யுங் யெத் செங்** என்பவராவார். எவ்வளவு குறைபாடுகள் இருப்பினும் யுங் யெத் செங் அவர்களின்


யுங் யெத் செங்

தலைமைத்துவத்தின் கீழ் தான் சீனாவில் முதலாளித்துவப் புரட்சி நடந்தேறியது. ஆனாலும் அப்புரட்சியின் முழுப் பயனையும் சீனா அனுபவிப்பதற்கு முன்னரே திடீரென ஏற்பட்ட புற்றுநோயினால் யுங்யெத் செங் அவர்கள் இறந்து போனார்....

வரலாற்றிலே வழமையாக நடைபெறுவதைப் போலவே அவரால் கட்டியெழுப்பப்பட்ட **குவோமிங் தாங்** என்னும் கட்சியையும் அதன் கொள்கைகளையும் சீரழிக்கின்ற விதத்தில் அக் கட்சியின் தலைமைத்துவத்தை அரசியல் கொள்ளைக்காரர்களும் சந்தர்ப்பவாதிகளும் கைப்பற்றிக் கொண்டனர். அவ்வாறு குவோமிங் தாங் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றிய இராணுவ ஆட்சியாளனின் பெயர் தான். ***சீயெங் காய் செக்.*** சீனாவில் புதிதாக இயங்கத் தொடங்கிய இளம் புரட்சியாளர்கள் நேரடியாக மோத வேண்டியிருந்தது இவ் இராணுவ ஆட்சியாள னுடனேயே.

சீனா நாம் அறிந்ததைப் போலவே ஒரு விசாலமான தேசமாகும். ஒரு வகையில் அது சீனப் புரட்சியாளர்களுக்கு பல வழிகளில் பாதுகாப்பைத் தேடித் தந்தது. தமது போராட்டத்திற்கான வீரர்களையும், உணவுமற்றும் ஏனைய வளங்களைப் பெறுவதும் தமது புதிய முறையான ஆட்சி முறையை ஒத்திகை செய்து பார்ப்பதும் அதன் அனுபவத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும் போன்ற இன்னோரன்ன செயல்களை அரசாங்கத்தின் கெடுபிடி மோசமாக இல்லாத பிரதேசங்களில் சென்று செய்து பார்க்க சீனப் புரட்சியாளர்களால் முடிந்தது.

அதுமட்டுமன்றி தேசத்தின் விசாலத் தன்மையையும் போராட்டம் வெற்றி பெறுவதற்கு எடுக்கக் கூடிய காலத்தையும் கணக்கில் கொண்டு ஒரு நீண்ட கால புரட்சிகர யுத்த முறைக்கான தமது அடிப்படை தள முகாம்களை இவ்விளம் புரட்சியாளர்கள் கிராமங்களிலே அமைத்துக் கொண்டனர். இதன்படி சாங் எனும் மலைப் பள்ளத்தாக்குப் பகுதியிலேயே அவர்களது முதலாவது அடிப்படைத் தள முகாம் நிறுவப்பட்டது. சீன மக்கள் விடுதலை இராணுவம் தனது முதலாவது போராட்டத்தை ஆரம்பித்ததும் இவ்விடத்திலிருந்து தான்.


சீயெங் காய் செக்.

சீனப் புரட்சியாளர்கள் ஆரம்பம் முதலே எல்லாவற்றையும் புதிதாகச் சிந்தித்து செயற்படுத்த வேண்டியவர்களாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புறம் குவோமிங் தாங் ஆட்சியாளர்களுடன் போராடி தமது **சமூகத்தை** அடிமைத்தளையிலிருந்துமீட்கவேண்டும்.மறுபுறம்நாட்டை ஆக்கிரமித்திருக்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துடன் போராடி தமது**தாய்நாட்டை** மீட்கவேண்டும். தேசத்தைக் காக்கும் போராட்டத்தில் ஆக்கிரமிப்பாளனுக்கெதிராககுவோமிங்தாங்உடன் இணைந்து போராடும் அதே வேளை மறுபுறம் தமது சமூக விடுதலைக்காக தனியாக குவோமிங் தாங் உடனும் போராட வேண்டும். ஒரு முறை எதிரியாக இருப்பவன் இன்னொரு கட்டத்தில் நண்பனாகவும் இருக்கின்றான் என்கிற புதிய நிலைமைக்குஏற்பபுதியதத்துவங்களை,வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டிய நிலை இப்புரட்சியாளர்களுக்கு ஏற்பட்டது.

மிகவும் பலம் பொருந்திய ஒரு இராணுவமாக மாறிய பின்பு ஆரம்பத்திலேயே குவோமிங் தாங் அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டாக ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கெதிராக போராட வேண்டிய நிலை **சீன செம்படையினருக்கு** ஏற்பட்டது. இது அவர்களின் கட்சிக்குள் பாரிய கருத்து மோதலை ஏற்படுத்திவிட்டது. குவோமிங் தாங் அரச படையினால் கொல்லப்பட்ட தமது புரட்சிகரத் தோழர்களுக்கு நாம் செய்யும் பாரிய துரோகமாக இது அமையாதா என அக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கூட கடுமையாக பிரஸ்தாபிக்கப்பட்டது. **"எதிரியின் எதிரி எமது நணபன்"** என்கின்ற மிக ஜனரஞ்சகமான கோட்பாடு இக்கட்டத்தில்தான் உருவானது. எமது **பிரதான எதிரியையும் அடிப்படை எதிரியையும்** வெவ்வேறாக நாம் இனம்காண வேண்டும் எனவும் அடிப்படை எதிரியை நாம் மறந்துவிடக் கூடாத அதே வேளை எப்போதும் பிரதான எதிரியுடனேயே நாம் போராட வேண்டும் என மாவோ சேதுங் அவர்கள் தமது கட்சிக்குக் தெரிவித்தார்.

பிரதான எதிரியானவன் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வேறுபடுவான் என்கின்ற அதே வேளை அடிப்படை எதிரியே பிரதான எதிரியாக மாறுகின்ற கட்டத்தில் எமது போராட்டமானது அவ்வடிப்படைஎதிரியோடேயேநடைபெறவேண்டும் என மாவோ மேலும் தமது வழிகாட்டலைச் செய்தார். ஜப்பானியஏகாதிபத்தியத்திடமிருந்து சீனாவை (தாய்நாட்டை) காப்பாற்றுகின்ற **தேச பக்த யுத்தத்தில்** அடிப்படை எதிரியோடு செய்கின்ற வர்க்கப் போராட்டத்தை சற்றே நிறுத்தி சம்பிரதாய கோட்பாடுகளிலிருந்து வேறுபட்டு அடிப்படை எதிரியோடு ஒன்றிணைந்து ஜப்பானியஏகாதிபத்தியத்துக்கெதிராகபோரிட வேண்டும் என அவர் உறுதியாகக் கூறினார். இதன்படி அதுவரை காலமும் மார்க்ஸிய கருத்துத் தளத்தில் போராட்ட சக்திகளுக்கிடையேயான முரண்பாடுகள் பற்றி சிலாகிக்கப்பட்ட கருத்துக்கு ஒரு புது அர்த்தம் கற்பிக்கப்பட்டது. மார்ஸிய சிந்தனை வட்டங்களில் (Schools) மாவோவின் இக் கோட்பாடு பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தினாலும் கூட இத்தாலியைச் சேர்ந்த**மக்கியாவல்லி** என்னும் அரசாட்சி தந்திரங்கள் பற்றியநிபுணரின் கோட்பாட்டின்படி மாவோவின் கருத்து மிகச் சரியானதே.

சீன தேசத்தை ஜப்பானியரிடமிருந்து காப்பாற்றி அதனை அபிவிருத்தி செய்வதற்கான பலம் குவோமிங் தாங் அரசாங்கத்துக்கு இல்லாவிட்டாலும் கூட அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக களத்தில் இறங்கியிருக்கும் ***சீனப் புரட்சிகர செம்படையை*** அழித்து விடுவதற்குத் தேவையான பலம் குவோமிங் தாங் அரசாங்கத்திடம் இருந்தது. ஒரே நேரத்தில் இரண்டு


மாவோ சேதுங்

முனைகளில்போரிடுவதென்பதுஎப்போதும்செய்யக்கூடாதது. அதே வேளை ஒருவரோடு இணைந்து மற்றவரைகத் தோற்கடித்துவிட்டு பின்னர் இரண்டாமவனோடு போராடி அவரைத் தோற்கடிக்கவேண்டுமென்பதுதான்மக்கியாவல்லியின் தந்திரமாகும். எப்போதும் போராடும் பொழுது தமது இராணுவப் பலத்தையும்; தமது ஆட்சிக்குரிய பூமிப் பிரதேசத்தையும் பெருக்கிக் கொள்வது மிக முக்கியமானது என மக்கியா வல்லி மேலும் வலியுறுத்தியிருக்கிறான்.

சீனப் புரட்சியாளர்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் முகங்கொடுத்த அரசியற் சூழ்நிலைகளில் மேற்சொன்ன அவர்களின் தந்திரத்தைத்தான் பாவிக்க வேண்டியிருந்தது.

"புரட்சி என்பது ஏதோவொரு பாடத் தொடரை வாசித்து மனனம் செய்து கேள்விகளுக்கு பதில் எழுதுவது போல் ஒரு செயற்பாடல்ல. மாறாக ஆரம்பித்த இடத்திலிருந்து தொடர்ச்சியாக புதிது புதிதாக கற்றுக்கொண்டு கூட்டாகச் செயற்படுத்த வேண்டிய ஒரு பணி என மாவோ சேதுங் ஒரு பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடம உரையாற்றும்போது கூறியிருக்கிறார். (புரட்சிக்குப்பிற்பட்டகாலத்தில் 1962ல்).

1916ம் ஆண்டில் கட்சிக்குள்ளே பல்வேறு கருத்து மோதல்களுக்கிடையே போராட்டம் முன்னோக்கிநகர்ந்து கொண்டிருந்தது. மாவோ சேதுங் அவர்களின் சொந்த ஊரான***சியாங் ஆன் சியேன்*** அமைந்திருந்த **ஹு"னாங்** பிராந்தியத்திலிருந்து ஒரு விவசாயியின் மகனாகப் பிறந்து சுரங்கத் தொழிலாளியாகப் பணிபுரிந்த **பென்தே ஹு"ங் துங்** என்னும் இளைஞன் சீன செம்படையிலே சேர்ந்தான். (புரட்சியின்பின்புமக்கள்சீனத்தின் முதலாவது பாதுகாப்பு அமைச்சரானார்) புரட்சிப் படையின் முதலாவது தளமுகாமின் கட்டளை அதிகாரியாகவும் மிகவும் சூரத்தனமான, தளபதியாகவும் **ஹு"ங் துங்** திகழ்ந்தார்.

சில ஆண்டுகள் உருண்டோடியதன் பின்பு ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரானயுத்தம்முடிவுக்குவந்துகொண்டிருந்த போது கொமிங் தாங்கின் இராணுவமானதுசீனச்செம்படையைஓடஓடத் துரத்தித் தாக்கியது. புரட்சியாளர்களை சுற்றி வளைத்து அழித்துவிடும் பணியில் குவோமிங்தாங்படைஇறங்கியது.மாவோ சேதுங்தனதுஅடிப்படைஎதிரிக்குஎதிராக எந்தஉத்தியைப்பாவிக்கநினைத்தாரோ (எதிரியின் எதிரி என் நண்பன்) அதே உத்தியை அடிப்படை எதிரியான குவோமிங் தாங் அரசின் தளபதி சியங்காயி சேக் என்பவன் சீன செம்படைக்கு எதிராகப் பாவிக்கத் தொடங்கினான். சீனாவின் மக்கள் செம்படையும், குவோமிங் தாங் அரசாங்கத்தின் படைகளும் சீனாவின் நான்கு பிராந்தியங்களில் இரத்த ஆறு ஓடுகின்ற கொடிய யுத்தத்தில் ஈடுபட்டன. இவ் யுத்தத்தின்போது மாவோ சேதுங் இன் செம்படை படிப்படியாக பின்வாங்கிச் செல்ல நேரிட்டதுடன் அது அவர்களுக்கு கொடுமையானதும், அழிவுகரமானதுமான அனுபவமாக இருந்தது.

அப்பொழுது சுமார் 26 இலட்சமாக இருந்த செம்படையினரின் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைய ஆரம்பித்தது. இக் கொடூரமான அனுபவத்திற்கு மிகத் திறமையாக முகங் கொடுத்த ஒரு தளபதிதான் **பென்தே ஹு" துங்** என்பவர். 1926ஆம் ஆண்டில் சீனாவின் யுத்த பிரபுகளுக்கெதிரான போரில் 35வது இராணுவ அணிப்படையின் கட்டளை அதிகாரியாகவும் பென்தே ஹு" துங் பணியாற்றினார். •

*(சீனப்புரட்சியின்முதலாவதுகொடியஅனுபவம் அடுத்த அமுது இதழில்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மைசூர் மானச கங்கோத்திரி பல்கலைக் கழகத்தில் கன்னட ஆய்வுத் துறையில் பேராசிரியராகப் பணிபுரியும் அரவிந்த மாளகத்தி கன்னட தலித் இலக்கியப் படைப்பாளிகளில் முக்கிய மானவர். "கவர்ன்மென்ட் பிராமணன்" என்னும் இவரது சுயசரிதை கன்னட மொழியில் எழுதப்பட்ட முதல் தலித் யசரிதையாகும். பாவண்ணன் தமிழில் ாழிபெயர்த்துள்ள இச் சுயசரிதையிலி ந்து ஓர் அத்தியாயப் பகுதி...**

# "மஞ்சள் நீர்" என்னும் ஈஸ்ட்மென் கலர் படம்



தலித்துக்கள் வாழும் சேரிக்கும் ஊருக்கும் ஆச்சரியமான விதத்தில் சில உறவுகள் உண்டு. அந்த உறவுகள் தலித்துக்களைப் பாதிக்கும் வகையிலும் தலித்துகள் அல்லாதமற்றவர்களுக்குஆதாயம் தரும் வகையிலும் இருக்கின்றன. ஊருக்குள் நிகழும் ஒவ்வொரு காரியத்திலும் தலித்துக்களுக்கு இடம் தரப்படுகிறது என்கிற சாக்கில் அவர்களுடைய வாழ்க்கையே பாக்கை வெட்டுகிற மாதிரி வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கிறது.

இப்போது ஜனநாயக அமைப்பில் கீழ் மட்டத்து வேலைகளில் தலித்துக்கள் நிறைந்திருப்பதைப் போல, இதற்கு முன்னர் பழங்காலத்தில் ஊர்க்காரர்களின் கீழ் அடிமட்டத்து வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வகையில் மனத்தைஉருக்கும் சம்பவம் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் சேரிப் பெண்களுக்கு ஆவணி மாதத்தில் நடக்கும், மஞ்சள் நீர் என்றால் ரொம்பவும் கொண்டாட்டந்தான். சுற்றுமுற்றுமிருந்த ஊர்களிலேயே பிதரகுந்தி என்னும் இடத்தில் நடக்கும் மஞ்சள் நீர் மிகவும் பிரசித்தமானது. இந்த விசேஷத்தில் பங்கு கொள்வோரில் பெரும்பாலானோர் சேரிப் பெண்களே.

திருவிழா நடக்கும் விதம் இதுதான்: தலித் பெண்கள் ஜாக்கெட்டுகளைக் கழற்றிவிட்டு வெறும் புடவையைக் கட்டிக் கொண்டிருப்பார்கள். இடுப்பில் புடவையைச் சுற்றிக் கொண்டு முந்தானையை இழுத்துத் தலை வரைக்கும் போர்த்தி இருப்பார்கள். அவர்களுடைய கைகளில் இரண்டு மூன்று அடி நீளமுள்ள தடிகள் இருக்கும். இவர்களுக்கு எதிரில் இன்னொரு கும்பல். இக்கும்பலில் தலித் அல்லாத மற்றும் பிராமணர்கள் அல்லாத பிற சாதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் மட்டும் இருப்பார்கள். வேட்டி மட்டும் அணிந்திருப்பார்கள். கையில் செம்பு அல்லது சிரட்டைகளை வைத்திருப்பார்கள். ஊர்ப் பிரமுகர்களாகவும் பொறுக்கித்தனங்களுக்குப் பேர் போனவர்களாகவும் இருப்பார்கள் இந்த ஆண்கள்.

கோயில்களுக்குமுன்னால்இன்றும்கூட பல இடங்களில் பாழடைந்து கிடக்கிற பள்ளங்களைப் பார்க்க இயலும். இப்பள்ளங்களைச் சுற்றிலும் ஒரு போட்டி போல நடப்பதுதான் "மஞ்சள் நீர்".

இப்பள்ளங்களில் நிரப்பப்பட்டிருக்கும்மஞ்சள்நீரைக்கையில் இருக்கும் செம்பில் நிறைத்து பெண்கள் மீது அடிப்பார்கள். பெண்கள் தம் கையில் வைத்திருக்கிற தடிகளால் தம்மை மறைத்துக் கொண்டு மஞ்சள் நீரிலிருந்துதப்பித்தபடி அதே தடியினால் ஆண்களை அடிப்பார்கள். ஒரு வகையில் இது ஒரு போட்டி போல நடக்கும்.

ஆண்கள் மீண்டும் மீண்டும் செம்பில் நீர் நிறைத்து வந்துபெண்கள் மீது அடிக்கும்போது துணி நனைந்து உடம்பு முழுக்க ஈரமாகிவிடும். சில சமயங்களில் தலைமீதிருக்கும் முந்தானை கீழே நழுவி விழுந்தாலும் கூட இப்பெண்களுக்கு அதைப்பற்றிய கவனமே இருப்பதில்லை. பதில் அடி கொடுக்கிற மும்முரத்தில் ஆண்களைத் துரத்திக் கொண்டு ஓடுவார்கள். ஈரமானஉடம்பும் தொடைகளோடு ஒட்டிக்கொள்கிற துணியும் எல்லாவற்றையும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும். எச்சிலைக் கூட்டி விழுங்கியபடி உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களுக்கும் ஆட்டக்காரர்களுக்கும் இது ஒரு வகையில் சபலத்தைத் தீர்த்துக்கொள்கிறஇலவசப் பொழுதுபோக்கு. இப்பெண்களின் உடம்பில் அவ்வப்போது வந்து விழும் குங்குமமும் மஞ்சளும் கலந்த வண்ணத் தண்ணீர் ஏதோ ஈஸ்ட்மென் கலர் படத்தைப்பார்க்கிறமாதிரி இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் இப்போட்டி நடந்தே தீரவேண்டும் என்பது விதி. நடத்தாவிட்டால் ஊரில் மழை பெய்யாது. பயிர்களுக்கு வியாதி வந்து நாசமாகும். ஊரில் 'அம்மை' வந்து நாசமாக்குவாள். முனியின் தொல்லைஅதிகரித்துவிடும் என்றெல்லாம் நம்பிக் கொண்டுவந்தார்கள். இந்த நம்பிக்கைகளைக் கண்டு பயப்படுகிற தலித் ஆண்களும் பெண்களும் மேற்படி பொழுதுபோக்குக்கு பலியாகிறார்கள்.

திடமாக இருந்த என் ஆயா என்னையும் என் சகோதரர்களையும் பக்கத்தில் நடக்கிற திருவிழாவுக்கு அழைத்துக்கொண்டு போவாள். திருவிழாவைப் பார்ப்பதற்காக அல்ல. அங்கே கிடைக்கும் சாப்பாட்டுக்காக. அப்போது இந்த மஞ்சள் நீர் விளையாட்டையும் காட்டுவாள். எங்களுக்குத் தெரியாமல் போகும் போது எங்களைத் தோள் மீது தூக்கியோ அல்லது சுவர்மேல் தூக்கி உட்காரவைத்தோ காட்டுவாள்.

மேற்படிப்புக்காக தார்வாட் வந்தபோது பி. எச். டி. செய்து கொண்டிருந்த ஒரு நண்பனைச் சந்திக்க நேர்ந்தது. அவனோடு நானும் செல்வதுண்டு. ஏதோ ஒரு நேரத்தில் அவனோடு பேசிக் கொண்டிருந்தபோது மேற்சொன்ன விஷயத்தை எடுத்துச் சொன்னேன்.

அப்போது அவன் தன்னுடைய ஊருக்கு அருகிலிருக்கும் இன்னொரு ஊரில் இதைவிடவும் மோசமான முறையில் நடக்கும் விஷயம் ஒன்றைச் சொன்னதும், அதைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். "மஞ்சள் நீர்"ச் சடங்கைப் போலவே இதுவும் ஆவணி மாதத்தில் அனுமன் முன்னிலையில் நடக்கும் போட்டி. இங்கேயும் தலித் பெண்கள் மட்டுமே பங்கெடுக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் நீர்

ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி அவர்கள் உடம்பில் துணி இருப்பதில்லை. ஆணும், பெண்ணும் சேர்ந்து நாட்டியம் ஆடுவார்கள். அதற்கப்புறம் முக்கியமான அம்சம் என்னவென்றால், ஆண்களின் தோள்களில் பெண்கள் ஏறி அமர்ந்து கொள்வதும் வாழைப் பழத்தின் தோலை உரித்து அப்பெண்கள் ஆண்களின் வாய்களில் வைக்க முயற்சிப்பதும் ஆகும்.

பழங்களின் அருகில் ஆண் வாயைக் கொண்டு வந்து திறக்கும் போது பெண் பழத்தை வாயில் வைக்காமல் ஆட்டம் காட்டுவாள். பிறகு அப்பழத்தை தானும் உண்ணாமல் வெறுமனே நாக்கால் நக்குவாள். பிறகு பெண் நக்கிய பழத்தை மேல் சாதியைச் சேர்ந்த ஆண் வாங்கிக் கடித்துத் தின்பான். அந்த ஆட்டத்தில் இதுவே முக்கியமான சடங்கு.

இவ்வளவையும் என் நண்பன் சொன்னதும் இச்சடங்கு பற்றிய விவரங்களையெல்லாம் சேகரித்து ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்கிற எண்ணத்தை அவனிடம் வெளிப்படுத்தினேன். அந்த விஷயத்தில் அவனும் ஆர்வம் காட்டித் தேவையான விவரங்களைச் சேகரித்துக் கொடுத்தான். ஊர்க்காரர்கள் அச்சடங்கு நடக்கும் நாள் விவரத்தைச் சொன்னார்கள்.

அடுத்த நாள் நாங்கள் புறப்படத் தயாராக இருந்தபோது, அது, முதல் நாளே நடந்து முடிந்துவிட்டதுஎன்கிறதகவல் கிடைத்தது. பெரும்பாலானோர் இதைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டுவதால், யாருக்கும் தெரியாமல் சடங்கை நடத்தி முடித்துவிடுவதாகச் சொல்லப்பட்டது.

ஆனால் தார்வாட் மாவட்டத்தில் இப்போதும் இச்சடங்கு நடத்தப்படுகிறதோ இல்லையோ தெரியாது. இக்கிராமத்துக்கு முதலில் 'துன்னகனூரு' என்று பெயர் இருந்ததாம். நாட்டுப்புறப் பாடல்களில் ஆய்வு நிகழ்த்துகிற என்னால் இதைப்பற்றிக் கட்டுரை எழுத இயலவில்லை. பொதுவாக ஆய்வாளர்களின் கட்டுரைகளுக்கு இம்மாதிரியான விஷயங்கள் கருப்பொருளாவதுண்டு.

வாழைப்பழத்தைத் தின்னக் கொடுப்பது, மஞ்சள் நீர் ஊற்றுவது, எல்லாவற்றையும் குறியீடாகப் பார்க்க வேண்டும் என்பதும் மஞ்சளுக்கும் குங்குமத்திற்கும் கூட இன்னொரு பொருள் உண்டு என்பதும் தெரியவந்த பிறகு கட்டுரை எழுதும் புலமையையே அருவருப்பாக உணர்ந்து கட்டுரை எழுதுவதை நிறுத்தி விட்டேன்.

இவை எல்லாவற்றையும் இங்கு எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், மேல் சாதிக்காரர்கள் வருஷத்துக்கொருதரம் கொடுக்கும் புடவை - ரவிக்கைத் துணிகள் தலித் பெண்களிடம் ஆசையைத் தூண்டுகின்றன. எங்கள் ஊரின் அக்கம்பக்கத்து ஊர்களில் இன்னமும்கூட இந்தப் பழக்கம் உயிரோடு இருக்கின்றது. ஒரே ஒரு மாற்றமென்னவெனில் இப்போது ரவிக்கைத் துணியைப் போட்டுக் கொண்டு சடங்கில் ஈடுபடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

முதல் பகுதியில் சொல்லப்பட்ட என் கல்வியின் பின்னணி விஷயங்களையே கவனியுங்கள். வளரவேண்டும் என்று எண்ணும் ஒருவனுக்கு சின்னச் சின்னதாக எத்தனை தடைகள் முளைக்கின்றன என்கிற விஷயம் ஒரு பக்கமெனில், பெண்ணைக் கெடுத்து அவளை வேசியாக்கி அவளிடம் வரும் ஆண்கள் தம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் செய்யும் தந்திரங்களைக் கவனித்தால் அப்பெண்களுக்கு மரியாதை என்பதே இல்லையா என்று தோன்றும் விஷயம் இன்னொரு பக்கமாகும்.

சடங்கு என்கிற பெயரில் இன்றும் கூட "மஞ்சள் நீரின் ஈஸ்ட்மென் கலர் படம்" பார்க்கும் இந்த ஆண்கள் தத்தம் மனைவிமார்களையும் இப்படிப் பகிரங்கமாக நிற்க வைத்து விளையாடுவார்களா என்று கேட்டால் அவர்களுக்கு கண்கள் சிவந்துவிடும். தத்தம் மனைவிமார்களைப் போலவே இவர்களும் மானமுள்ள பெண்கள் தான் என்கிற எண்ணம் இவர்களுக்கு என்று தான் வருமோ?

கட்டுரையாளர்களின் திறமையைப் புலப்படுத்த வசமான கருப்பொருளாக மாறிவிடும் இவ்விஷயங்கள் பெரிய பெரிய வார்த்தைகளால் கௌரவப்படுத்தப்படும் முயற்சிகளைப் பற்றி என்ன சொல்வது?

சவதத்தி என்னும் ஊரில்கூட வேறு வேறு பெயர்களில் இப்படிப்பட்ட சடங்குகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகள் காலத்துக்கேற்றபடி அழிந்துபோகாமல் வேறு வடிவங்களில் மாறித் தொடர்வது வேடிக்கையான விஷயமாகும்.

இது மட்டுமின்றி சமீப காலத்தில், 'மலத்தைத் தின்ன வைக்கும் நிகழ்ச்சிகளை'யும் கர்நாடகத்தில் வெற்றிகரமாகநடத்திக்கொண்டு வருகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது மனிதனின் திறமைக்குப் புது கின்னஸ் விருதே தரலாம் போலத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட சம்பவங்களைநேரானவார்த்தைகளில் சொல்ல வெட்கம்கொள்ளும் அளவுக்கு நாம் நுண்மையான ஆட்களாக இருக்கிறோம். மலம் தின்ன வைப்பது என்பதை ஒரு வழிபடும் முறை என்று சொல்கிறோம். இந்நிலையில் தின்பவர்களுக்கு என்ன தோன்றப் போகிறது? •

ஆல்பர் காம்யுவின் 'கொள்ளை நோய்' நாவலின் நாயகன் Dr. ரியு :

**"வீரம் என்ற குணத்திற்கு ஒரு முக்கிய இடமளிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் மனிதன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைப்பதற்கு அடுத்த படியாகத்தான் வீரம் இருக்க வேண்டுமே தவிர, அதற்கும் மேலான முக்கியத்துவம் வீரத்திற்கு அளிக்கக் கூடாது."**

ஸீக்ஃபரீட் லென்ஸின் 'நிரபராதிகளின் காலம்' நாடகத்தில் :

**"ஒரு கொடிய செயலைச் செய்தவனின் மனதில் ஏற்படுவதை விட, அதைச் சும்மா பார்த்துக் கொண்டிருந்தவனின் மனதில் அதிக அளவு மனவேதனையை உண்டாக்கும் குற்றங்களும் இவ்வுலகில் உண்டு."**

'Council of Love' நாடகத்தில் :

**"மிகக் கொடுமையான சித்திரவதை எதுவென்றால், அது நமது எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த முடியாததுதான்..."**

ஒகஸ்டோ போவால் :

**"சில சமயங்களில் ஒடுக்குமுறை என்பது அதைப் பற்றிப் பேசக்கூட முடியாத அளவுக்குக் கடுமையான வன்முறையைக் கொண்டிருக்கிறது."**

ஃபிடல் காஸ்ட்ரோ :

**"ஆயுதங்களுக்கு எப்பொழுதுமே மக்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் மக்களுக்கு எப்பொழுதாவது மட்டுமே ஆயுதங்கள் தேவைப்படுகின்றன."**

வி. ஸ. காண்டேகர் :

**ஒரு வகுப்பாரை குரூர மிருகமாகவும், மற்றொரு வகுப்பாரை அந்த மிருகத்துக்கு இரையாகும் பலவீன மிருகமாகவும் செய்யும் இன்றைய சமூக அமைப்பு ஒழியத்தான் வேண்டும்."**

கவிதாசரண் :

**"ஆண்டான் - அடிமை என்கிற இந்த அடக்குமுறை மனோபாவம் கால ஓட்டத்துக்கேற்றபடி சொல்லாட்சியிலும், அமுலாக்கத்திலும் சில மாற்றங்களைப் பெற்றிருக்கிறதே தவிர, மனோபாவத்தில் பெரிதாய் மாற்றமொன்றுமில்லை. அடக்குகிறவனின் சந்தோஷமே அடங்குகிறவனின் கதிமோட்சம் என்பதில் சந்தேகமில்லாதவரை காலம் பொற்காலம்தான், கடவுள் கருணையுள்ளவர் தான்.... நம் வரலாற்றின் பொற்காலங்கள் எல்லாம் இப்படித்தான் வகைப்படுத்தப்பட்டிருக்கு...."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் தனது வீட்டை விட்டு வெளியே வந்து பணியில் ஈடுபடும்போது பல்வேறு விதமான நிகழ்ச்சிகளைச் சந்திக்கிறார். வீட்டுமனிதர்களிடம் இருக்கக்கூடிய இயல்பான உறவு அங்கே கிடையாது. முக்கியமாக எதிர்பாலினமான ஆண்களுடன் ஏற்படக்கூடியஉறவுகள்மிகவும் துல்லியமாய்க் கண்காணிக்கப்பட வேண்டும். இது உங்களிடமிருக்கும் ஆண்கள் மீதான கருத்துக்கள், உங்கள் மதம் இவற்றையும் முக்கியமாக மனித குலத்தை (ஆண்களையும் சேர்த்துத் தான்!) நீங்கள் எவ்வாறு மதிக்கிறீர்கள் என்பதையும் பொறுத்துத்தான் இருக்கும். சக ஊழியர்கள் உங்களை நடத்தும் விதம் - விரும்பத் தகுந்ததோ, தகாததோ - அதை எவ்வாறு சமாளிக்கிறீர்கள் என்பது உங்கள் பொறுப்பு.




உங்கள் வயது இளமையாக இருப்பினும், சில ஆண் ஊழியர்கள் உங்களிடம் அத்துமீறி நடந்துகொள்ள முயன்றால், அலுவலக விதிமுறைகளை மறந்து விட்டு உங்கள் உள்ளுணர்வு சொல்வதைக் கவனியுங்கள். இந்த மாதிரி சமயங்களில் உங்கள் உள்ளுணர்வு சரியாகத் தான் இருக்கும்.

ஆண்களோ பெண்களோ - சக ஊழியர்கள் அலுவலகவாழ்வில் அத்தியாவசியமான, தவிர்க்கமுடியாதஓர் அங்கம்.

அலுவலகங்களில் பழகும் பண்பு பற்றி சில அடிப்படைகளைக் கவனிப்போமா?

பேசுவதற்கு எளிமையாகவும், இனிமையாகவும் இருங்கள். முசுடுகளையும் உம்மணா மூஞ்சிகளையும் உலகம் விரும்புவதில்லை. தனிப்பட்ட சொந்த விஷயங்ளைப் பற்றி பேச விரும்பாவிட்டாலும் பேசுவதற்குப் பொது விஷயங்கள் - அரசியல் தொடங்கி சரித்திரம் வரையில் - ஆயிரக்கணக்காக உள்ளன. அலுவலகங்களில் நல்ல ஆழமான நட்புகள் உருவாகலாம்.

ஒருவரைப் பற்றி மற்றவரிடம் வம்பு பேசாதீர்கள். 'யாரிடமும் சொல்லாதே' என்ற விண்ணப்பத்துடன் தொடங்கும் எந்தப் பேச்சுமே உடனடியாக காட்டுத்தீ போல் அலுவலகம் எங்கும் பரவும் என்பதை மறக்காதீர்கள். மனித இயல்பு அது.

உங்கள் சொந்தவிஷயங்கள் -வெற்றிகளோ, தோல்விகளோ - எல்லாரிடமும் வெளிச்சம் போட்டுக் காட்டாதீர்கள். வெற்றிகள் பொறாமைகளையும், சில சமயம் அதன் மூலம் உங்களைக் கவிழ்க்கும் எண்ணத்தையும் உருவாக்கும். தோல்விகளோ வெளிப்படையான பரிதாபத்தையும் உள்ளே கேலி மற்றும் இளக்காரத்தையும் வளர்க்கும்.

பேசும்போது உங்கள் குரலைத் தாழ்த்தி அமைதியாகப் பேசுங்கள். உணர்ச்சிகரமான வெளிப்பாடுகள் சினிமாவுக்கு வேண்டுமானால் ஏற்றவையாக இருக்கலாம். நிஜ வாழ்க்கையில் அவை எரிச்சலூட்டும் விஷயங்கள். மேலும் உணர்ச்சிவசப்படாமல் அமைதியாக ஆழமாகச் சொல்லப்படும் கருத்துக்களுக்கு அதிக மரியாதை உண்டு. நீங்கள் நன்கு சிந்தித்துச் செயலாற்றும் ஒரு நபர் என்ற எண்ணத்தை அது உருவாக்கும்.

சக ஊழியர்களின் சொந்த விஷயங்களைத் தூண்டித் துருவிக் கேட்காதீர்கள். உங்களுடன் சற்று அதிகமாகப் பழகிய பின்னர், உங்களிடம் அவர்களுக்கு நம்பிக்கை வந்த பின்னர், அவர்களாகவே முன்வந்து சொல்லுவார்கள். அதுவரை பொறுமையோடு காத்திருங்கள்.

உங்கள் பிரச்சினைகளை அலசும் இடமும் அறிவுரை வழங்கும் இடமும் அலுவலகம் அல்ல.

பிறர் உங்களை ஒரு பொருட்டாக மதித்து தமது அந்தரங்க விஷயங்களைப் பேச வருகிறார்களா? அது உங்களை அச்சத்தில் ஆழ்த்துகிறதா? அமைதியாக ஒதுங்கி விடலாம். ஆனால் அது உங்களுக்கு சக ஊழியர்களின் நல்ல உறவைத் தேடித் தராது. மாறாக, நன்கு காது கொடுத்துக் கேளுங்கள். முடிந்தால் அவர்கள் உதவிக்காக நாட வேண்டிய நபருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுங்கள்.

மேலதிகாரியிடம் உங்களுக்கு நல்லதொரு புரிதல் இருந்தால் அதை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாம். இது சற்றுச் சிரமம்தான். அலுவலகத்தில் நீங்கள் ஒரு முக்கியமான நபர் என்று இருந்தும் காட்டிக் கொள்ளாமல் இருப்பது கடினம்தான். எனினும் பிறர் சிற்சில சிபாரிசுகளுக்காக உங்களை நாடும்போது மத்தளத்திற்கு இரண்டு பக்கம் இடி என்பது போல சிபாரிசுக்குச் சென்றால் மேலிடத்திலிருந்தும், பேசாமல் இருந்தாலோ அல்லது பேசிப் பயனற்றுப் போனாலோ, கீழிடத்திலிருந்தும் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் அலுவலகத்தில் பலதரப்பட்ட மனிதர்களை நீங்கள் சந்திக்கலாம்.

ஒரு மனிதரின் பொருளாதார அல்லது சமூக அந்தஸ்தைக் கண்டு பயந்துவிடாதீர்கள். உங்களைப் போல அவரும் ஒரு ஊழியர், ஒரு குறிப்பட்ட பணியைச் செய்பவர். தத்தமது பணியில் நீங்கள் இருவருமே மிக முக்கியமான ஒரு பங்கை நிறுவனத்திற்கு ஆற்றுகிறீர்கள். இதில் மேல் என்றும் கீழ் என்றும் எதுவும் இல்லை. இதை உங்களுக்கு மேலுள்ள அதிகாரிகளைப் பொறுத்தமட்டும் அல்லாது கீழுள்ளவர்களுக்காகவும் நீங்கள் உணர வேண்டும். இது உங்களைப் பழகுவதற்கு இனியவராக்கும்.

சில நபர்கள் உருவத்தில் குள்ளமாகவோ, அவலட்சணமாகவோ, குறையுடனோ இருக்கக் கூடும். அவர்களையும் எல்லாரையும் போல நடத்துங்கள். உங்கள் பரிதாபம் யாருக்கும் தேவையில்லை - தோழமையும் ஒத்துழைப்பும் மட்டுமே தேவை.

ஒரு முன் கோபக்காரருடன் பணி செய்ய வேண்டியுள்ளதா?கோபம் ஆறக்காத்திருங்கள். பின்னர், அமைதியான ஒரு நேரத்தில், அவர் பணியில் எத்தனை அக்கறை காட்டுகிறார் என்பதையும், அதை நீங்கள் பெரிதும் ரசிப்பதாகவும் கூறுங்கள். கோப நேரத்திலும், நிதானத்தையும் நேர்மை உணர்வையும் இழக்காத தனிச் சிறப்பைப் பாராட்டுங்கள். அதன் பின் அவர் முன்கோபம் கொள்வது குறையும் - குறைந்த பட்சம் உங்களிடம் மட்டுமாவது!

தீவிரமானசிந்தனையாளர் உங்கள் குழுவில் இருக்கிறாரா? 'யாருக்கும் தோன்றாத கருத்துக்கள் உங்களுக்கு மட்டும் எப்படித் தோன்றுகின்றன? நீங்கள் நமது குழுவில் இருப்பதால் எந்தப் பிரச்சினையும் நொடியில் தீர்ந்து விடுகிறது' என்று புகழுங்கள்.

இதை மேலும் முடிவின்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் ஒருவார்த்தை. எந்தப் புகழ்ச்சியையும் பொய்யாகச் செய்யாதீர்கள். நீங்கள் சொல்வதெல்லாம் யாருமே கவனிக்காத பாராட்டாத ஒரு விஷயத்தை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருவது தான். இதில் போலித் தன்மையோ காக்காய் பிடித்தலோ எதுவும் இல்லை. பிறரின் நல்ல ரசிக்கத்தக்க குணங்களைக் கண்டுபிடிப்பதும் பாராட்டுவதும் அருமையான ஒரு பொழுது போக்கு. இதற்குத் தகுந்த பிரதிபலன் விலை மதிப்பற்ற நண்பர்களும் தோழிகளும் கிடைப்பதுதான்.

சக ஊழியர்களை மதிக்கவும், அவர்களிடம் அன்புசெலுத்தவும்பழகிக் கொண்டுவிட்டீர்களேயானால் கடுமையான பணியின் இடையிலும் உங்களது அலுவலக வாழ்க்கை பாலைவனச் சோலையாய் உயிரோட்டத்துடன் துள்ளும். ஒருவருக்கொருவர் துணை நின்று பணி செய்வது ஓர் இனிமையான அனுபவம். உதவி எடுப்பதும் கொடுப்பதும் குறைவின்றி நிகழ, பணியும் திறம்பட துரிதமாகச் செல்ல, நீங்கள் உள்ளேநுழைந்தபின் அலுவலகமே மாறிவிட்டது என்று பிறர் சொன்னாலும் சந்தேகப்படுவதற்கில்லை. ●

- ஜார்ஜினா பீட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்தி பெற்ற குங்.:.பூ ஹீரோக்களைப் பற்றிய சில சுவையான தகவல்களைத் தருவது உங்களுக்கு ஆர்வம் தருவதாகவும், முன்னுதாரணமாக அமைவதாகவும் இருக்கும்.

உலகறிந்த இன்றைய முன்னணி குங்.:.பூ நட்சத்திரமான ஜக்கி சானின் வாழ்க்கைத் தகவல்களுடன் இப்பகுதியை ஆரம்பிக்கிறேன். ஜக்கிசான் எனது சம காலத்தவர். என்னுடன் குங்.:.பூ பள்ளியில் சிரேஷ்ட மாணவராகப் பயின்றவர். பின்னர் சினி குங்.:.பூ துறையில் எனக்கு ஆசானாக விளங்கியவர். எனது பொதுவாழ்வில் நெருங்கிய நண்பர். அவருடன் சில திரைப்படங்களில் ஒன்றாகப் பணியாற்றியுள்ளேன்.

*First strike* ஆங்கிலத் திரைப்படத்தில் ஒரு காட்சியில் ஹெலிகாப்டரில் இருந்து குதித்து, பனிப் படையை உடைத்துக் கொண்டு சில்லிட வைக்கும் நீரினுள் அமிழ்ந்து மேலே வருகிறார் ஜக்கிசான். நாம் கதிரைகளில் சாய்ந்தபடி இக் காட்சியை ரசிக்கிறோம். ஆனால் இந்த சிறிய காட்சியை படமாக்குவது அவ்வளவு சாதாரணமான விடயமல்ல. ரத்தத்தை உறையச் செய்யும் படு குளிரான இந்தப் பனி அடி நீருள் அமிழ்ந்து எழுவதற்கு அந்நாட்டு மக்களே அஞ்சுவர். ஜக்கிசான், எந்தத் தயக்கமுமின்றி இப்பனிப் பகுதிக்குச் சென்று ரிஹர்சல் பண்ணி, டூப் ஏதுமின்றித் தானே இந்த ஸ்டண்டை நடத்திக்காட்டியபோது படப்பிடிப்புக் குழுவே அதிசயித்து நின்றது. இதில் நடித்த பின் ஒரு வாரமாக அவர் சிகிச்சை பெற வேண்டி வந்தது.




இவர் கெமரா ட்ரிக்ஸ்களையும் அனுமதிப்பதில்லை. பயங்கரமான உயிராபத்துமிகுந்த கட்டங்களிலும் டூப் இன்றித் தானே நடிக்கும் இவர் கூறுவது, "ரசிகர்கள் எனது திறமையைக் காணத் திரையரங்குகளுக்கு வருகிறார்களேயன்றி, எனக்காகத் தனது முகத்தைக் காட்டாது நடிக்கும் இன்னொரு டூப்பை பார்க்க வருவதில்லை". கடந்த வருடம் (1998) அவர் நடித்த ரஷ் அவேர்ஸ் (*Rush Hours*) திரைப்படம் மிகப் பெரும் வசூலைப் பெற்றதுடன் ஜக்கிசானுக்கு மிஸ்டர் ஹொலிவூட் என்ற உச்சப்புகழைச் சூட்டிக் கொடுத்துள்ளது.

புகழில் அதி உச்சத்தில் விளங்கும் ஜக்கி சான் ஒரு படத்திற்குப் பெறும் கட்டணம் எவ்வளவு தெரியுமா? 6 மில்லியன் அமெரிக்க டாலர்கள். (இலங்கைக் காசில் சுமார் 32 கோடி ரூபாய்) அவரிடம் உள்ள உயர்ரக கார்கள் 23. அவர் ஒரு கார் பிரியர். ஆனால் உடை அலங்கார விடயத்தில் படு அலட்சியம்.

இன்று ஒரு படத்திற்கு 6 மில்லியன் கட்டணம் பெறும் ஜக்கிசானை அன்று வறுமையின் நிமித்தம் அவரது பெற்றோர் 150 ஹொங்கொங் டொலருக்கு விற்கத் துணிந்தார்கள். இத்தகைய ஏழ்மையில் அதி பாதாளத்தில் இருந்த இவர் இன்று எப்படி அதி உச்சி நிலைக்கு உயர்ந்தார் என்பதுதான் விஷயம்.

ஹொங்கொங்கில் **கொங்சங் சான்** என்ற ஏழைத் தந்தைக்கு மகனாய்ப் பிறந்தவர் ஜக்கி சான். ஜக்கி பிறந்தபோது தாளாத வறுமையிலிருந்தது இக் குடும்பம். எனவே ஒன்றரை வயதிருக்கும்போது அவரை யாருக்காவது விற்க முனைந்தார்கள். பின்னர் மனம் மாறி சுமார் 4 வயது வரை கஷ்டத்துடன் அவரை வளர்த்தார்கள். அதற்கு மேல் முடியாத நிலையில் வெறும் 150 ஹொங்கொங் டொலருக்கு ஒருவரிடம் விற்க விலை பேசி முடித்துவிட்டார் அவரது தந்தை. ஆனால் இறுதித் தருணத்தில் நண்பர் ஒருவர் குறுக்கிட்டுதான் உதவுவதாகச் சமாதானம் கூறி தடுத்து நிறுத்தியதால் ஜக்கி தப்பினார். பின்னர் பாடசாலையில் சேர்ந்து அவர் படித்த அதி கூடிய பாடசாலைப் படிப்பு ஆக 2ம் வகுப்பு மட்டும்தான். அந்த 2 வருடத்தில்கூட ஜக்கி சுமார் 5 பள்ளிக்கூடங்களுக்கு மாற்றப்பட்டார். இதற்குக் வறுமையல்ல முக்கிய காரணம். அவரது முரட்டுத்தனமான சிறுவயதுக் குளப்படி. தன்னிலும் மூத்தவர்களுடன் கூட அடிபிடி படுவதுதான் அவரது வேலை. குறிப்பாக ஆங்கிலப் பள்ளி மாணவர்களைத் துரத்தித் துரத்தி அடிப்பதில் அவருக்கு அலாதிப் பிரியம். நாலைந்து பேருடன் கூட அடிபடத் தயங்காத அவர், ஒரு வேளை அவர்களது பலம் கூடுதலாகத் தெரிந்தால் அடுத்த கணம் புறங்கால் முதுகில் பட ஓடித் தப்புவதற்கும் தயங்கமாட்டார்.

இந்நிலையில்தான் அவரது தந்தை அவரை எமது குங்.:.பூ பள்ளித் தலைவர் யூ ஜெங் யுவரிடம் 7 வயதில் ஒப்படைத்தார். ஏழைகளில் கருணை கொண்ட எனது குருவே அன்று முதல் அவரைத் தமது தத்துப்பிள்ளைபோல் வளர்த்து அவரை பயிற்றுவித்து மாபெரும் குங்.:.பூ வீரனாக உருவாக்கினார். இன்றும் ஜக்கி எமது குருவை தனது தந்தையென்றே அழைப்பார்.

குங்.:.பூ பள்ளியில் பயிலும் போதே இடையிடை குங்.:.பூ படங்களில் ஸ்டன்ட் காட்சிகளுக்கு நடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு முறை சன் ஜ* சு என்ற சீனத் திரைப்படத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது அதில் வரும் ஒரு பயங்கரப் பள்ளத்தாக்கில் குதிக்கும் காட்சியொன்றை எப்படிப் படமாக்குவது என்று படக் குழுவினர் மூளையைப்பிசைந்துகொண்டிருக்க, ஜக்கிசான் திடீரெனப் பள்ளத்தாக்கினுள் குதித்துவிட்டார். பயந்துபோய் உள்ளே பார்த்தவர்களுக்கு அவர் கீழேயிருந்து சிரித்தபடி கையசைத்தார். அதன் பின்னர் சினிமாத் துறையினர் அவரைக் குங்.:.பூ கதாநாயகனாக அறிமுகப்படுத்தினர்.

ஜக்கியின் முதலாவது ஆங்கிலத் திரைப்படம் *New fist of fury*. புரூஸ்லீ நடித்த *Fist of fury* என்ற படத்தின் தொடர்ச்சியாக புரூஸ்லியின் மரணத்திற்குப் பின்னர் வெளிவந்த இப்படத்தில் அவர் புரூஸ்லியின் பாத்திரத்தை வகித்தார்.

**ஜக்கி பாணி**

புரூஸ்லியின் பாணியைப் பின் பற்றி அவரது சீடனாக ஜக்கி விரும்பவில்லை. தனக்கென்றொரு பாணியை ஏற்படுத்திக் கொண்டார். புரூஸ்லியின் சண்டை மிகப்பயங்கரமாகவும் கொடூரமாகவும் இருக்கும். ஜக்கி, நகைச்சுவையோடு சண்டைக் கலையை பெண்களும் குழந்தைகளும் அச்சமின்றி ரசிக்கும் விதத்தில் செய்தார். அதனால் சகலரையும் கவர்ந்திழுத்தார். கட்டடங்களின் மேலும், கம்பகளிலும், விழிம்புகளிலும் தாவிப்பாய்ந்து கரணமடித்தபடி செய்யும் **அக்ரோபட்டிக்** ஸ்டைலில் (*Acrobatic style*) தனது சண்டை முறையை வெளிப்படுத்துகிறார். இன்று வரை பல்வேறு ஹொலிவூட் திரைப்படங்களில் நடித்து முதல் நிலை வகிக்கும் குங்.:.பூ நட்சத்திரமாக விளங்குகிறார்.

ஆமர் ஒப் கோட் (*Armour of God*) என்னும் படத்தில் மரத்திலிருந்து பாயும்போது விழுந்து அடிபட்டு மயங்கிவிட்டார். 7 மணிநேர அறுவைச் சிகிச்சை நடத்தி மூளைக்கருகில் இருந்து முள்ளொன்றை அகற்றினர். தான் தெய்வாதீனமாக உயிர் பிழைத்த அந்த நாளிலிருந்து "இனி ஏழைகளுக்காகவே வாழ்வேன்" எனக் கூறி தன் பெயரில் தர்ம நிலையமொன்றை நிறுவினார். **போபோ ச்சா** எனும் ஆரோக்கியப் பானம் ஒன்றை அவர் அறிமுகப்படுத்தியுள்ளார். போ போ ஜக்கியின் செல்லப் பெயர்●

பில்லி வொங்
தமிழில்: பாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங் ஃபூ
ஒரு
வாழ்க்கை
முறை
5

# உள்ளுறைந்த திறமையை உணர்த்துகின்ற குரு

கடந்த இதழில் குங் ஃபூ கலை தொடர்பான பொதுப்படையான பல விடயங்களைச் சொல்லி வந்தேன். அவை பொது வாசகர்களுக்கும் ஆர்வத்துக்குரியன. இவ்விதழில் குங் ஃபூ பயிலநாட்டமுடையவர்களுக்கான தற்சிறப்பான சில விடயங்களைப் பற்றி தர விரும்புகிறேன். முன்னர் குறிப்பிட்ட சில விடயங்களையும் தொடர்பு கருதி திரும்பச் சொல்வது இங்கு தவிர்க்க முடியாததாகிறது.

வெறும் அறிவாலேயே குங் ஃபூ சாம்பியனாக வரலாம்தானே? ஆனால் நீங்கள் சாம்பியனாக வரவேண்டுமானால் உண்மையிலேயே சாம்பியனுக்கு உரிய முறையில் பயிற்சி பெறவே வேண்டும். அதுவும் சும்மா வந்து சேராது. அவரவரது உடல் வலிமையும் மனோவலிமையும் ஒரு குறிப்பிட்டவரைதான் உதவும். பயிற்சியில்லாது விட்டால் அவை எதுவுமே பயனற்றவையாக போய்விடும். அறிந்தவற்றை, தன் உடல்வாகுக்கு அமையபயிற்சி மூலம் கைவரப் பெற்றுக் கொள்வதே அவரை உண்மையில் ஆற்றலுள்ளவராக்கும்.

எனவே நீங்கள், நீங்களாகவே முயலுங்கள். உங்கள் ஆற்றலை உணர்ந்து அவற்றின் உச்சத்தை வெளியே கொண்டு வாருங்கள். வெறு மனேஎல்லோரும் செய்வதையந்திரத்தனமாகப் பின்பற்ற முனையாதீர்கள். எந்த வழி உங்களுக்கு ஏற்றதாக அமைகிறது என்பதை இனங் கண்டு தொடருங்கள்.

சில குங் ஃபூ பயிற்றுநர்கள் தங்கள் செயற்திறனை மாணவர்களிடம் ஒரு சேர்க்கஸ் சாகசத்தைப் போல வியக்கும் வகையில் செய்து காண்பிப்பதில் மட்டுமே ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பற்றிய பிரமிப்பை மட்டுமே ஏற்படுத்த முடியுமேயன்றி மாணவர்களுக்கு உண்மையில் எதையும் கற்பிக்கப் போவதில்லை. இவர்கள் தமது மாணவர்களின் உண்மையான வளர்ச்சியில் அக்கறைகொண்டவர்களல்ல. மாறாக தமக்காக விசிறிகள், ஆதரவுக் குழுக்கள், புகழ்பாடிகள், தம்பின்னால் கிறுக்குப் பிடித்து அலைபவர்கள் போன்றோரை உருவாக்கிக் கொள்வதிலேயே நாட்டம் செலுத்துகின்றனர். இது காந்தம் இரும்புத் துகள்களைக் கவர்வது போன்றது. காந்தம் விலகியவுடன் துகள்கள் தூர்ந்து விழும். உண்மையான பயிற்றுநர்கள் செய்ய வேண்டியது யாதெனில் மாணவரை தனது செயல்களிலும் சிந்தையிலும் பங்கெடுக்கச் செய்ய வேண்டும்.



### நுட்பமான கலை

நான் முன்னரே சொல்லியிருந்ததுபோல் குங் ஃபூ, சிந்தையை, அது செயற்படும் எம் உடலின் செயல்நுட்பத்துடன் (எமக்குப் புலப்படாமலேயே) இணைக்கும் ஒரு நுட்பமான கலை. அதை விஞ்ஞானம் கற்பது போலன்றி அனுபவபூர்வமாக உள்வாங்கிப் பயில்வது மூலம் எமக்கு இயல்பான கலையாகக் கைவரப் பெறுதல் வேண்டும். ஒரு நல்ல பாடகனைப் போல, ஒரு நல்ல நாட்டியக்காரனைப் போல, குங் ஃபூவோடு ஒன்றிக் கொள்பவனும் ஒரு நிலையில் அதன் புதுமைகள் தானாகவே உள் ணர்விலிருந்து வியாபகம் பெறுவதை உண வான். குங் ஃபூவின் அடிப்படைத் தத்துவ தாவோ - அதாவது ஆத்ம வெளிச்ச பாதை.

குங் ஃபூவை கால வரையறை செய்த பயிற்றுவிக்க முடியாது. ஒரு குரு தனத திறமையை உங்களுக்குத் தாரை வா க்கவும் முடியாது. உங்கள் திறமை உங்களுக்கு உணர்த்துவதே அவர் பண உங்கள் பிள்ளையை நீங்களே பெ வேண்டும். மாறாக என்னையே நீங்கள சுவீகரித்துக்கொள்ள முடியாது. நீங்கள உங்களுக்குகந்த பாணியைத் தெரிந்த நீங்களாகவே முன்னுக்கு வரவேண்டும் (மற்றவர்களாக அல்ல).

### வெறும் அறிவு சக்தியாகாது

அடுத்த விடயம், உங்களது சக்த யென்பது இவ்வித்தையில் உங்களுக் குள்ள அறிவல்ல, மாறாக அந்த அறிவை செயற்பாட்டின் மீது செலுத்தக்கூடிய ஆற் றலே உண்மையான சக்தியாகும்.

*Knowledge is not power, but the ability to apply knowledge is power!* உங்களுக்கு குங் ஃபூவைப் பற்றி எல்லாம் தெரிந்திருந்தால் பிறகு பயிற்சி ஏன் தேவைப்படுகிறது.

### நல்ல குருநாதர்

ஒரு நல்ல குரு தனது பயிற்சிக்கு, நிர்ணயிக்கப்பட்ட தொடரிலமைந்த பயிற்சி முறையொன்றில் தங்கியிருக்கப் போவதில்லை. அவர் ஒவ்வொரு மாணவனது தன்மையையும் தனித்தனியாக ஆராய்ந்து அவன் தன்னைப் பற்றியே உள்ளும் புறமும் அறிந்து கொள்ளும்படி தட்டியெழுப்பி ஈற்றில் அவனதுவாழ்வோடு அவனை ஒழுங்கமையச் செய்வதையே நோக்கமாகக் கொள்வார். துணிவையும் தன்னம்பிக்கையையும் தரும் இப் பயிற்சி முறை அவனது நாளாந்தக் கருமங்களிலும் அவனை நெறிப்படுத்துவதாய் இருக்கும். காந்தம், மற்றொரு காந்தத்தை உருவாக்கும் செயற்பாடு போன்றது இது.

ஒரு நல்ல குருவுக்கு தனது மாணவனுக்குத் தகுந்த உடற்பயிற்சி எதுவென்பது தெரியும். ஏனெனில் ஒரு பயிற்சி ஒரு மாணவனுக்கு உகந்ததாக இருக்கும். அதேவேளை அது மற்றவனுக்குப் பாதகமானதாக அமைந்து விடக் கூடும். ஏனெனில் அவரவர்களின் தேகக் கட்டும் செயலாற்றலும் வேறுபட்டிருக்கும். சில பயிற்சிகள் உங்கள் செயற்பாட்டை அதிகரிக்க உதவும். வேறு சில பயிற்சிகள் உங்கள் செயலபிவிருத்திக்குத் தடையாக அமையும். சில வேளை உங்களைப் பலஹீனப்படுத்தவும் கூடும். உங்கள் தசைகள் வெவ்வேறு உடற்பயிச்சிக்கு வெவ்வேறு பிரதிபலிப்பைக் காட்டுவன. எனவேதான் ஒவ்வொருவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்தபயிற்சிமுறையைதீர்மானிப்பதுகுருவின் பிரதான கடமை. அத்தோடு மாணவனின் படிப் படியான வளர்ச்சியை அவதானித்து உரியவாறு பயிற்சி முறைகளை மாற்றியமைத்து அவனை முன்னேற்ற வேண்டும்.

எனவே குங் ∴பூ பயிற்சியென்பது ஒரு இராணுவஅணிவகுப்பைப்போன்றதுஅல்ல.எல் லோருக்கும் ஒரேபயிற்சிக் கட்டளை என்றவாறு யந்திர ரீதியில் அமைய முடியாது. வேறுபட்ட உயரம், பருமன், உடற்கட்டு, வயது, பருவம், வளைவுறும் தன்மை, செயற்றிறன் என்பவை கொண்ட பலரை ஒரே நிலையில் நிறுத்தி பயிற்றுவிக்கும் முறை நிறைவற்றதாகவே அமையும். சிலருக்கு அளவுக்கு மீறிய பயிற்சியாகவும் சிலருக்குப் போதாததாகவும் ஆகிவிடும். அ தோடு ஒவ்வொருவரது தனித் த மைகளை முன்னுக்குக் கொண்டுவ முடியாமலும் போய்விடும்.





### எந்த பாணி சிறந்தது?

நான் குங் ∴பூவில் நூற் றுக்கணக்கான பாணிக இருப்பதாகக் கூறி அவ றில் ஒரு சில பற்றிய தகவல் தந்திரு தேன். இனி வரு இதழ்களில் இ னும் பலவற்றை பற்றித் தரவும் உள்ளேன்.ஆனால் இங்குஒருகேள்வி அடிக்கடி பல மாணவர்களால் கேட் கப்படுகிறது. இவற்றுள் சிறந்த பாணி எதுவென்று.

எது சிறந்த பாணியென்று கூறுவது, எது சிறந்த துப்பாக்கி என்று கூறு வதைப் போன்றது. ஒவ்வொரு துப்பாக் கியும் ஒவ்வொரு தேவைக்குச் சிறந்த தாகிறது. ஒவ்வொன்றிலும் அனுகூல ங்களும் பிரதி அனுகூலங்களுமுண்டு. தேவையைப் பொறுத்தே எமக்கான துப்பாக்கியைத் தெரிவு செய்கிறோம். சிறிய துப்பாக்கியும் உண்டு. நீண்ட யந்திரத் துப்பாக்கியும் உண்டு. கைத் துப்பாக்கியை சுலபமாக மறைத்தபடி நெருக்கடிமிக்க இடங்களுள் கொண்டு திரியலாம்.ஆனால்யந்திரத்துப்பாக்கி நீண்ட வீச்சும் பலமும் கொண்டது. மிக அருகில் கைத்துப்பாக்கிக்கு முன் நீண்டதூரத் துப்பாக்கி செயலிழந்த தாகிவிடும். தொலை தூரத்தில் கைத் துப்பாக்கி பயனற்றுப் போய்விடும். குங் ∴பூ பாணிகளிலும் ஒவ்வொன்றும் வெவ்வேறு சிற ப்புத் தன்மைகளைக் கொண்டவை. எமது உப யோகத்தைப்பொறுத்தேஅவற்றின்பயன்பாடும். ஒரு உண்மையை விளங்கிக் கொள்ளுங்கள். ஒரு பாணியிலேயே சகல திறமைகளும் உள்ள டங்கி விட்டதென்றால், ஏன் மற்றைய பாணிகள் உருவாகின. ஏதோ ஒன்று இல்லாவிட்டால் தானே புதிதாக ஒன்று உருவாக வேண்டும். ஒருவர் ஒரு பாணியில் மிகத் திறமையாக சாக சம் செய்திருக்கலாம். ஆனால் மற்றவருக்கும் அதே பாணி கைகூடும் என்பதற்கில்லை. எவ் வாறு சிவாஜியின் பாணி சிவாஜிக்கும், கமலின் பாணி கமலுக்கும் உரித்தாகிறதோ அது போல் தான். ஒருவரை மற்றவர் சுவீகரித்துக்கொள்ள முடியாது. அதே போல் புரூஸ்லீயையோ, ஜாக்கி சானையோ அல்லது என்னையோ சுவீகரித்துக் கொள்ளமுடியாது. நீங்கள் உங்களுக்கு உகந்த பாணியைத் தெரிவு செய்து நீங்களாகவே முன்னுக்கு வரவேண்டும்.

**அடுத்த இதழில் தொடரும் வரை அன்புடன் விடைபெறும் பில்லி வொங்.** •

## குங் ஃபூ பள்ளி அனுபவம்

எதையும் நாம் அளவெடுத்துக்கொண்டு, மனதில் நிறுத்தாமல், அதிலிருந்து எட்ட வைத்துக்கொண்டு சுய நிதானத்துடன் அணுக வேண்டும். மாறாக அதற்கு ஆட்பட்டுவிடவோ, அதனால் தூண்டப் பட்டு அதன் வழியில் செலுத்தப்படவோ கூடாது. ஒரு குங் ∴பூ மாண வனுக்கு இருக்க வேண்டிய மனப்பக்குவம்.

நாம் எதற்கு அஞ்சுகிறோமோ, எதில் நாம் பலஹீனமா னவர்களென உணர்கிறோமோ அதை முகம் கொடுப் பதன் மூலம் தான் அதனை வெற்றிகொள்ள எம்மைப் பயிற்றுவிக்க முடியும். வெடி ஓசைக்குப் பயந்து கண்ணையும் காதை யும் இறுகப் பொத்திக் கொண்டாற் போல வெடி வெடிக்காது விடப் போகிறதா? காதைப் பொத்துவதனால் தம்புவதற்கு இருக்கும் ஒரு சிறு சந்தர்ப்பத்தைக் கூட தவறவிட்டு மரணிக்கவே நேரிடும் அல்லவா?



## புலியை வென்ற கதை

இதனை எனக்குப் போதித்துவிட்டு எனது குரு அதற்கு ஒரு உதார ணமும் சொன்னார்.

எனது குருவின் குருகுல முன்னோர்களில் ஒருவரான **சென் சிங் யுங்** என்பருக்குப் புலி என்றாலே இனி இல்லையென்ற பயம். அந்தப் பயத்திலிருந்து விடுபட அவர் ஒரு உபாயம் செய்தார். புலியின் வெவ் வேறு விதமான தோற்றங்களையும் பாய்ச்சல்களையும் கொண்ட படங்களை அறை முழுவதும் ஒட்டி வைத்துக்கொண்டு ஒவ்வொன்றுடனும் சண்டையிடுவது போல் பயிற்சி செய்தார். ஈற்றில் அவர் நிஜப் புலியுடன் சண்டையி டவேமுன் வந்துவிட்டார். அச்சண்டையில் 11 நிமிடங்களில் புலியை வெறுங்கையால் அடித்துக் கொன்றார்.

இத்திறமையைப் பெற அவர் செய்தது என்ன? புலி மீது தனக்குள் இருந்த பயத்தை தானே எதிர் கொண்டு நீக்கிக் கொண்டு புலி யின் பலஹீனம் என்ன என்பதைக் கண்டு கொண்டார். அதன் தாடைதான் அதன் பலஹீனம். தாடையைக் குறிவைத்து தொடர்ந்து தாக்கினார். 11 நிமிடத்தில் புலி வீழ்ந்தது.


பயம் என்பது ஒரு நிஜப் பொருளல்ல. அது மனதில் தோன்றும் ஒரு பிம்பம் தான். எதற்கு அஞ்சுகிறோமோ அதற்கு முகம் கொடுப்பதன் மூலம்தான் அதை வெற்றிகொள்ள எம்மைப் பயிற்றுவிக்கலாம். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கண்ணீரை விணாக்காதே!

கண்ணீரை விணாக்கதே
என் குழந்தாய்!
காலமெல்லாம் அது தேவை.

வளர்வாய்
வளர்ச்சியின் நிழல்பட
வசதிகள் தேடுவாய்
எல்லாம் கிடைக்காது
ஏங்கி நீ அழுவாய்.

கூடிப் பெற்றோரைக்
குறையில்லாச் சுற்றத்தை
பாழும் போர்ப் புயலில்
பறிகொடுக்க நேர்ந்திடலாம்
அழுகைதான் உனக்குண்டு.

கைநிறையக் காசுக்காய்
கண்டபடி ஓடுகையில்
காண்போரின் அழுக்காறு
கரும் பாம்பாய் தொடும்போது
தாங்க வேறு வழியில்லை
கத்தி அழ வேண்டும்.

உள்ளம் கனிய
உருக்கிய நட்பும்
கள்ளம் புரைக்கேறிக்
கடைச் சரக்காய்
மாறிடலாம்.....

விட்டில் பூச்சி
விளக்கொளியில் விழுவதுபோல்
காதல்,
காட்டும் விகசிப்பில்
கடும் புண்கள் வந்திடலாம்.....

நீயும் தழைத்து
நிழல்மரமாய் ஆனபின்னே
உந்தன் வித்துகளும்
நிம்மதியை அழிக்கும்
அப்போதும் அழுவாய்.

அப்பப்போ கிடைக்கும்
அற்பாயுள் மகிழ்ச்சிகட்கும்
ஆனந்த அழுகையுண்டு....
ஐம்புலனும் அகத்தடங்கி
ஆவி போகையிலும்
கடைக்கண் நீர்
கசிந்திடுவாய்.

ஆதலால் என் குழந்தாய்....!
கண்ணீரை விணாக்காதே
அதுவும்
தண்ணீரைப் போலத்தான்
காலமெல்லாம் தேவைப்படும்!

கு. சிறிகணேஷ்
மட். தேசிய கல்விக் கல்லூரி.

## வாழ்வும் வளைவும்!

வேப்பமரம் புயலை
வேகமாய் எதிர்த்தது
அதனால் அடைமழையில்
அடிபாறி விழுந்தது!
பார்ப்பதற்குப் பணிவாய்
இருந்த நாணல்களோ
காலத்திற் கிசைந்து
கடைசிவரை இருந்தன.

அரைத்து அரைத்து
அதனால் என்றும்
எதிர்த்து நின்ற
வெண்பற்களோ இடையில்
விழுந்து போயின!
வளைந்து தன்னை
நெகிழ்த்திக் கொடுத்ததால்
ஆயுள் இருக்கும் வரையில்
இருந்தது நாக்கு.

ஆனாலும் ஒன்று காண்!
வளைவது கூடினாலும்
வருவது அழிவுதான்.

வாழ்க்கையை ஜெயிக்க
வளைவதும் பயில்!

- வி. உதேஸ்
நாவற்குழி

## எழுதுகிறேன்


எனக்குள் நானே எழுதுகிறேன் - அந்த
எண்ணிக்கை தெரிய நாளாகும்
நினைவுக்குள் நிழல்களைத் தேடுகிறேன் - என்
நிழல்கள் நிஜமாக நாளாகும்.

கல்லுக்குள் ஈரத்தைத் தேடுகிறேன் - என்
கவிதைகள் சபையேற நாளாகும்.
நெல்லுக்குள் புற்களைக் காணுகின்றேன் - என்
நினைவுகள் சிற்பங்களாய்த் தங்கும்.

உதயத்தில் வெளிச்சத்தைக் காணுகின்றேன்
உலகம் வாழ்ந்திடவே எழுதுகின்றேன்.
பாரதியின் இதயத்தைக் காவுகின்றேன் - அவன்
பாதையில் விடியலைக் கூவுகின்றேன்

வாழ்வில்தான் வறுமையை மீட்டுகின்றேன்
இதயத்தில் செல்வத்தைச் சேர்க்கின்றேன்
தலைமுறை நிறைவுக்கு எழுதுகின்றேன் - அதனால்
இலைமறை காயாகி வாழுகின்றேன்.

- நல்லை அமிழ்தன்




## பெண்ணே!

சிசு உற்பத்திச் செய்யும்
தொழிற்சாலை.
நீ
சிந்திக்கக் கூடாது.
முக்காட்டுக்குள்
உன்னை
மூடிக்கொள்,
அப்பொழுதுதான்
மொத்த உலகும்
உன்னை வரவேற்கும், வாழ்த்தும்.

சிந்தித்தால்....
அது உனக்குச் சிறைச்சாலை
பித்துப் பிடித்தவள்,
பிரச்சினைக்குரியவள்....

சிறகு கத்தரிக்கப்பட்ட
சமாதானப் புறா நீ
மறைப்புக்குள் மண்டியிட்டு
மௌனமாய் பிரார்த்திப்பாய் -
உன்னை
விடுவித்துக் கொள்வதற்காகவும்.

அழுகையினூடே(யும்)
நீ
சாதிக்க வேண்டியவை அனந்தம்.

- றஸீனா புஹார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"அப்பா நட்சத்திரம் எப்போ பிறக்கும்?"
"மாலை நேரத்தில்"
"எப்படியப்பா பிறக்கிறது?"
"நாம் சத்தியத்தையே பேசுவதால்... நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும்போது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது"

குழந்தை ரோஹிணிக்கு இவ்வாறு பதில் சொன்ன தந்தை அந்தக் கணத்திலேயே அதை மறந்து விடுகிறார். ஆனால் குழந்தையின் மனதிலோ அது ஆழமாகப் பதிந்து விடுகிறது.

மாலை நேரம் பிறக்கிறது. நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாகப் பிறப்பதை குழந்தை அனுபவிக்கிறது.

"ஆ... அது என்ன? ஒரு நட்சத்திரம் உதிர்கிறதே....!"
குழந்தை துயரத்தில் ஆழ்ந்து விடுகிறாள்.

இந்தச் சின்னஞ் சிறிய சம்பவம்தான் மணிக்கொடி எழுத்தாளரான பி. எஸ். ராமையாவின் "நட்சத்திரக் குழந்தைகள்" சிறு கதையின் அடிப்படை.

நட்சத்திரங்களைப் பற்றிய அறிவியல் அறிவு நமக்கு எவ்வளவோ இருக்கலாம். ஆனால் அதனையொட்டிய இத்தகைய சின்னஞ்சிறு நம்பிக்கைகள்தான் மனிதனின் வாழ்வு முழுவதும் கூடவருகின்றன. இதுமனிதகுலம் முழுவதற்கும் பொதுவானது.

சின்னஞ் சிறு குழந்தை மனதில் நம்பிக்கைகள் கருகுவது மிகுந்த வலியையும் வடுவையும் ஏற்படுத்திவிடக் கூடியது. குழந்தைகள் மனதில் சிதைவுகள் உண்டாகப் பல காரணங்கள் இருக்கின்றன. இவ்வாறு பாதிப்புக்குள்ளான குழந்தைகள் சூழலிலிருந்து தனிப்பட்டு விடுகின்றனர்.

பள்ளிக்கூட தொடக்க வகுப்பு மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் பொழுது, அவர்களிடம் பேப்பர் கொடுக்கப்பட்டு அதில் அவர்களுக்குப் பிடித்தமான மாணவர்கள் மூன்று பேருடைய பெயரையும், கொஞ்சமும் பிடிக்காத மாணவர்கள் மூன்று பேருடைய பெயரையும் எழுதுமாறு கேட்டார்கள்.

பிறகு பார்த்தபொழுது, பெரும்பாலான குழந்தைகள் குறைந்தது இரண்டு சக மாணவர்களால் விரும்பப்படுபவர்களாகவும், எவருடைய வெறுப்புக்கும் ஆளாகாதவர்களாயுமிருந்தனர்.

எவருடைய வெறுப்புக்கும் ஆளாகாமல் பலராலும் விரும்பப்படுகின்ற குழந்தைகளாய் வெகு சிலர் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்புக்காக கையேந்துகிறோம்!

இவர்களே வகுப்பில் பிரபலமானவர்கள். அத்தோடு நன்றாகப் படிப்பவர்களாகவும் காணப்பட்டனர்.

வேறு சில குழந்தைகள் விருப்பு, வெறுப்பு என்று இரு பட்டியலிலும் இடம்பெறாமல் புறக்கனிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தனிமையாய் இருப்பவர்கள். அதனால் மனம் வருந்துவதாயும் காட்டிக் கொள்ளாதவர்கள்.

கடைசிப் பிரிவிலே யாராலும் விரும்பப்படாத, அதே நேரம் பலருடைய வெறுப்புக்கும் ஆளான குழந்தைகள் இடம்பெற்றனர். இந்தக் குழந்தைகள் குறித்துத்தான் உளவியலாளர் அதிகம் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்படி வெறுத்து ஒதுக்கப்படும் குழந்தைகளிடமிருந்து குழந்தைப் பருவத்துக்கே உரிய மகிழ்ச்சி பறிக்கப்படுகிறது. பல மோசமான பின்விளைவுகளை இது ஏற்படுத்துகிறது என்றும் உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பள்ளிக்கூட ஆரம்பத்திலேயே குழந்தைகள் எதிர்கொள்ளும் இந்த வெறுப்பும் புறக்கணிப்பும் பின்னாளில் அவர்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பெரும் காரணமாயிருப்பதாக இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பலர் மோசமான நடத்தையுள்ளவர்களாக மாறிவிட வாய்ப்பிருப்பதாகவும் எச்சரிக்கின்றனர். வெறுக்கப்படுகின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைத்தே ஆக வேண்டுமெனத் தீவிரமாக முனைந்த உளவியலாளர்கள், ஏன் அவர்கள் பிற குழந்தைகளால் ஏற்றுக் கொள்ளப்படாது அலட்சியப்படுத்தப்படுகிறார்கள்? அதற்கான அடிப்படைக் காரணம் என்ன? என்பதனை முதலில் ஆராய்ந்தார்கள். அவர்கள் மற்றவர்களிடம் நடந்துகொள்ளும் முறை விரும்பத்தக்கதாய் இல்லாததாலேயே இப்படி விலக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தையும் கண்டுபிடித்தார்கள்.

மற்றக் குழந்தைகளை அவதூறாகப் பேசி, அவமானப்படுத்த முனைவது, அடிக்க முனைவது, அச்சுறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடும் குழந்தைகளை மற்றக் குழந்தைகள் வெறுப்புடன் பார்க்கின்றனர். அவர்களுடன் பேசவும் விரும்புவதில்லை.

ஆனால் வெறுக்கப்படுகின்ற எல்லாக் குழந்தைகளுமே இதுபோன்ற அடாவடிச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள்தான் என்று சொல்வதற்கில்லை. மேசை மேலோ, கதிரை மேலோ ஏறி நிற்பது, சத்தமாக எதையாவது பேசிக்கொண்டிருப்பது போன்ற சாதாரண விஷயங்களினாலும் குழந்தைகள் பிற மாணவர்களினது வெறுப்புக்கு ஆளாகக் கூடும்.

சில குழந்தைகள் விஷயத்தில் காரணங்கள் இன்னும் வித்தியாசப்படலாம். சிரித்த முகத்துடன் கலகலப்பாக இருக்கும் மிகுந்த புத்திசாலி மாணவன் ஒருவனும் வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களால் வெறுக்கப்பட்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பிறகுதான் புரிந்தது. அவன் விளையாட்டு மைதானத்தில் திடீரென்று மூர்க்கத்தனமான சண்டையில் இறங்கி விடுவானென்றும், அதனால் மற்றவர்கள் விலகியிருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்தது.

மற்றுமொரு மாணவி, புத்திசாலி என்பதுடன் நிறையத் தனித் திறமைகளைப் பெற்றிருந்தாள். நிறைய புத்தகங்கள் வாசிப்பதில் விருப்பும் கொண்டிருந்தாள். அபாரமாக பியானோ வாசிக்கவும் அவளால் முடியும்.

ஆனால் வகுப்பில் பிற குழந்தைகள் அவளை ஒதுக்கியே வைத்திருந்தனர். இதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட காரணம், அவளுக்கும் அவள் வகுப்பு மாணவர்களுக்கும் இடையே பொதுவான ஆர்வங்கள் என்று எதுவும் இல்லை... அவர்கள் பகிர்ந்துகொள்ள எதுவும் இல்லை. அதனாலேயே தனித்துவிடப்படுகிறாள் என்பதுதான்.

மேலும் உடல் அவலட்சணம், ஊனம், குடும்பப் பின்னணி இவையும் கூட சில குழந்தைகள் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்றன.




பொதுவாக பிறரால் அவ்வளவாக விரும்பப்படாத குழந்தைகளுக்குப் பள்ளி வாழ்க்கை உபயோகமாயோ இன்பமாயோ அமைவதில்லை. விருப்பத்துக்குரிய குழந்தைகள் தவறுசெய்யும் பொழுது, அது பெரிய விஷயமில்லை என்பதுபோல் கண்டுகொள்ளாமல் விடப்படுகின்றது. ஆனால் விரும்பப்படாத குழந்தைகள் அதே தவறைச் செய்யும்போது, அது மிகப் பெரிய தவறாகச் சித்திரிக்கப்பட்டு இகழப்படுகின்றது.

இவையெல்லாம் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளின் மனநிலையை மேலும் பாதிக்கும் விஷயங்களாகின்றன.

பிற குழந்தைகளின் வெறுப்புக்கு ஆளாகாமலிருக்க எல்லோரும் விரும்பும் குழந்தையாகத் திகழ்ந்திட, பள்ளி செல்வதற்கு முன்பே குழந்தைகளுக்கு சில ஆர்வமூட்டும் திறமைகளைக் கற்பிக்கலாம் என உளவியலாளர்கள் சொல்கின்றனர். இத்தகைய விஷேட திறமைகளால் பிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூயேஸ் கால்வாயைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதனை வெட்டும்போது 50,000பேர் வரையில் இறந்தனர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

சுயெஸ் கால்வாய் வெட்டுவதில் வீரராகக் கருதப்பட்ட 'பர்டினன்ட் டி லெஸ"ஸ்' உட்பட பிரான்ஸ் நாட்டவர்களும் கூட கால்வாயை வெட்ட முடியாது பின்வாங்கிச் சென்றனர். அதன் பின் கால்வாய் வெட்ட ஈடுபடுத் தப்பட்ட

# ஐம்பதினாயிரம் பேரைக் கொன்ற சுயேஸ் கால்வாய்....

தொழிலாளர்கள் பலருக்கு மலேரியாநோய் ஏற்படவே 50, 000 பேர் இறக்க நேரிட்டது.

8 கோடி பவுண்கள் செலவிடப்பட்டும் கால்வாயின் வேலை முடிக்கப்படுமா என்ற சந்தேகமே இருந்தது.

1880இல் பிரான்ஸ் கால்வாய் வெட்டும்பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டதும் 1903இல் அமெரிக்கா அதை ஒரு சவாலாக எடுத்து பல இன்னல்களுக்கு மத்தியில் பணியைத் தொடங்கியது.

பல சிரமங்களுக்கு மத்தியில் இடர்கள் ஏற்பட்டபோதும், அமெரிக்கா எடுத்த முயற்சியைக் கைவிடவில்லை. 60,000 பேர் வரையில் வேலைக்கமர்த்தி பல சிரமங்களுக்கு முகங்கொடுத்ததோடு 140 ரயில்களும், 16 கோடி டொன் டைனமைற் மண்ணை வெளியேற்றப் பயன்படுத்தப்பட்டு கடைசியாக 1914இல் பகீரதப் பிரயத்தனமாய் அமைந்த அந்த அபூர்வ நிகழ்வு நடந்து முடிந்தது.

**ஏ. எஸ். இம்தியாஸ்**
**வெல்பொதுவெவ.**

குழந்தைகள் இவர்கள்பால் ஈர்க்கப்படலாம். அவ்வாறான ஈர்ப்புக்குரிய திறமைகளைப் பெற்றிருக்கும் குழந்தைகளை யாரும் புறக்கணிக்கிறார்கள் என்ற பேச்சே இருக்காது. ஆனால், இதுவும் அவ்வளவு எளிதான காரியமன்று.

"புறக்கணிப்பு" என்பது பொதுவான பிரச்சினை. அது கவனிக்காமல் விடப்படும் எந்தக் குழந்தைக்கும் நேரிடலாம். இதைச் சமாளிப்பது எப்படி என்பது பெற்றோரிடம் உள்ள சவாலாகும்.

அவர்கள் தம் குழந்தைகளிடம் என்னபேச வேண்டும். அவனுக்கு அல்லது அவளுக்கு நண்பர்கள் இருக்கிறார்களா? எத்தனை பேர்? எப்படிப்பட்டவர்கள்? எதனால் நண்பர்களானார்கள்? அல்லது பிறரோடு அடிக்கடி சண்டையா? போன்ற விபரங்களை விசாரித்தறிய வேண்டும். மேலும் குழந்தையின் வகுப்பு ஆசிரியரிடமும் இது குறித்துப் பேசலாம். ஏனென்றால் பெற்றோரை விட அவர் அந்தக் குழந்தையிடம் அதிக நேரம் செலவிடுவதுடன், அதன் நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனிப்பவராக இருக்கிறார்.

குழந்தை மற்றவர்களோடு விளையாட்டில் ஈடுபடுவதில்லை என்றால், அது குறித்து உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்படியெல்லாம் சககுழந்தைகளிடம் மகிழ்ச்சியுடன் பழக வேண்டும் என்பதைச் சொல்லித்தர வேண்டும்.

நண்பர்கள் இல்லாமற் போனாலும், தான் பிறரால் வெறுக்கப்படுகிறோம் என்ற உணர்வு குழந்தைக்குள் வேர் விடாமல் பார்த்துக் கொள்வது பெற்றோரின் மிக முக்கியமான பொறுப்பு. குழந்தைகள் சுய பச்சாதாபத்தையும், தம்மைப் பற்றிய கீழான மதிப்பீட்டையும் மனதில் ஏற்படுத்திக் கொண்டு தமது மன ஆரோக்கியத்தைச் சீர்குலைத்துக் கொள்வது அவர்களது எதிர்காலத்தின் பிரகாசத்தைப் பாழாக்கிவிடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

## உவற்றில் நனைய



| நாடுகள் | | 3 மாதம் | 6 மாதம் | 12 மாதம் |
|---|---|---|---|---|
| இலங்கை நேரடி விநியோகம் கொழும்பு நகரில் மட்டும் | ரூ | 90.00 | 180.00 | 360.00 |
| இலங்கை தபால் மூலம் | ரூ | 135.00 | 270.00 | 540.00 |
| இந்தியா - பாகிஸ்தான் - மாலைதீவு | ரூ | 180.00 | 360.00 | 720.00 |
| சிங்கப்பூர் - ஹொங்கொங் - மத்திய கிழக்கு நாடுகள் | ரூ | 210.00 | 420.00 | 840.00 |
| லண்டன் - அவுஸ்திரேலியா - ஜப்பான் | ரூ | 240.00 | 480.00 | 960.00 |
| அமெரிக்கா - கனடா - மேற்கிந்திய தீவுகள் | ரூ | 291.00 | 582.00 | 1164.00 |
| சகல நாடுகளுக்கும் கடற்தபால் கட்டணம் | ரூ | 130.50 | 261.00 | 522.00 |

தனிப்பிரதியின் சில்லறை விலை ரூ 30.00

சகல காசோலைகளும் "The Associated News Papers of Ceylon Ltd" என்னும் பெயருக்கு வரையப்பட்டு The Marketing Manager, P.O. Box No. 1198, Colombo எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தியின்றி



அந்த மலைகள் மிகவும் பயங்கரமாக எழுந்து நின்றன. மக்களின் உரிமை உடைமை இத்தியாதிகளை சங்காரம் செய்த தென்னாபிரிக்க வெள்ளைக்காரக் கொடுமைகளை விடக் கோரமாகத் தலை விரித்துக் கொண்டு நிற்கின்றன.

உள்ளே எது நடந்தாலும் அதை வெளியுலகுக்குக் காட்டுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டது போல் அவை அந்தத் தேயிலைத் தோட்டத்தை அரண் செய்து நிற்கின்றன.

அந்த மலைகளின் ராட்சத உடலில் பட்டி பிடித்தாற்போல் மலைகளைச் சுற்றி வரும் செம்மண் பாதையில் கைப்பிரம்பைச் சுழற்றியபடி நடந்து கொண்டிருக்கிறார் தோட்டத்து டிஸ்பென்ஸர்.

தோட்ட மக்கள் பாஷைப்படி டாக்டரைய்யா!

பையில் ஸ்டெதஸ்கோப்பும் கையில் பிரம்பும் இருக்கிறதுதானே. டாக்டரில்லாம பிறகு....!

தலையில் பாய்த் தொப்பியும் மனதில் துவேஷமுமாய் வெள்ளைக்கார நடை நடந்துகொண்டிருந்த சிங்கள டாக்டரய்யாவைக் கண்டதும் லயத்து நாய்களுக்கு ஒரே குஷி. கூட்டமாகக் குரைத்தபடி ஓடி வந்தன.

கூலிக்காரன் நாய்தானே என்னை என்ன செய்துவிடும் என்ற அசட்டையுடன் நடந்துகொண்டிருந்த அய்யா டக்கென்று நின்றார்.

பாய்ந்து வந்த நாய்களும் பிரேக் போட்டு நின்றன.

பாதையடியில் நாய் குரைத்த சத்தம் கேட்டு காந்தி படத்துக்கு மாலை போட்டுக் கொண்டிருந்தவன் றோட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

டாக்டரய்யா லயத்துப் படியில் இறங்கிக் கொண்டிருந்தார்.

"செலாங்கய்யா... லயம் பாக்கவா?"

"ஆமாம், தலைவர் என்ன இன்னைக்கு வேலை இல்லியா....?" என்று கேட்டபடி இறங்கி வந்த ஐயா "யாருட்டு படம் இது... மாலை எல்லாம் போடுறே..." என்று கேட்டார்.

முன்பொரு தடவை அவரே அவனிடம் கூறி இருக்கின்றார் 'இந்தியாக்கார ஆளுங்களுக்குக் கொஞ்சம்கூட தேசப் பற்றுக் கெடையாது.... இந்த லயம் முழுக்கப் பாரு ஒவ்வொரு வீட்டிலேயும் காந்தி படம் இருக்கும். நேரு, சுபாஷ் சந்திரபோஸ் படம் இருக்கும். எவன் வீட்டிலயாவது நம்ம தலைவருட்டு படம் ஒன்று இருக்கா. ஒரு சேனாநாயக்கா, பண்டாரநாயக்கா.... கெடயாது. ஆனா சொல்லிக்கிறது மட்டும் இது எங்க நாடு. இதுல எங்களுக்கும் உரிமை வேண்டும் அப்படி இப்படின்னு' என்று.

'அய்யாவுக்கு ஏன் இந்த வேண்டியில்லாத வெவகாரமெல்லாம். லயம் பாக்க வந்தா லயத்தைப் பாத்துட்டுப் போக வேண்டியதுதானே' என்று நினைத்துக் கொண்டவன் அவரிடமே கேட்டுவைத்தான்: "யாரார் வீட்டுல என்னென்ன படம் மாட்டியிருக்குன்னும் ஐயா கணக்கெடுக்குறீங்க போல..." என்று.

"அதில்ல தலைவரே, இந்த ஆளுங்களை எல்லாம் புடிச்சு வெறட்டிப்புடனும். இது உங்க நாடு இல்லே... இந்த நாட்டின் தலைவர்கள்லாம் உங்க தலைவர்கள் இல்லே.... உன் காந்தி, உன் நேரு இருக்கிற நாட்டுக்கே போடான்னு இவங்களை எல்லாம் புடிச்சு வெறட்டிப் புடனும்...."

"இதையே தானே உங்க தலைவர்களும் சொன்னாங்க...சொல்றாங்க....சொல்லப்போறாங்க... 'நீங்கல்லாம் எங்க நாட்டு மக்கள் இல்ல. நீ எல்லாம் ஓடிப்போ... இந்த நாட்டுல உங்களுக்கு எதுவும் கெடயாதுன்னும், கடைசித் தமிழனையும் இந்த நாட்டை விட்டு கப்பலேற்றிய பிறகுதான் எனக்கு சாவே வரும்' என்றும் சங்கல்பம் செய்து கொண்டவர்களுடைய படங்களை எல்லாம் கண்ணாடி போட்டு மாட்டிக்கொள்ள இவர்கள் என்ன பேடிகளா... எங்களை அடிப்பதற்கு ஆள் கூட்டி வரவில்லை காந்தி. ஆனா அவர் எங்ளுக்காக அடிபட்டிருக்கின்றார். அதனால்தான் அவரை ஏற்றுக்கொள்கின்றோம். காந்தி படத்துக்கு பிரேம் போட்டு மாட்டிக்கொள் என்று யாரும் இந்த மக்களுக்கு கட்டளை இடவில்லையே..."

இப்படிச் சுடச்சுட முகத்திலடித்தாற்போல் முன்பொரு தடவை டாக்டரய்யாவுக்கு பதில் கொடுத்தது அவன் நினைவுக்கு வந்தது.

காந்தியின் படத்தைப் பார்த்து இது யாருடைய படம் என்று கேட்பதன் மூலம் தனக்கும் தனது தலைவர்களுக்கும் பெருமை தேடிக் கொள்வதாக எண்ணிக் கொள்ளும் அய்யாவின் அறியாமை அவனுக்குச் சிரிப்பூட்டியது.

"இது யாருன்னு அய்யாவுக்குத் தெரியலையா.... அடப்பாவமே 'மனிதர்கள் தங்கள் நாட்டை நேசிக்கிறார்கள் என்பதால் மற்ற நாட்டை வெறுக்கிறார்கள் என்பதல்ல பொருள்' என்று கூறிய மகாத்மா இவர்தான். மற்றவர்களுடைய தலைவர்களை, மற்ற நாட்டவர்களை வெறுப்பதன் மூலம் மட்டுமே உங்கள் நாட்டை, உங்கள் தலைவர்களை, உங்கள் நாட்டவர்களை நேசிப்பதாக கற்பனை பண்ணிக்கொள்ளும் உங்கள் போன்றவர்களுக்கு உலகத்துக்கே ஒப்பற்றவரான ஒரு மனிதரைத் தெரிய முடியாதுதான்...."

"தெரியாமல் என்ன நல்லாத் தெரியும்... ஏன் மாலை போடுறேன்னுதான் கேட்டேன்...." என்றபடி பேச்சை முறித்துக்கொண்டு தலைவர் வீட்டுக் கோடியில் நுழைந்து அடுத்த லயத்துக்குப் போய்விட்டார் அய்யா.

மேசையில், காற்றில் படபடத்த நோட்டீசை எடுத்து மறுபடியும் பார்த்துக் கொண்டார் தலைவர்.

அவர் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சி கொண்டாடும் காந்தி விழா பற்றிய நோட்டீஸ் அது.

பேச்சாளர்கள் வரிசையில் அவருடைய பெயரும் தடித்த எழுத்தில் இருக்கிறது.

தென்னாபிரிக்காவிலும் நேபாளம் போன்ற நாடுகளிலும்சிறுபான்மைஇந்தியமக்களுக்காக அஹிம்சையுடன்அவர்செய்தஅறப்போர்பற்றிப் பேச வேண்டும் என்பது அவருடைய அவா.

முக்கியமாகத் தென்னாபிரிக்காவில் அவர் அனுபவித்த கொடுமைகளைப் பற்றி இன்றெல்லாம் பேசலாம்.

காந்தி எழுதிய 'தென்னாபிரிக்க சத்தியாக்கிரகம்" என்னும் நூல் மேசையில் கிடக்கிறது. அதை எடுத்து வாசிக்கும் போதே அவருடைய நெஞ்சு உருகியது.

கறுப்பர்கள் நடக்கக் கூடாது என்று தடுக்கப்பட்ட வீதியொன்றில் தெரியாத்தனமாக காந்தி நடந்தபோது அங்கு காவல் நின்ற போலீஸ்காரன் நேராக அவரிடம் வந்து ஏன் வந்தாய் என்றும் கேட்காமல், ஒரு வார்த்தையும் பேசாமல், 'போய்விடு' என்று கூறாமல் தன்னுடைய பலம் கொண்ட மட்டும் பூட்ஸ் காலால் அவர் நெஞ்சில் எட்டி உதைத்தான்.

இந்தத் திடீர் தாக்குதலால் அவர் நிலை குலைந்து போனார்.

அவருடைய நோஞ்சான் உடம்புக்கு போலீஸ்காரனின் முரட்டு உதையைத் தாங்கிக் கொள்ளும் சக்திகிடையாது. எகிறிப் போய் விழுந்தார். பாதையின் எதிர்ப்பக்கம் இருந்த வெள்ளைக் கல்லில் அவருடைய முகம் மோதி நசுங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரத்தமின்றி



தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க அவருக்குச் சில நிமிடங்கள் பிடித்தன.

வாயில் வழிந்த இரத்தத்தைத் துடைத்து விட்டுக் கொண்டார். நெற்றிப் பொட்டு வீங்கிப் புடைத்திருந்தது. எங்கே வலிக்கிறது என்று தெரியாமல் உடல் முழுவதும் நோவு எடுத்தது.

காந்தி உதைபட்ட செய்திகாட்டுத் தீ போலப் பரவியது. அவரை உதைத்தவனைக் கோர்ட்டுக்கு இழுத்துப் பழி வாங்குமாறு அனைவரும் அவரை வேண்டினர்.

ஆனால் காந்தி மறுத்துவிட்டார்.

"அவனுக்குகென்ன தெரியும் பாவம். சாவி கொடுத்துவிட்டவன் யாரோ. இவன் ஆடுகிறான். அவன் என்னைஉதைத்தான் என்பதல்ல அவமானம். என் சமூகத்தையே உதைத்திருக்கிறான்"

தலைவர் கண்களை மூடிக் கொண்டார். கோடாக நிற்கும் இமை விளிம்பில் மணியாக உருள்வது கண்ணீரல்ல. கரைந்த அவரது உள்ளம்.

ஆஹா! இவரல்லவா மகாத்மா.

கத்தியின்றி, ரத்தமின்றி காந்தி நடத்திய அகிம்சைப் போர்களை பற்றித் தன்னால் எவ்வளவு அழகாகப் பேச முடியும் என்பதைத் தீர்மானித்துக்கொண்ட பிறகே ஜில்லாவில் இருந்து வந்த கடிதத்துக்கு ஒப்புதல் பதில் போட்டார்.

தான் ஒன்றித்துப்போன ஒரு விஷயத்தை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும்போது உணர்ச்சிப் பெருக்குடன் சொற்பெருக்காற்றலாம் என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது.

இன்று நேற்றா மேடை ஏறுகின்றார்.

சொற்பொழிவுக்கு ஒத்துக்கொண்டால் தலைப்பையும் தரும்படி கேட்டிருந்தார்கள் விழாக் குழுவினர்.

அவர் எழுதி அனுப்பிய தலைப்பைத்தான் விழா நோட்டீசில் அச்சிட்டிருக்கின்றார்கள்.

தலைப்பை நினைக்கையில் அவருக்கு இப்போதும் புல்லரிக்கின்றது.

"கத்தியின்றி ரத்தமின்றி"

00 00 00

அன்று ஒரே அடை மழை.

வானம் பொத்துக்கொண்டு விட்டதோ என்று ஐயுறும் அளவுக்கு அடித்துக்கொண்டு ஊற்றுகிறது.

இந்த பூமியே இப்படித்தான்.

எப்போது பெய்யும் எப்போது காயும் என்று யாராலும் நிர்ணயித்துக் கூற முடியாது.

நோவா காலத்தைய நாற்பது நாள் மழையும் அன்றே பெய்து தீர வேண்டும் என்ற நோக்கத்துடன் அதி காலையிலே காற்றும் மழையுமாகக் கொட்டத் தொடங்கி விட்டது.

மலையில் நிற்கும் மரங்கள் ஆடி அழன்று சோபை கெட்டுப்போய் நிற்கின்றன.

கூடையும் தலையுமாக கொழுந்தெடுக்க மலையேறிவிட்டவர்கள் குன்னிப் போய் மரத்தடிக்கு மரத்தடி நிற்கின்றனர் நனைந்த கோழிகள் போல் வெளிறிப்போய்.

தடதடவென்ற ஓசையுடன் எங்கோ ஒரு சவுக்குக் கிளை முறிந்து விழுகிறது.

"ஏய் புள்ளங்களா ஒருத்தரும் மரத்தடியில் நிக்காதீங்க. வாதேதும் புண்டு விழுந்தாலும் விழும்... ஆபத்து" என்று கத்தியவாறு நின்று கொண்டிருந்த மரத்தடியில் இருந்து பெயர்ந்தோடினான் கங்காணி.

கையை நீட்டிக் கொழுந்தெடுக்க முடியாவிட்டாலும் பெயருக்குக்கூட மலையில் நிற்க முடியவில்லை.

ஊன்றி நிற்கும் கால்களும், ஊஞ்சலாடித் தொங்கும் கைகளும் உணர்விழந்து சுரணை கெட்டுப்போய்க் கொண்டிருக்கின்றன.

வேறோர் மலையில் வேலை செய்யப்போய் உரப்பட்டியில் ஒண்டி நின்ற தோட்டத்துத் தலைவர் ஆபீசை நோக்கி ஓடினார்.

கம்பளிச் சட்டையும் தானுமாகக் கதகதவென்று உட்கார்ந்திருந்த துரை உள்ளிழுத்த புகையை கூரையை நோக்கி ஊதிவிட்டு "ஏஸ்.. தலைவர் என்னா இந்த நேரம்?" என்றார்.

"வேலை விட்டுறனுங்க... மழை அடிக்கிற அடி தாங்க ஏலாதுங்க. மரம் ஏதும் ஒடிஞ்சு விழுந்தா ஆபத்து..."

"சரி விட்டுறுவோம்.... ஆனா இன்றைய சம்பளம்....?"

"முழுச் சம்பளம் குடுக்கணுங்க. தோட்டத்துக்கே உழைச்ச ஆளுங்கதானே. மழை இப்படிப் பேயாட்டி முழு நேரம் வேலை செஞ்சுருக்குங்க தானே...."

"சரி இன்னும் ஒரு அரை மணி நேரம் பார். மழை விடாட்டி எடுத்த கொழுந்தை நிறுத்துட்டுப் போகச் சொல்லு..."

"நல்லங்க" என்று ஆபீஸ் படி இறங்கிய தலைவரை துரையின் குரல் நிறுத்தியது.

"கணக்கப்பிள்ளையை ஆபீசுக்கு வரச்சொன்னேன்னு சொல்லு உடனே..."

00 00 00

"இப்போது மணி ஒன்பதுதானாகிறது. இப்போதே வேலை நிற்பாட்டி முழுப் பேர் கேட்கிறார்கள். நீ எப்படியாவது பனி ரெண்டறுதி கொழுந்தெடுக்கப் பார். அப்போதுதான் பாதிக்குப் பாதியாவது தேறும். ஒரே நேரம் நிறுத்தாலும் பரவாயில்லை.... சரி போ"

தொப்பையாக நனைந்தபடி மழைக் கோட்டும் தானுமாக ஆபீசுக்கோடி வந்த கணக்கப்பிள்ளையிடம் துரை இப்படிக் கூறினார்.

பெருமாள் மாடாய் "வெறி வெல் சார்" என்று தலையாட்டிவிட்டு மழைக்கோட்டைச் சுமந்தபடி படியிறங்கினார் கணக்கப்பிள்ளை.

முட்டையுடன் ஊரும் கட்டெறும்புக்கூட்டமாய் கூடையுடன் சாரி சாரியாக ஆட்கள் ஊர்ந்து கொண்டிருந்தனர் - பெரட்டுக் களத்தை நோக்கி - கொழுந்து நிறுக்க.

கைக்கடிகாரம் நனைவதையும் பொருட்படுத்தாமல் மழைக் கோட்டுக்கு வெளியே கையை நீட்டி மணியைப் பார்க்கின்றார் ஆபீசில் இருந்து படியிறங்கிக் கொண்டிருந்த கணக்கப்பிள்ளை.

மறுபடியும் உற்றுப் பார்த்தார். மணி ஒன்பது ஐந்து.

இந்த மழையில் ஆட்களை மலையில் நிறுத்தி வைப்பதும் ஒன்றுதான். லயத்துக்கனுப்புவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுதான். மலையில் நின்றால் மட்டும் வேலை செய்யவா போகிறார்கள்! வேலை செய்யத்தான் முடியுமா?

ஆனால் பன்னிரண்டு மணிக்கு முன்பாக இவர்களை வீட்டுக்கனுப்பிவிட்டால் துரையிடம் தப்பிக்க முடியுமா அவரால்.

சாரைப் பாம்பு போல விர்ரென்று இறங்கினார் குறுக்குப் பாதையில்.

சர்ரென்று ஊற்றிய மழை சப்பாத்துதொப்பிமழைக்கோட்டுஆகியவற்றில் டப்டப்பென்று விழுந்து தெறித்தது.

நீரடித்த காடாய்க் கிடக்கிறது பெரட்டுக்களம்.

ஆட்கள் கூடையும் படங்குமாய் கூனிக் குறுகிக்கொண்டு நிற்கின்றனர்.

"ஏ கங்காணி ஏன் இதுகளை எல்லாம் இழுத்துக்கிட்டு வந்தே... மணியைப் பார்..." கையை நீட்டிக் காட்டுகிறார். "ஒன்பதே கால்தான். இப்பவே நெறுக்க ஏலாது. ஒன்பதே காலுக்கே நிறுத்து இந்தாளுகளை வீட்டுக்கனுப்பிட்டா ஒங்க பாட்டன் துரை சும்மாருப்பானா.... இப்பவே நிறுக்ககேலாது. போய் வேலை செய்யச் சொல்லு... ம்ம்.... போ... எல்லாம்...."

கணக்கர் கத்தினார்.

கணக்கப்பிள்ளை ஐயாவுக்குப் பயந்த ஓரிருவர் கூடையைத்தூக்கி தலையில் மாட்டினர்.

"ஒருத்தரும் போக வேணாம். போடு கூடையைக் கீழே...."

தலைவர் நின்று கொண்டிருந்தார்.

கணக்கப்பிள்ளை தலைவரை முறைத்துப் பார்த்தார்.

"அய்யா சும்மா மொறைக்காதீங்க. தொரைக்கிட்டக் கேட்டுட்டுத்தான் ஆளுகளை மலையில் இருந்து எறங்கச் சொன்னேன் நான்..."

"வேலை செய்யுற ஆளுகளை மலையில இருந்து எறங்கச் சொல்ல நீ யார்...? தொரையே சொல்லியிருந்தாலும்கூட நீ வந்து எனக்கிட்டத்தான் சொல்லியிருக்கணும்."

"இங்கபாருங்கையா" ஒருபெண் காலைக் காட்டுகிறாள். நாட்டியக்காரி சலங்கை கட்டியது போல் விரல் பருமனில் ரத்தம் குடித்த அட்டைகள் தொங்கிக்கொண்டிருந்தன.

அதைக் கவனித்ததாகக் கூடக் கணக்கப்பிள்ளை காட்டிக்கொள்ளவில்லை.

"தொரைதான்போகச்சொல்லிட்டாரே உங்களுக்கென்னங்கய்யா வந்தது... நீங்க கையை ஒடிச்சிக்கிட்டு சம்பளம் குடுக்கிறாப்புல..."

"கையை ஒடிக்கிற காலை ஒடிக்கிற கதை எல்லாம் நம்மக்கிட்ட வாணாம்... நான் நெறுக்கப் போறதில்லே... நீ எல்லாம் மலைக்குப் போ...."

"நிறுக்காட்டிப் போ... கொஞ்சம் கூட ஈவு இரக்கம் கெடையாதவன்" என்றபடி ஒருவன் கூடையைக் காலால் எட்டி உதைத்தான்.

கொழுந்து விசிறியடித்தது.

"ஏண்டா பாத்துக்கிட்டு நிக்கிறீங்க கொட்டீட்டு வா...."

நாலைந்து இளவட்டப் பையன்கள் கூடைகளை எத்திவிட்டனர்.

"நிறுக்கப் போறியா இல்லையா...." இது தலைவர்.

"நீ ஆயிரங் காரணம் சொல்லு நான் நிறுக்கப் போறதில்லே....." இது கணக்கப்பிள்ளை.

"ஆளுங்க எல்லாம் குளிர் புடிச்சுச் செத்தா...?"

"மண்ணும் ஈரமாத்தான் இருக்கு... குழி வெட்ட லேசாத்தான் இருக்கும்."

"திமிர் பிடிச்ச ராஸ்கல்.... தொலைஞ்சு போ.... ஒனக்குக் குழிவெட்டவும் தரை ஈரமாத்தான் இருக்கு..."

ஆத்திரம் கொண்ட தலைவரின் கவ்வாத்துக் கத்தி கணக்கப்பிள்ளையின் தோளில் பாய்ந்தது.

கொய்யா மரத்தில் கொத்தியது போல் கணக்கப்பிள்ளையின் தோள் எலும்பில் கொத்தி நின்ற கத்தியுடன் பிரக்ஞையற்று கீழே விழுந்தார் கணக்கப்பிள்ளை.

ரத்தத்தில் மூழ்கிய கத்திதனது சிவந்துவிட்ட கண்களால் தலைவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தது. ●

## "வொறுக்கஸ்"



எத்தியோப்பியப் பெண்கள் பேரழகு படைத்தவர்கள். இங்கே ஒரு இளம் பெண்ணின் நடனம் பார்த்தேன். நடனம் முழுக்க அந்தப் பெண் தலையை ஒரு பக்கம் சாய்த்து கண்களால் நிலத்தை நோக்கியபடியே ஆடினாள். அவள் கைகளுக்கும் கால்களுக்கும் வேலை குறைவு. மார்புகளும், கழுத்தும், தலையும் மாத்திரம் நளினமாக குலுங்கிக் குலுங்கி அசைந்தன. பெண்ணின் முகத்தை மட்டும் கடைசிவரை பார்க்கவே முடியவில்லை. இது என்ன நடனம் என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். பரதநாட்டியம், கதக், கதகளி, ஒடிசி, மணிப்புரி போன்ற நடனங்களைப் பார்த்த கண்களுக்கு அப்படித்தான் தோன்றியது.

ஆனால் பிறகு சிந்தித்துப் பார்த்ததில் அந்த நடனத்திலும் ஓர் அழகு இருந்ததாக எனக்குப் பட்டது. அந்த நடனமே திருப்பி திருப்பி மனதிலே வந்தது. அதில் ஒரு நளினமும் மனதைக் கவரும் சக்தியும் இருந்தது புலப்பட்டது. ஒரு நாட்டு மக்களின் அழகுணர்ச்சியையோ, கலை வெளிப்பாட்டையோ சரியாக எடை போடுவதற்கு எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்ற எண்ணம் வலுத்தது.

மேற்கு ஆபிரிக்காவில் நான் இருந்த சமயம். ஒரு நாள் தமிழ் சினிமாப்படம் ஒன்றை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஆபிரிக்கர் ஒருத்தர் உள்ளே வந்தார். நன்றாகப் படித்து உயர் பதவியில் இருப்பவர். வீடியோவில் கல்யாண சீன் ஒன்று நடந்து கொண்டிருந்தது. மணப்பெண் வழக்கம் போல ஒரு காலை மடித்து வைத்து மற்றக் காலை குத்துக்காலிட்டு நிலம் பார்த்து உட்கார்ந்திருந்தாள். இந்த மனுசன் கண் கொட்டாமல் இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டுச் சொல்கிறான், "இந்தப் பெண் இருக்கும் முறை எவ்வளவு செக்ஸியாக இருக்கிறது" என்று. எனக்கு அதிர்ச்சி. அகராதிப்படி அந்தப் பெண் மிகவும் நாணமாக, ஒடுக்கமாக, பவ்யமாக அல்லவா இருந்தாள்.

இன்றும் எத்தனையோ, நாங்கள் மதித்துப் போற்றும் சில விஷயங்கள் பிற நாட்டவருக்கு விநோதமாகப் படுகின்றன. அவர்கள் செய்யும் காரியங்களோ எங்களை ஆச்சரியப்பட வைக்கின்றன. கன்னிமை என்பது எவ்வளவு பெரிய விஷயம். கன்னிமை காப்பது என்பது எங்கள் கிராமத்துப் பெண்களுக்கு ஒரு தவம் மாதிரி.

அமெரிக்கப் பள்ளிக்கூடங்களில் பதினாறு வயதுக்கு மேல் கன்னித்தன்மையோடு ஒரு பெண் இருந்துவிட்டால் அவளுக்கு எவ்வளவு அவமானம். அவள் பொய்க்காவது கன்னி கழிந்துவிட்டது என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

இது மாத்திரமா? அமெரிக்கக்காரனுக்கு எழுந்து மரியாதை செய்து 'சேர்' என்று அழைத்தால் பிடிப்பதில்லை. ஆங்கிலேயனுக்கு கால்களை ஒடுக்கி வைத்து மரியாதையாக முன்னே தலைகுனிந்து நிற்பது அசிங்கமாகப் படுகிறது. ஜெர்மன்காரனுக்கு கைகட்டி பவ்யமாக நின்றால் போதும், வேறு வினையே வேண்டாம். ஆனால் எங்கள் ஊர்களில் இன்றுகூட ஒரு பெரியவரைக் கண்டதும் தோளில் போட்ட சால்வையை எடுத்து கக்கத்தில் வைப்பது நடந்துகொண்டுதான் வருகிறது.

இப்படித்தான் ஆப்கானிஸ்தானில் ஒரு நாள் நாங்கள் பத்துப் பதினைந்துபேர் ஆட்டுமயிரில் செய்த கம்பளத்தில் நிரையாக உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்தோம். பத்து அடி நீளமான ரொட்டி ஒன்று எங்கள் மடிகளில் மலைப்பாம்பு போல தவழ்ந்து கொண்டிருந்தது. நான் என் மடியில் கிடந்த ரொட்டிப் பகுதியை இழுத்துப் பிய்த்து கடித்துக் கொண்டிருந்தேன்.

அங்கேயெல்லாம் மரக்கறிவசதி அரிது. கோழி, ஆடு, ஒட்டகம் என்று எல்லாம் இறைச்சி மயம்தான். தேநீரில் தோய்த்து ரொட்டியைச் சாப்பிட்டபடியே நான் அவர்களுக்கு எங்கள் ஊர் நடப்பு ஒன்றைச் சொன்னேன். அங்கே எப்படி உடும்பு பிடிப்பார்கள் என்றும், அதை உயிருடன் கட்டித் தொங்கவிட்டு, தோலை உரித்து என்னமாதிரிசமைப்பார்கள் என்பதையும் விவரித்தேன். அவர்கள் ஸ்தம்பித்து போய்விட்டார்கள். பத்து 'அவ்கானி' காசு கடனுக்காக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லத் தயங்காதவர்கள். கல்நெஞ்சக்காரர்கள். இவர்கள் தங்கள் வாழ்நாளில் பார்த்திராத ஒரு உடும்புக்காக இரக்கப்பட்டார்கள். என்னால் நம்ப முடியவில்லை....

**- 'வடக்கு வீதி' சிறுகதைத் தொகுதிக்கு அ. முத்துலிங்கம் எழுதியுள்ள என்னுரையிலிருந்து....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற

# உங்கள் குழந்தையின் காய்ச்சல்

உங்கள் குழந்தையின் பெயர் என்ன? சிந்து என வைப்போமா? வயது மூன்று. இப்பொழுது அவளுக்குக் காய்ச்சல் சரியாக காய்கிறது 103ல். மனைவி கலங்கிக் கண்ணீர் சிந்துகிறாள். பக்கத்து வீட்டுக் குழந்தைக்கும் இப்படித் தான் மோசமாக காய்ந்து வலிப்பு வந்த தாம் எனச் சூடேற்றுகிறாள் அம்மம்மா.

ஆபீஸ் நண்பனின் குழந்தைக்கு காய்ச்சல் கூட மூளைக் காய்ச்சலானதாம் என்று கேள்விப்பட்டது ஞாபகத்தில் வருகிறது.

நேரமோ நடுச் சாமத்தை அண்மிக்கிறது. இந்த நேரத்தில் எந்த டொக்டர் கதவைத் திறப்பார்? இயக்கமோ ஆமியோ என்ற பயம் என்ன செய்யலாம்?

"கம்பளிச் சட்டையைப் போட்டு, போர்வையால் இழுத்து மூடு" என்கிறாள் அம்மம்மா. "சீ கூடாது, வலிச்சுப்போடும். ஐஸ் கட்டியை தலைக்கு வை" என்கிறாள் மாமி.

குளிர்ந்த தண்ணியால் ஸ்பொன்ச் பண்ணுவோம்' என்கிறாள் மனைவி. அத்துடன் நின்றுவிடாது மின் விசிறியை உச்சத்தில் விசிறச் செய்கிறாள். முறைத்துப்பார்க்கும்மாமியாருக்கு 'சூடு வெளியேறினால் வலிக்காது' என்று விளக்கம் கொடுக்கிறாள். குழந்தையோ குளிரால் நடுங்குகிறது.

நீங்களோ குழந்தைக்கு பரசிற்றமோல் மாத்திரையில் பாதியை பருக்க முயற் சிக்கிறீர்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையைக் கூறிக் கொண்டிருந்தால் குழந்தையின் துன்பத்தைக் குறைப்பது எப்படி?

### காய்ச்சலைப் எப்படித் தணிப்பீர்கள்?

காய்ச்சலால் துவண்டு கிடக்கும் குழந்தையின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்பதே உங்கள் எல்லோரது எண்ணமாக இருக்கும்.

ஆனால் யார் கூறியது சரி? மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கருத 'துக்களைப் பார்ப்போமா?

## உடலைக் குளிரவைக்கும் முறை உதவுமா?

'குளிர்ந்தநீரால்ஸ்பொன்ச்செய்தல், குளிக்கவார்த்தல், உடைகளைக் கழற்றி வெறும் மேலுடன் விடுதல், மின் விசிறியைகச் சுழலவிட்டு காற்றினால் சூட்டை வெளியேற்றுதல் ஓடிக்கோலோன் போடுதல் போன்ற முறைகள் உடற் சூட்டைத் தணித்து காய்ச்சல் உள்ளடங்காமல் தவிர்க்கும். இது காய்ச்சல் வலி ஏற்படாமல் தடுக்க உதவும்' என சிலர் ஆலோசனை கூறினார்கள். இன்னமும் கூறி வந்திருக்கிறார்கள்.

**ஆனால் இது தவறான முறைகள் என இப்பொழுது தெரியவருகிறது.**

எமது உடலின் வெப்ப நிலையை மூளையிலுள்ள ஹைப்போதலமஸ் **(Hypothalamus)** என்ற பகுதியே கட:டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகிறது. உடல் தொற்று நோய்களால் பீடிக்கப்படும்போது அது உடல் வெப்பநிலையை வழமையை விட உயர்ந்த நிலையில் இருக்குமாறு கட்டளையிடுகிறது. உடல்வெப்பநிலைஉயர்ந்திருப்பதால்எமதுஉடலால்கிருமித் தொற்றை எதிர்த்துப் போராட முடியும்.

குளிர்ந்த நீரால் ஒத்தனம் கொடுத்தல், மின் விசிறி போன்றவை உடல் வெப்பத்தைத் தற்காலிகமாகக் குறைக்கும். ஆயினும் ஹைபோதலமஸின் கட்டளைப்படி உடல் வெப்பநிலை உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதால் அந்த அளவைஎட்டவே உடல் முயலும். இதனால் குளிரப்பண்ணும் முறைகள்நோயாளியைகடும்குளிராலும்நடுக்கத்தாலும்துன்பப்படுத்தவே செய்யும். எனவே இம்முறைகளினால் பயனில்லை என்றே இப்பொழுது கருதப்படுகிறது.

அப்படியானால் காய்ச்சலோடு துன்பப்பட்ட வேண்டியதுதானா' என



அங்கலாய்க்கிறீர்களா? காய்ச்சலைத் தணிக்க பரசிற்றமோல், அஸ்பிரின் போன்ற மாத்திரைகள் நிச்சயம் உதவும்.

'ஸ்பொன்சிங்போன்றமுறைகள்உதவாதுஎன்கிறீர்கள். அப்படியானால் மாத்திரைகள் எப்படி வேலை செய்யும் எனக் கேள்வி எழுப்புகிறீர்களா?'

காய்ச்சலைத் தணிக்கும் மாத்திரைகள், உடல் வெப்பநிலையை உயர்த்தி வைக்கும் ஹைப்போதலமஸின் கட்டளையையே மாற்றி உடல் வெப்பத்தை சாதாரண நிலைக்குக் குறைக்கின்றன. இதனால் காய்ச்சல் தணிகிறது.

### ஸ்பொன்சிங் ஒருபோதும் உதவாதா?

**இல்லை! ஸ்பொன்சிங், மின் விசிறி, ஓடிக்கொலோன் போன்றவை உதவக்கூடிய சந்தப்பங்களும் இருக்கவே செய்கின்றன.**

1. காய்ச்சல் வலிப்பு வரக்கூடிய குழந்தைகளுக்கும், முன்பு காய்ச்சல் வலிப்பால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் பரம்பரையில் வலிப்பு நோய் உள்ள குழந்தைகளுக்கும் காய்ச்சல் கடுமையாக ஏறிக் காயும்போது அவை நிச்சயம் உதவும். காய்ச்சலைத் தணிக்கும் மாத்திரைகளைக் கொடுத்தாலும் அவை உடலில் உறிஞ்சப்பட்டு செயற்பட்டு சூட்டைத் தணிக்க சிறிது நேரம் எடுக்கவே செய்யும். அதற்கிடையில் ஸ்பொன்சிங் போன்ற முறைகள் உடனடியாகச் சூட்டைத் தணித்துவிடும். அதன் பின் மாத்திரைகளின் செயல்பாடு தணிந்து காய்ச்சலை நிலை நிறுத்தும்.
2. இன்னுமொருஉதாரணத்தையும்கூறலாம். வெப்பமானசூழலிலுள்ள காய்ச்சல் குழந்தைக்கு தடித்த கம்பளிபோன்ற உடைகளை அணிவித்திருக்கீர்கள் என வைத்துக் கொள்வோம். அணிந்திருக்கும் உடை காரணமாக அதன் உடல் வெப்பநிலை $42^C$ அதாவது $108^C$ க்கு அதிகரித்துவிடலாம். இத்தருணத்தில் குளிரவைக்கும் முறைகள் உதவும். ஏனெனில் உடல் வெப்பமானது ஹைபோதலமாஸ் அறிவுறுத்தப்பட்டதற்கு மிக அதிகமாக அதிகரித்துவிட்டால் உடலால் அதை கட்டுப்படுத்தவே முடியாதுபோய்விடும். மாத்திரைகளும் உதவ முடியாது. ஆனால் ஸ்பொன்சிங் கைகொடுக்கும்.

### ஸ்பொன்சிங்ற்கு குளிர் நீரா? இளஞ்சூட்டு நீரா?

ஸ்பொன்சிங்கிற்கு முன்னைய காலங்களில் குளிர்ந்த நீரையே உபயோகிப்பார்கள். ஆனால் இப்பொழுது இளஞ் சூட்டு நீர்தான் உபயோகிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன?

ஸ்பொன்சிங்கின்போது தோல் ஊடாக உடற் சூடு அகற்றப்படுகிறது. இதற்கு தோலினுடைய இரத்த ஓட்டம் சரியாக இருப்பதுஅவசியம். ஐசை அல்லது குளிர் நீரைப் பயன்படுத்தினால் இரத்தக் குழாய்கள் சுருங்கிவிடும். இதனால் வெப்பம் அகற்றப்படுவது தடைப்பட்டு சூடு உள்ளடங்கிவிடும். எனவே ஸ்பொன்சிங் செய்ய வேண்டிய தேவை எப்பொழுதாவது ஏற்பட்டால் இளஞ் சூட்டு நீரையே உபயோகியுங்கள். ஒருபோதும் குளிர் நீரை உபயோகிக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலர் தினம்

கதிர்
A.R.ரஹ்மான்
P.C.ஸ்ரீராம்

மாறாதது எதுவுமில்லை. எல்லாமே மாறிவந்தாலும், சில ஆதார உணர்ச்சிகள், நம் மூதாதையருக்கு இருந்தது போலவே நமக்கும் இருந்து வருகின்றன.

காலையில் சாப்பிட்டு நாலு மணித்தியாலமாகிவிட்டதென்றால் வயிற்றுக்குள் அழைப்புக் கேட்கிறது. பசி கிள்ளுகிறது.

பகல் முழுக்க உடல் வருந்த உழைத்திருந்தால் இருளானதும் தூக்கம் கண்ணைச் சுழற்றுகிறது.

யாராவது நம்மைத் தொடர்ந்து சீண்டிக் கொண்டிருந்தால் கோபம் வருவதிலும் மாற்றமில்லை.

இதுபோலத்தான் காதலும். மனதுக்குகந்தவனைக் கண்டால் பெண்ணுக்கும் தனக்குப் பிடித்தவளைக்கண்டால் ஆணுக்கும் ஏற்படுகிற ஆதார உணர்ச்சிகள் இன்னும் அப்படியேதானிருக்கின்றன.

''காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம் காதற் பெண்களின் கடைக்கண் பணியிலே'' என்று காதலினால் உயிர் வீரத்திலேறிய நம் பாட்டனார்களைப் போலவே நமக்கும் வீரம் வருகிறது.என்ன.காலதேசவர்த்தமானத்தைக் கருத்தில் கொண்டு கொஞ்சம் அடக்கி வாசிக்கிறோம்.

படை நடத்திப் போய் பகைவர்களை வாளால் வெட்டிச் சாய்த்துவிட்டுக் காதலியைக் குதிரையில் ஏற்றிக்கொண்டு கடுகிவர முடியுமா நம்மால்....?

ஏதோ கார் ஒன்றை வாடகைக்குப் பிடித்துக்கொண்டுபோய் சந்திமுனையில் நிற்கலாம். பெட்டியோடு நம்மாள் வந்து ஏறிக்கொண்டால் ஏற்றி வந்துவிடலாம்....

மற்றபடி அதே அசட்டுத்தனங்கள்.... பால் கசப்பது, படுக்கை நோவது, சம்பந்தா சம்பந்தமில்லாத நேரங்களில் கண்கள் *Freeze* ஆகி நிற்பது.... எல்லாம் காலங் காலமாய்த் தொடர்கின்றன.

காதலில் மாற்றமில்லைதான். ஆனாலும் காதலை வெளிப்படுத்தும் முறைகளில் மாற்றம் ஏற்பட்டுத்தான் வருகின்றன.

தமிழ்த் திரைப்படங்களைப் பொறுத்தவரை பாகவதர், கிட்டப்பா, சின்னப்பா காலங்களில் காதலனும் காதலியும் வேறு யாருமற்ற உத்தியாவனங்களில் ஒருவருக்கொருவர் எட்டடிதள்ளிஅமர்ந்துகொண்டு ''பிரிய சகியே, என் பிரேமையே...'' என்றும், அதற்குப்பதிலாக அவள் ''நாதா நானும் உம் மேல் ப்ரீதியாகிவிட்டேன்'' என்றும் காதலித்துக் கொண்டிருந்தார்கள்....

பிறகு சிவாஜி, ஜெமினி, சரோஜாதேவி, சாவித்திரி காலங்களில் ''சிட்டுக்குருவி முத்தம் கொடுத்து சேர்ந்திடக் கண்டதை....'' ஒருவருக்கொருவர் காட்டி வெட்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ''போறவளே போறவளே பொன்னுரங்கம் என்னைப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிஞ்சுக்காம போறியே நீ..." என்று அந்தக் காலத்திய ஸ்டைலில் *Eve Teasing* செய்து கொண்டிருந்தார்கள்.

பின்னர் கமல், ரஜினி காலத்தில் திக்கித் திக்கியவாறு "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று நேரடியாகச் சொன்னார்கள்.

காதலன் பேரை காதலியோ, காதலிபேரைக் காதலனோ பச்சை குத்திக் கொண்டார்கள்.

புறாக்கள், மேகங்கள், தென்றலையெல்லாம் தூதுவிட்டது போல *Train* ஐ, பஸ்ஸை, மின்சார வெளிச்சத்தையெல்லாம் காதல் தூதாக்கினர்.

ஒருவர் போட்டோவை ஒருவர் எரித்து சாம்பலைக் கலக்கிக் குடித்தார்கள்.

காலடி மண்ணெடுத்து திருநீறு போல நெற்றியில் பூசினார்கள்.

கையைப் பிடித்திழுத்துக் கொண்டு ஊரை விட்டே ஓடினார்கள்.

"*I love you and I must get you*" என்று வில்லத்தனமாகவும் காதலித்தார்கள்.

அடுத்த தலைமுறை, காதலில் இன்னும் பல புதுமைகளைக் காட்டியது. "உன்னைப் பிடிச்சிருக்கு.... வா ஓடிப் போகலாம்" என்று



அதிரடிக் காதலில் இறங்கியது.

"நீ இங்கு சுகம், நான் அங்கு நலமா?" என்று இடம் மாறிப் புக்கு இதயம் எய்தியதை முரண் சுவையாய்ச் சொன்னார்கள்.

"ன்றே கிக்லி தகா" என்று தலைகீழாயும் காதலிக்கிறார்கள்.

*I Love You* என்பதைச் சுருக்கி *One Four Three* என்கிறார்கள்.

வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் உருவமில்லாத உருண்டை அசைந்து கொண்டிருப்பதை உணர்கிறார்கள்.

"உன்னில் என்னையும் என்னில் உன்னையும் ஊற்றிக் கொள்வோம் வா" என்றழைக்கிறார்கள்.... காதலின் உருகு நிலை!

இந்தக் காலகட்டத்தில் வெற்றி பெற்ற பல படங்கள் காதலின் பல்வேறு கோணங்களை வெளிப்படுத்துபவையாக இருந்தன. பெற்றோர்களின் பாசத்திற்கு மரியாதை செலுத்தும் முகமாக காதலைத் தியாகம் செய்ய முன்வருதல், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமலே இதயங்கள் பிணைப்புண்ட காதல், காதலுக்காக உயிரையும் விட்டுவிடலாம் என்ற விடலைப் பருவ வேகம் முடிந்துபோகும் தருணத்தில் எதிர்கால இலட்சியத்துக்காக காதலைக் கூட தியாகம் செய்து விடலாம் என்கிற பக்குவம் உண்டாதல், பெற்றோருக்காக காதலிப்பதாக நடிக்க வேண்டிய தேவை ஏற்படும் இரு நல்ல நண்பர்களுக்கிடையில் உண்மையாகவே காதலுண்டாகிவிடுதல், காதலைத் துச்சமாக உதறிவிட்டு இரு சமூகங்களுக்கிடையேயான பிணக்குத் தீர்வதற்குப் பொறுப்புணர்வோடு நடந்துகொள்ளும் இளைஞர் என்றெல்லாம் காதலின் பிறிதான முகங்களையும் தமிழ் சினிமா ஓரளவேனும் சமீப காலங்களில் காண்பித்து வெற்றி கண்டிருக்கிறது.



காதல் கனிரசமே! என்றாரம்பித்து கம்ப்யூட்டர் இன்ரர்நெற் வரையில் வந்து சேர்ந்திருக்கிறனர் சினிமாக் காதலர்கள். "இது ஹை-டெக் காலம். ஒரு காலத்துல லெட்டர் எழுதினான். அப்புறம் போன்லேயே டெவலப் பண்ணினான். இப்போ இன்டர்நெற் மூலமாத் தான் நிறைய லவ்நடக்குது. என் ஹீரோவும் ஹீரோயினும் அப்படி கம்ப்யூட்டர் காதலர்கள்" என்று இப்போது பரபரப்பாகச் பேசப்படும் தனது "காதலர் தினம்" படம் பற்றிச் சொல்கிறார் இயக்குநர் கதிர்.



கதிர் தனது முதல் படமான "இதயம்" படத்திலேயே மென்மையான உள்ளங்களைத் துடிக்க வைத்து காதலுக்கு கனம் பண்ணியவர். 'என்றும் அன்புடன்', 'உழவன்' ஆகியவை அவ்வளவாக எடுபடவில்லை. பின்னர் கே. ரி. குஞ்சுமோனின் பிரமாண்டத் தயாரிப்பில் அனைவரையும் 'காதல் தேசம்' பற்றிப் பேச வைத்தவர்.

இப்போது இந்தியன் தயாரிப்பாளர் ஏ. எம். ரத்தினத்தின் செலவில் "இன்றைய நவீன தமிழ் சினிமாவின் பிரமிப்புத் தேவையான கம்ப்யூட்டர் கிரா:.பிக்ஸ் வித்தைகளோடு 'காதலர் தின'த்தை பெரு விழாவாக எடுத்து வருகிறார்.

"காதல் என்று வந்துவிட்டால் கைக்காசு பற்றிக் கவலைப்பட முடியுமா? என்ன ஏதென்று பார்க்காமல் செலவு செய்து வருகிறேன்" என்று காதலுக்காக கணக்குப் பார்க்காமல் காசை அள்ளி வீசி வருவதாகச் சொல்கிறார் தயாரிப்பாளர் ஏ. எம். ரத்தினம்.

"காதலுக்குப் பரிசாக என்னென்னவோ தரு வாங்க. தன்னையே தர நினைச்ச ஒரு மனசோட கதைதான் காதலர் தினம்" என்கிறார் கதிர். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நட்சத்திரத் தம்பதியர்" என்ற அடை மொழியினால் இன்று தமிழ்ப் பத்திரிகைகள் குறிப்பிடும் தம்பதி விஜயகுமாரும் மஞ்சுளாவும். இவர்கள் நட்சத்திரத் தம்பதியர் மட்டுமல்ல 'நட்சத்திரக் குடும்பம்' என்று குறிப்பிட வேண்டியவர்கள். மகனும் மூன்று மகள்களும் கூட நடிகைகள்தான். கடைசி மகள் மட்டும் இனிமேல்தான் கதாநாயகியாக நடிக்க வேண்டும். மற்றபடி அவரும் குழந்தை நட்சத்திரம்தான்.

இந்தப் பெருமைமட்டுமல்லாமல் விஜயகுமார் - மஞ்சுளா ஜோடி தமிழ்த் திரையுலகைப் பொறுத்தவரை பல விஷயங்களைச் சாதித்துக் காட்டும் 'திறமை'யுள்ள குடும்பமாக கிசுகிசுக்கப்படுவது.. கே.கே. நகரிலுள்ள அவர்களது வீட்டில் அடிக்கடி பார்ட்டிகள் நடப்பதும், தமிழ்ப் படவுலகில் எதையும் சாதிப்பதற்கான - திரைப் பிரமுகர்களின் பலவீனங்களை முதலாக்கிக் கொள்ளும் இடமாக அது இருப்பதும் மிகப் பிரபல்யமான கிசுகிசு.

நட்சத்திரத் தம்பதியர் என்று பார்த்தால், விஜயகுமார் - மஞ்சுளாவுக்கு முன்னும் பின்னும் நிறைய ஜோடிகள் உண்டு. நடிகையரைப் பொறுத்தவரையில் திரையுலகைச் சார்ந்தவர்கள் யாரேனும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் அல்லது தொழிலதிபர்கள் எவராவதுதான் வந்து வாய்த்தாக வேண்டும் என்ற துரதிர்ஷ்ட நிலைமை.

ஆரம்ப காலத்தில் பிரபலமான திரை ஜோடியாக என். எஸ். கிருஷ்ணனும் ரி. ஏ. மதுரமும் விளங்கினர். இதே போல் நகைச்சுவைத் தம்பதியராக கே. ஏ. தங்கவேலுவும் ஈ. வீ. சரோஜாவும் கூட திருமணம் செய்து கொண்டனர்.

மற்றொரு நகைச்சுவை நடிகர் வெண்ணிறஆடை மூர்த்தியின் மனைவி மணிமாலாவும் நடிகைதான்.

இலட்சியத் தம்பதிகள் என்று பாராட்டுப் பெற்ற எஸ். எஸ். ஆரும் விஜயகுமாரியும் திருமணம் செய்து கொண்டு ஜோடியாகவே பல படங்களில் நடித்தனர். காதல் மன்னன் ஜெமினியும் சாவித்திரியும் கணவன் மனைவியாக பல வருடம் வாழ்ந்தனர்.

எம். ஜி. ஆரின் இரண்டாவது மனைவியும், இறக்கும் வரை உரிமை கொண்ட மனைவியுமாக இருந்த வி. என். ஜானகி அம்மையாரும் ஒரு முன்னாள் நடிகைதான்.

ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா ஜோடியும் திருமணம் செய்துகொண்டு பல படங்களில் நடித்தனர். கமலின் இப்போதைய மனைவி சரிகா முன்னாள் ஹிந்தி நடிகை. பாக்கியராஜ் பூர்ணிமாவைத் திருமணம் செய்தார். அவரது சீடன் பார்த்திபன் சீதாவைக் கல்யாணம் செய்து கொண்டார்.

கார்த்திக்கின் மனைவியும் அவரோடு ஜோடியாக ஒரு படத்தில் நடித்தபோதே காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டனர். சுரேஷ் மேனன், ரேவதி இன்றும் ஜோடியாக நடித்து வருகிறார்கள். ரகுவரன் ரோகிணியைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். பிரகாஷ்ராஜ் டிஸ்கோ சாந்தியின் தங்கையைத் மணமுடித்திருக்கிறார். அவரும் சில படங்களில் நடித்தவர்தான்.

இந்த வரிசையில் மலையாளப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் போது காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட ஜெயராம், பார்வதி ஜோடியும் சேர்ந்துகொள்கிறார்கள். இருவரும் அதிகளவில் மலையாளப் படங்களில் நடித்திருந்தாலும் பார்வதி அறிமுகமாகியது தமிழில் 'பூவுக்குள் பூகம்பம்' படத்தில்தான். அதுபோல், ஜெயராம் இப்போது பிரபலமாகியிருப்பதும் தமிழில்தான்.

நடிக்க வருவதற்கு முன் ஜெயராம் செய்து கொண்டிருந்த மிமிக்ரி நிகழ்ச்சிகளைப் பாராட்டி பார்வதியும், பார்வதியின் நடிப்பைப் பாராட்டி ஜெயராமும் எழுதிய கடிதங்களுடன் இவர்கள் காதல் ஆரம்பித்தது. "பார்வதியின் கண்களுக்குப் பரம ரசிகனான நான் அந்தக் கண்களுக்குள்ளேயே வீழ்ந்து விட்டேன்' என்கிறார் ஜெயராம்.

"சினிமா உலகில் நடிகர் நடிகையர் திருமணம் கேலிக் கூத்தாகி விட்டது. காதலிப்பதும் திருமணம் செய்து கொள்வதும், அதே வேகத்தில் விவாகரத்துச் செய்வதும் சர்வ சாதாரணமாகி விட்டது. அதுபோல் எங்கள் காதலும் எங்கள் காதலும் ஆகிவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கிறோம்" என்கிறது இந்தக் காதல் ஜோடி. •



# திரையிலிருந்து வாழ்க்கை வரை வந்த காதல்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகபலன் : கணித்துச் சொல்பவர்



**மேஷம்:** உங்களால் ஏற்படும் தவறுகளை முதலாம் முறையே சரி செய்து கொள்ளுங்கள். நிறைய நேரம் மிச்சப்படும். உடல் நலம் சற்றே தேற வாய்ப்புண்டு. குடும்பச் சூழல் குழப்பம் தராது. வியாபாரிகள் நஷ்டப்படலாம். தொழில் பார்ப்பவர்கள் முதலாளிகளுக்கு நஷ்டத்தைஏற்படுத்தப்பார்ப்பார்கள்.ஜாக்கிரதையாகவேலையைப் பாருங்கள்.பெண்களில்குடும்பப்பெண்கள்பலதொல்லைகளுக்குமத்தியில் வண்டியை இழுக்க வேண்டியிருக்கும். தொழில் புரியும் பெண்கள் சம பலன்களைப்பெறவாய்ப்புண்டு.கவனம் அவசியம்.குழந்தைகளை அருகிலிருந்து அவதானிக்க வேண்டிய மாதம். மாணவ, மாணவிகள் கலைத் துறையிலும் ஈடுபட அதிக வாய்ப்புகள் தெரிகிறது. தவறவிடாதீர்கள். If the work is very important, do not mind the rain.



**ரிஷபம்:** இரண்டுநாளைக்குஒருதரமாவதுஉங்களைநீங்களே மனக்கண்ணாடி முன் நிறுத்தி அழகுபடுத்திக் கொள்ளுங்கள். உடல் நலத்தை ஏன் மறக்கின்றீர்கள். வேளா வேளைக்கு சாப்பிடுங்கள். பல நலக் குறைவுகள் நீங்கும். குடும்பச் சூழல் சுமார். மாற்றமிருக்காது. வியாபாரிகளும், தொழில்பார்ப்பவர்களும் லாபமில்லையே எனச் சோர்ந்துவிடாது தொடர் முயற்சியில் ஈடுபட வேண்டும். குடும்பப் பெண்கள் சோர்ந்து போயிருப்பீர்கள். கவலை வேண்டாம். நல்ல பொழுது அதிக தூரமில்லை.தொழில்புரியும்பெண்களுக்கும்இதுபொருந்தும்.குழந்தைகள் துடுக்குத்தனத்தால் காயம் ஏற்படுத்திக் கொள்ளப் பார்ப்பார்கள். அவதானம்.மாணவ,மாணவிகள் ஆசிரியர்களின் அனுசரணையைப்பெற வாய்ப்புண்டு.முன்னேற்றம்தெரிகிறது.Sentiment is the melady of Life.



**மிதுனம்:**நிறையபொருள்களின்உண்மைத்தரத்தைவிடஅதைச் சுற்றியிருக்கும் லேபல், பெட்டி போன்றவை அழகாக இருக்கும். அது வியாபாரத் தந்திரம். மனிதர்களிடையேயும் அப்படித்தான். உடல் நலம் தேறிக் கொண்டு வருவதால் பழைய பல்லவியை தொடங்காதீர்கள்.குடும்பச்சூழல்-கசமுசாக்கள்நீங்கும்சூழ்நிலை.தொழில் புரிவோருக்கு நல்ல எதிர்காலத்தின் ஆரம்பம். வியாபாரிகளும் முயற்சியின் பலன்களை பெறத் தொடங்குவீர்கள். தொழில் புரியும் பெண்களுக்கு நல்ல முன்னேற்றமுண்டு.குடும்பப்பெண்களும்மகிழ்ச்சியடைவீர்கள்.குழந்தைகள் வயிற்று நோய்களால் பீடிக்கப்படலாம். கவனியுங்கள். மாணவ மாணவிகள் சபாஷ்பெறுவீர்கள்.வாழ்த்துக்கள். Parrots speaks, only to satisfy human.



**கடகம்:** வெளிநாடு போவதற்காக பாஸ்போர்ட் எடுப்பது சரி. பாஸ்போர்ட் இருப்பதால் வெளிநாடு போக அடம்பிடிப்பது....? உடல் நலம் எப்போதும் போல அதிக பிரச்சினை இருக்காது. குடும்பச் சூழல் - அமைதி நிலவும். வியாபாரிகள் அதிக முயற்சியில் ஈடுபட வேண்டி வரும். தொழில் பார்ப்பவர்கள் அலுவலகத்தில் ஏதாவது விசேட திறமை காட்ட வேண்டிய நேரம். குடும்பப் பெண்களுக்கு பெரிதாக கவலையோ, மகிழ்ச்சியோ என்று ஒன்றும் தென்படவில்லை. தொழில்புரிவோர்மேலும்மேலும்வேலைப்பழுவால்ஆட்கொள்ளப்படுவீர்கள். குழந்தைகள் அமைதியாக இருப்பார்கள். மாணவ, மாணவிகள் நல்ல முன்னேற்றம்பெறஆரம்பநடவடிக்கைகளில்ஈடுபடுவீர்கள்.Bees doest like to offer their honey to anyone - but it always get stolen.



**சிம்மம்:** யாரையாவது அறிமுகப்படுத்தும்போது பெயரை மட்டும் கூறபழகிக்கொள்ளவேண்டும்.அவர் இன்னார் இன்னார் என்பது அநேக இடங்களில் அவசியப்படாத ஒன்று. உடல் நலத்தில் புதிதாக சில மாற்றங்கள் தென்படுகிறது. நல்லதற்கல்ல. கவனியுங்கள். குடும்பச் சூழல் மந்த நிலைக்கு மாறியிருக்கும். அதையும் கவனியுங்கள். தொழில் செய்வோர் நண்பர்களையும் தொழிலையும் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். வியாபாரிகள் புதிதாக புதுமைகள் செய்யவும் புறப்பட வேண்டாம். தொழில் பார்க்கும் பெண்கள் உயர் அதிகாரிகளோடு மனஸ்தாபப்பட நேரிடும். குடும்பப் பெண்களுக்கு உறவினரால் தொல்லை. குழந்தைகளுக்கு சளி, இருமல் போன்ற உபாதைகள் தென்படுகிறது. மாணவ, மாணவியர்கள் படிக்கவென்று அமைதியான நேரத்தைத் தேர்ந்தெடுங்கள். More then the shoe, the feet needs cleaning and polishing.



**கன்னி:** இறந்தவர்களோடும், தேவர்களோடும் கதைக்கிறேன் என்று பல ஆசாமிகள் இருக்கிறார்கள். நீங்கள் மனிதர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருங்கள். அது போதும். உடல் நலம் சீர் கெட்டிருக்கும்.குடும்பச்சூழல்சுமார்.கவலைப்படஒன்றுமில்லை. அதிக சந்தேகம் அநாவசியம். வியாபாரிகள், தொழில் புரிவோர் சிறந்த முன்னேற்றம்,லாபம்போன்றவற்றைஅடைவீர்கள்.தொழில்புரியும்பெண்களுக்கு சிறப்புகள் தென்படுகிறது. வழிப்பறித் திருட்டுக்களில் அவதானம். குடும்பப் பெண்கள் அமைதியாக இருப்பீர்கள். குழந்தைகள் உற்சாகமாக இருப்பார்கள்.ஊக்கப்படுத்துங்கள்.மாணவ,மாணவிகள்பொதுஅறிவுத்துறையில் ஈடுபடலாம்.நல்லவாய்ப்புக்கள்உருவாகும். When you talk toomuch, you are damaging the nature, more then yourself.



**துலாம்:** மகிழ்ச்சி என்பது பல கலவைகளால் ஆக்கப்பட்ட ஒரு அமிர்தம்.அந்தக்கவலைகள்என்னவென்பதைஅறிந்துகொள்ள, அன்பு வழி சொல்லுகிறது. உடல் நலம் தன் சுய ரூபத்தைக் காட்ட தொடங்கும்.குறிப்பறிந்துமருத்துவம்பாருங்கள்.குடும்பச் சூழல்ஏனோதானோநிலை.நீங்கள்மாறினால்அதுவும்மாறும்.வியாபாரிகள் சுமார் லாபம். வேலை பார்ப்போருக்கு தொழில் மீதுள்ள நாட்டம் குறைய வாய்ப்புண்டு. பொய்கள் சொல்வதைத் தவிருங்கள். குடும்பப் பெண்கள் எதிலும் ஈடுபாடு காட்டாமை, நிலவரத்தை சீர் கெடுக்கப் பார்க்கும். தொழில் புரிவோர் சக ஊழியர்களால் சிரமப்படுவீர்கள்.குழந்தைகள் சுட்டித்தனத்தின் உச்சியிலிருப்பார்கள். அமைதியாகச் சீர்படுத்துங்கள். மாணவ மாணவிகள் அடாவடித்தனத்தை கைவிட்டு அமைதியாகப் படியுங்கள். The unwriten language could be spoken only through eyes.



**விருச்சிகம்:** கடையைப் பார். பொருளைத் தருகிறேன் என்றால் உடனே அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இல்லாமல் அது இல்லை இது இல்லை என்றால் என்றுமே இல்லை தான்.உடல்நலம்பூரணபரிசீலனைக்குஅனுப்பப்படவேண்டியது. குடும்பச்சூழ்நிலைமகிழ்ச்சியாக இருக்கும்.வியாபாரிகளுக்குமுன்னேற்றம். தொழில் பார்ப்பவர்கள் வேளா வேளைக்கு கொடுத்த விடயங்களை முடித்துக்கொள்ள வேண்டும். தொழில் புரியும் பெண்கள் உயர் அதிகாரிகளின் மதிப்பையும், குடும்பப் பெண்கள் பெரியோரின் ஆசீர்வாதத்தையும் பெறுவீர்கள்.வயிற்றுஉபாதைகள்குழந்தைகளைபீடிக்கும்.வைத்தியஆலோசனை அவசியம்.கைமருந்துவேண்டாம்.மாணவமாணவிகள்மிகுந்தஆர்வத்துடன் கற்கும் காலம். மிகுந்த ஆசிகள். Life becomes brtghter if our money could blend with love.



**தனுசு:**இரண்டு கைகளிலும் பாரம் கூடும்போது மனதின் எங்கோ ஒரு மூலையில் உண்மைகள் உணரப்படுகின்றன. உடல் நலம் அதிக கவனயீனத்தால் சீர்கெடத் தொடங்கிவிட்டது. குடும்பச் சூழல் உங்களது நடத்தையால் மேலும் மேலும் தடுமாறும். தொழில் புரிவோர் எந்தவிதமான மாற்றங்களையும் எதிர்பாக்க முடியாது. வியாபாரிகள் ஒரே கதியில் பிரயாணிக்கலாம். குடும்பப் பெண்களுக்குக் கணவர்களால் தலைவலி. தொழில் புரியும் பெண்களுக்கு மேல் மட்ட கெடுபிடிகள் குவியும். குழந்தைகள் பொறுமையற்று அலைக்கழிய குறிகளுண்டு. மிகக்கவனமாகக்கையாளுங்கள்.மாணவ,மாணவிகள்கல்வியைத்தவிர்ந்த மற்றைய பொழுதுபோக்குகளில் அதிக நேரம் செலவிட வேண்டாம். If you repeat a lie for several times, it starts reflecting on you. Beware!



**மகரம்:** எல்லாவற்றிலும், எங்கும், எப்போதும், எல்லாரிடத்திலும் "விஷம்"என்றஒன்றுபிரித்தெடுக்கமுடியாமல்ஒன்றியிருக்கிறது. மனிதன் மற்றைய சக்திகளினின்றும் மாறுபடுவது இதன் அடிபடையில்தான். உடல் நலம் - குறைகளில்லை. குடும்பச் சூழல் சுமார். வியாபாரிகளுக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. தொழில் புரிவோர் அலுவலக சார்பில் உயர் கல்விகள் போன்ற சலுகைகள் பெறுவார்கள். குடும்பப் பெண்கள் நல்ல செய்திகள், விசேடங்கள் போன்றவற்றில் ஈடுபடக்கூடிய தருணம். தொழில் புரியும் பெண்களுக்கு பொருள் வரவு, புகழ் போன்றவை கிட்டும். குழந்தைகள் உற்சாகமாக இருப்பார்கள். மாணவ மாணவியர் அதி சிரத்தையுடனுடம், அவதானத்துடனும் கல்வியில் ஈடுபடசகலவாய்ப்புகளும்தென்படுகிறது.வாழ்த்துக்கள். You may remind, remember, praice any good thing - even thousand times.



**கும்பம்:** மரத்துக்கு அடியில் சாப்பிட்டுவிட்டு, ஐந்து நட்சத்திர ஹோட்டலின் முன்னே பல்லைக் குத்திக் கொண்டிருப்பவனைப் பார்த்து ஏமாந்துவிட்டு, அவனை நொந்து கொண்டால்....? உடல் நலத்தில் ஜாக்கிரதையாக இருங்கள். உங்களை நம்பி ஒரு குடும்பம்இருக்கிறது.தொழில்செய்வோர்விசேடமானமாற்றங்களைக்காண முடியாது. வியாபாரிகள் பழைய பாக்கி களை வசூல் பண்ணப் பாருங்கள். அரைவாசி தலைவலி தீர்ந்துவிடும். குடும்பப் பெண்கள் இல்லாத குழப்பங்களை நினைத்து அலட்டிக்கொள்வீர்கள். தொழில் சார்ந்தவர்கள் அவ்வப்போதுதொழில்விடயத்தில் அவதானத்தோடுநடந்துகொள்ளவேண்டும். குழந்தைகள் சுமாராக இருப்பார்கள். கவலை வேண்டாம். மாணவ, மாணவிகள் பெரியோர்களின் அறிவுரைகளின்படி தொடர்ந்து படியுங்கள். வெற்றி நிச்சயம். Everybody has a free gift package called "Advicel".



**மீனம்:** முகத்தை மிக மிக சோகமாக வைத்துக்கொண்டு துக்க வீட்டுக்குப் போய் உட்கார்ந்திருப்பதெல்லாம் பழைய, பழகிய ஸ்டைல். கொஞ்சம் மனதில் உண்மையான சோகப் பறிமாறலோடு, அனுதாபம் தெரிவியுங்கள். அது போதும்! உடல் நிலை மோசமடைய வாய்ப்புண்டு. அதிக கவனம் அவசியம். குடும்பச் சூழல் எப்போதும் போல இருக்கும். மாற்றங்களில்லை. தொழில் புரிவோர் புதியவாய்ப்புகளில் நாட்டமேற்படும். முயற்சியுங்கள். வியாபாரிகள் வியாபாரப் போட்டியாளர்களினால் அலைச்சலடைவீர்கள். குடும்பப் பெண்கள் அநாவசியச் செலவுகள் அடையவும், தொழில் புரிவோர் சேமிப்புக்களில் கைவைக்கவும் அறிகுறிகள் தென்படுகிறது. குழந்தைகள் சுமாராக இருப்பார்கள். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றமடையக்கூடிய தருணம், தவற வேண்டாம். Filling the blanks needs meaningful elements.

**கிரகாச்சாரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாலாயி**
**தெளிவத்தை ஜோசப்**
**துரைவி வெளியீடு**
**83, இரத்தினஜோதி**
**சரவணமுத்து**
**மாவத்தை,**
**கொழும்பு - 13.**
**விலை: 40**
**ரூபா பக்கம் 160**

இது மலையக எழுத்தாள முன்னோடிகளில் ஒருவரான நாடறிந்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் மூன்று குறுநாவல்களைக் கொண்ட தொகுதி.

**ஞாயிறு வந்தது, மனம் வெளுக்க, பாலாயி** ஆகிய மூன்று குறுநாவல்களுமே மலையக தேயிலைத் தோட்டத்து உழைப்பாளிகளின் வாழ்க்கையைச் சொல்வன. 'இலங்கைத் தேயிலை சுவை மிக்கது' என்று கூறி நாம் பருகும் தேநீரின் உள்ளேமறைந்திருக்கும்மனித உழைப்பும், அது சுரண்டப்படும் அவலமும் நம் அடிநாக்கில் பட்ட வெறும் கசாயம் போல் உணர்த்துகின்றன.

**'மனம் வெளுக்க' குறுநாவலிலிருந்து....**

பங்களா மரம் என்று சொல்லப்படுவதில் ஒரு பெருமை இருப்பாதாக மரம் எண்ணிக் கொண்டதே ஒழிய 'என்னையிட்டல்லவா பங்களா பெருமைப்பட வேண்டும்' என்று சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொள்ளவில்லை. இந்த மண்ணில் மக்களைப் போல!


பங்களாவைச் சுற்றியுள்ள சுவரின் வெளிப்பக்கம் மட்டுமே தமிழைக் கேட்டிருக்கிறது. உட்பக்கம் கேள்விப்பட்டதெல்லாம் ஆங்கிலம்தான். காதல், மொழி, சல்லாபம் - சண்டை சச்சரவு, முனகல் - மழலை - அத்தனையும் ஆங்கிலம்தான்! விநோத விநோதமான உருவங்களுடன்கூடியஅவர்களின்நாய்கள்குரைப்பதும் ஆங்கிலத்தில்தான்!

தோட்டங்களுக்கு எடுக்கப்படும் துரைமார்கள் இலங்கையர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் பிறகு கூட இலங்கை குடியுரிமை பெற்ற வெள்ளைக்காரர்களே வந்து போய்க் கொண்டிருந்தால் பங்களாவின் உட்பக்கச்சுவர்கள்தமிழையோசிங்களத்தையோகேட்கும் வாய்ப்பை இழந்துகொண்டே இருந்தன.

இலங்கை குடியுரிமை பெற வேண்டும் என்ற எண்ணமோ பெற்றுத்தான் ஆக வேண்டும் என்ற ஒரு நிலையோ இல்லாத காரணத்தால், குடியுரிமை பெற்ற ஆங்கிலேயர் கிடைப்பது கடினமாகிவிடும் பட்சத்தில், யாராவது சிங்களவர்களோ அன்றித் தமிழர்களோ துரையாக பங்களாவுக்குள் நுழைவதுமுண்டு.

அப்படி எத்தனையோ ஈஸ்வரர்களும், சிதம்பரங்களும், பெர்னாண்டோக்களும், சில்வாக்களும் வந்துபோயும் கூட,பங்களாவின் உட்புறச் சுவர்களுக்கு ஒரு மாற்றுப் பாஷையைக் கேட்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

**விடுதலைகாய்**
**கனக ரவி**
**வவுனியா கலை இலக்கிய**
**நண்பர்கள் வட்ட வெளியீடு**
**விலை: 50**
**ரூபா பக்கம் 48**




30 கவிதைகளைக் கொண்ட தொகுதி வெண்புறா ஒன்றினைஅட்டையில் தாங்கி வெளிவந்திருக்கும் இந்நூலிலுள்ள கவிதைகள் யாவுமே போரின் கொடுமைகளையும், நமது இன்றைய அவலங்களையும், அகதித் துயர்களையும், சமாதான வாழ்வுபற்றியஎதிர்காலநம்பிக்கையையும் சொல்பவை.

"மனிதனின் போர்ச் சுவாலைஎங்களையும் தொட்டுச் சிதறடிப்பதால் நாங்களும் ஆயுதம் ஏந்துவோம்...." என்று ஆயுதம் ஏந்தும் கதையில் மிருகங்கள் சொல்கின்றன.

"மனிதர் மௌனித்துக் கொண்டிருக்க மனித விழுமியங்கள் மண்ணில் புதையும் போரால்...." என்கிறார் "போர" கவிதையில்

"கூனிச் சுருண்டு குறுகிப் படுத்த ஆச்சிபோல வாழ்வு.... தீட்டாகிப் போனவர்க்கு தீமைகள் எப்போ தீரும். தீர்வு எப்போ கிட்டும்?" என்று கேட்கிறது மற்றொரு கவிதை.

"இயந்திரக் குழல்களுக்கு முன் இயக்கமற்றிருப்பதை அர்த்தமற்ற தாக்குவோம் அனைவரும் எழுவீர்.." என்று அறை கூறுகின்றன கனக ரவியின் கவிதைகள்.

**பொது அறிவு**
**ஏ. எல். எம். பளீல்**
**பல்கலைக் கல்வி நிலைய வெளியீடு**
**விலை: 168.50**
**பக்கம்: 200**




சகலவகைப் போட்டிப் பரீட்சைகளுக்குமான பொது அறிவு விடயங்களைக் கொண்ட நூல். பாடக்குறிப்புகள், வழிகாட்டல்கள், வினா விடைகள் போன்றவற்றோடு கூடிய விளக்கங்கள் போன்றன பல்வேறு தலைப்புகளின கீழ் தரப்பட்டுள்ளன. எல்லாப் போட்டிப் பரீட்சைகளுக்கும் பொது அறிவும் ஒரு கேள்வித் தாளாக அமைவதால் பரீட்சார்த்திகள் குறுகிய காலத்தில் தயாராவதற்கு உகந்த நூல்.

பொது அறிவு பரீட்சைக்குப் பயிலும் மாணவர்களுக்கு மட்டு மல்ல யாவருக்குமே அவசியமானது. மாறிவரும் உலகத்தின் தேவைகளையும் புதிது புதிதாக உருவாகிவரும் நவீன கண்டு பிடிப்புகளையும் புதிய எண்ணக்கருக்களையும் அறிந்து எமது அறிவுத் தளத்தை சமகால உலகமட்டத்தோடு பேண வேண்டியது அவசியமானது. அத்தகைய விடயங்களைத் தாங்கிய அறிவு நூல்கள் தமிழில் வெளிவருவது இலங்கையில் அரிதாகவே உள்ளது. இது ஏற்படுத்தப் போகும் பின்னடைவு பாரதூரமானது.

இந் நிலையில் பரீட்சை சார்ந்ததாக இருந்தாலும் 'பொது அறிவு' போன்ற நூல்களின் வருகை ஊக்கமளிக்கப்பட வேண்டியது.

**சீறி வந்த சூறாவளி 78**
**செழியன் ஜே. பேரின்பநாயகம்**
**மக்கள் கலை இலக்கிய ஒன்றிய வெளியீடு**
**18∴13, பூரணவத்தை, கண்டி.**
**விலை: 75 ரூபா பக்கம் 50**

"வாழ்க்கை என்பது வெறுமனே வாழ்வதற்கல்ல - கொண்டாடுவதற்கு" என்பார் ஓஷோ. திடுக்கிட்டு நிலைகுலைந்து போகும்படியான எத்தனையோ சம்பவங்களை இந்த வாழ்க்கை தந்து கொண்டிருந்தாலும், அவற்றினுள்ளும் தலை நிமிர்த்தி எங்களை மேன்மைபடுத்திக் கொள்ளுதல்தான் நமது பெரு முயற்சியாகிறது. 1978 நவம்பரில் கிழக்கில் சீறிய சூறாவளி, பதித்து விட்டுச் சென்ற கோரச் சுவடுகளை மீட்டுப் பார்த்திருக்கும் செழியன் ஜே. பேரின்பநாயகம் அவர்கள், தனது நூலின் நிறைவில் எழுதுகிறார்: "பழைய நினைவுகள் மக்கி மடியட்டும். நான் வாழ்வதற்காகவே இந்த பேராபத்திலிருந்து தப்பித்திருக்கிறேன்..."

பௌதீக பொருட்களை மாத்திரமன்றி, மனித மனங்களையே அடித்து வீழ்த்திச் சின்னாப்பின்னப்படுத்திவிட்டுச் சென்ற அந்தச் சூறாவளியின் முடிவில், இயற்கையை வெற்றிகொள்ளுதலும், மீண்டும் மிடுக்கோடு வாழ்வைத் தொடருதலும் மனிதர் இயல்பென்பதை எழுதிச் சொல்கிறார் ஆசிரியர்.

பத்திரிகையுலக அனுபவமும் எழுத்து நடையும் கைவரப் பெற்ற ஆசிரியர், தகவல்களையும் சூறாவளிக்குள் சிக்கிய மனிதர்களின் அவஸ்தைகளையும் உணர்ச்சிகரமாக வெளிப்படுத்தியிருக்கிறார். நடந்த அனர்த்தங்களுக்கெல்லாம் தானும் ஒரு சாட்சியாக நின்று, பட்ட அவலங்களைப் பதிவு செய்திருக்கிறார். உதாரணத்திற்கு நூலிலிருந்து ஒரு பகுதி.

"வெள்ளம் அலை என்ற வேகம் பாய்ச்சி விரைந்துவருகிறது. வாவிக்கும்வயலுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. வெள்ளநீர் எங்களைத் துரத்தி வருகிறது. ஓடுவது எங்கே? பிதற்றிக் கொண்டுநிற்கத்தான் இடமா? காடு மேடெல்லாம் அள்ளிக் கொண்டு வருகிறது வெள்ளம். மழை அன்றிரவு பெய்திருக்காது போனால் தீப் பற்றியிருக்குமென்று சொன்னார்கள். பாலையடி வட்டை, கல்லோயாக் குடியேற்றப் பகுதிக் கிராமங்களிலிருந்து உயிர் பிழைத்து வந்தவர்களும் என்னோடு சேர்ந்து கொண்டார்கள்.



மகா ஓயா போன்ற தூர இடங்களில் தீ மூண்டதாகவும் ரவீந்திரன் சொன்னார். நிகழ்ந்திருக்கலாம் - காரணம், அன்று பெய்த பெரு மழைத் துளிகள் உடலில் பட்டுத் தெறித்ததும் - சுட்டெரிக்கும் அகோரம் இருந்தது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிமீது வெற்றிவந்து உன்னைச் சேரும் அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் என்னைச் சேரும்



ஹற்றன் நஷனல்

## பத்தும் விமன '99

வாரம் ஒவ்வொரு வேலை நாளும் ரூபாய் 10,000/- பரிசு.







பத்தும் விமன வட்டி வீதம்

| | கணனியுள்ள கிளைகள் | கணனியற்ற கிளைகள் |
|---|---|---|
| வருடாந்த வட்டி | 9% | 9% |
| வட்டிக் கணிப்பீடு | நாளாந்த மிகுதிக்கு | மாதத்தின் அதிகுறைந்த மிகுதிக்கு |
| வட்டி வழங்கற காலம் | மாதாந்தம் | வருடாந்தம் |
| வருடாந்த வீதம் | 8.35% | 9% |

வெற்றியே நிச்சயமான ஆட்டம். 'காசியே வாசிய' நாளாந்தச் சீட்டிழுப்பு. வருடம் முழுவதும் வாரத்தின் ஒவ்வொரு வேலை நாளிலும் வெல்லக்கூடிய ரூபாய் 10,000/- கொண்ட பணப்பரிசு. முன்னர் என்றுமே கண்டிராத வாய்ப்பு.

**மாபெரும் சீட்டிழுப்புக்கள்:** 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு ஆடம்பர வீடு, ரூபாய் 25 இலட்சத்திற்குமதிக பெறுமதியான ஒரு S40 வொல்வோ கார், ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான 5 வெளிநாட்டுப் பயணங்கள் என்பன ஒவ்வொரு மாபெரும் சீட்டிழுப்பிலும் பரிசாகக் கிடைக்கும்.

**விஷேட கார் சீட்டிழுப்புக்கள்:** இரு மாதத்திறகொரு முறை வெல்லக்கூடிய 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு ஆடம்பர சுசுகி வெலினோ கார் ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் பரிசு.

**கிளை ரீதியிலான காலாண்டுச் சீட்டிழுப்புக்கள்:** ஒவ்வொரு கிளையிலும் காலாண்டிற்கு ஒரு முறை வெல்லக்கூடிய ரூ. 10,000/- கொண்ட 6 பணப் பரிசுகள்.

இவற்றை வெல்ல உங்கள் தகுதியை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். தகுதிபெற, ஆகக்குறைந்த மிகுதியாக ரூபாய் 10,000/- உங்கள் சேமிப்புக் கணக்கில் அன்றேல் ரூபாய் 5,000/- நடைமுறைக் கணக்கில அல்லது ரூபாய் 10,000/- சில்வர் லைன் கணக்கில் வைப்பிலிருக்க வேண்டும். மறவாதீர்கள்! ஆகக்குறைநத வைப்புத் தொகையின் மடங்குகளும் அவற்றைக் கணக்கில் வைத்திருககும் கால அதிகரிப்பும் பரிசில்களை வெல்வதற்கு மேலதிக வாய்ப்புக்களை உங்களுக்கு வழங்கும்.

ஹற்றன் நஷனல் பத்தும விமன '99 நீங்கள் வாழ விரும்பும் வாழ்வை உங்களுக்கு வழங்க வல்லது.

*மேலதிக விபரங்களை எந்தக் கிளையிலும் பெறலாம்*

**ஹற்றன் நஷனல் வங்கி**
*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

ஹற்றன் நஷனல் **பத்தும் விமன '99** வளமான வாழ்வின் வழி




ரூபாய் 470 இலட்சத்துக்கும் அதிக பரிசுகள்

SOMA AMARAWANSA ASSOCIATES (PVT) LTD.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு சேமிப்புக் கணக்கின் மூலம் பெறுமதியான ஏராளம் பரிசுகளை வெல்ல இப்பொழுது அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**
10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**
100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**
10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்



ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று ஆகக்குறைந்த கணக்கு மீதியாக 3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும் ரண்கெகுளு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

**ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.**

இலங்கை வங்கி
Bank of Ceylon
புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளிவிளக்கு

FIRST & FORWARD


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org